
கோகுலம்

GOKULAM

ஜனவரி '87 ரூ 2





விவேகானந்தர்

தோற்றம் : 12-1-1863 மறைவு : 4-7-1902




உயிர்களிடத்தில் அன்பு வேணும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்

— பாரதியார்

கோகுலம்

1987 ஜனவரி மாத இதழ்
மலர் 4 இதழ் 12
தனிப்பிரதி ரூ. 2/—
ஆண்டுச் சந்தா ரூ. 24/—
கௌரவ ஆசிரியர்:
அழ. வள்ளியப்பா



புகைப்படம்: எம். நடராஜன்

அருமைச் சிறுவர் சிறுமியரே,

பொங்கல் திருநாள் நெருங்கி வருகிறது.

பொங்கல் திருநாளில் பிறந்தவர்தான் சுவாமி விவேகானந்தர்.

விவேகானந்தர் சிறுவராக இருந்த போது அவருடைய நண்பன் ஒருவனின் வீட்டிற்கு அடிக்கடி செல்வார். அந்த வீட்டுத் தோட்டத்திலுள்ள செண்பக மரத்தில் ஏறி இருவரும் விளையாடுவார்கள். விவேகானந்தர் அந்த மரத்தில் ஏறிக் கிளைக்குக் கிளை தாவுவார். கால்களைக் கிளையில் மாட்டிவிட்டுத் தலைகீழாகத் தொங்குவார். மேலிருந்து 'தொப்'பென்று கீழே குதிப்பார்.

அந்த வீட்டிலிருந்த ஒரு கிழவருக்கு இந்தக் குறும்புகள் பிடிக்கவில்லை. அதனால் அவர், ''டேய் பசங்களா, அந்த மரத்தில் பிரம்ம ராட்சசன் இருக்கிறான். அவன் உங்கள் கழுத்தை முறித்துக் கொன்று விடுவான். ஜாக்கிரதை! இனிமேல் அந்த மரத்தில் ஏறாதீர்கள்'' என்று கூறிப் பயமுறுத்தினார்.

விவேகானந்தர் மறுநாள் வந்து அந்த மரத்தில் ஏறப் போகும்போது அவருடைய நண்பன் தடுத்தான். ''தாத்தா சொன்னாரே, மறந்து விட்டாயா?'' என்று கேட்டான்.

''போடா பயந்தாங்கொள்ளி, இத்தனை நாட்களாக நாம் இந்த மரத்தில்தானே விளையாடினோம். தாத்தா சொல்வது உண்மையாக இருந்தால், நம் கழுத்தெல்லாம் எப்போதோ முறிந்து போயிருக்க வேண்டுமே!'' என்று கூறிவிட்டு விறுவிறு என்று அந்தச் செண்பக மரத்தில் ஏறலானார்.


சிறிய வயதிலே துணிச்சல் மிக்கவராகவும் பேய், பிசாசு என்பதெல்லாம் வெறும் கட்டுக் கதை என்ற எண்ணங்கொண்டவராகவும் விவேகானந்தர் விளங்கினார். ஆங்கிலப் புத்தாண்டு பிறக்கப் போகிறது. அதிக தூரத்தில் இல்லை, நம் தமிழர் திருநாளாகிய பொங்கல் திருநாளும். உங்கள் அனைவருக்கும் கோகுலத்தின் புத்தாண்டு வாழ்த்து; பொங்கல் வாழ்த்து!

— அழ. வள்ளியப்பா

சித்திரப் புதிர் 17

ஆழி

1 இவர், தொலைக்காட்சியில் தோன்றுவது பொருத்தம் தான். தொலைக்காட்சிக்கும் இவருக்கும் என்ன பொருத்தம்?






2 இந்தக் கழுகு எந்த நாட்டின் தேசியப் பறவை?

Я ЧИТА-Ю

3 இது என்ன மொழி?



4 அமெரிக்க ஓவியர் 'வால்ட் டிஸ்னி' படைத்த இந்த உருவத்தின் பெயர் என்ன?




5 இது எந்நாட்டு விமானப் போக்குவரத்தின் சின்னம்?

விடை வேறுபக்கம்

இந்த இதழ் எழுத்தாளர்கள்



தங்கசிவராசன்



பொன்வண்ணன்

பிருந்தாவனக் கதாசிரியர்



சா. சதீஷ் குமார்

பிருந்தாவனக் கவிஞர்கள்



எல். டி. கே. ராஜா



ந. இரமேஷ் குமார்




ஏ. எஸ். உமா மகேஸ்வரி



பி. முத்துவைரம்

வண்ண அட்டைப்படம்: யோகா



மின்மினிக் கதைகள்



கூப்பிடு தூரம்

அன்று அரசர் பிறந்தநாள். அரண்மனையில் ஒரே கோலாகலம். நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் பண்டிதர்கள் அரசருக்கு வாழ்த்துக் கூற வந்திருந்தார்கள்.

எல்லாரும் வயிறார அறுசுவை உணவு உண்டார்கள். பிறகு, அரச சபை கூடியது. அரசர் ஒவ்வொரு பண்டிதராக அழைத்து, அவர்கள் எங்கிருந்து வருகிறார்கள் என்பதைக் கேட்டுச் சன்மானம் வழங்க உத்தரவிட்டார்.

ஒரு பண்டிதர், ''நான் செங்கற்பட்டிலிருந்து வருகிறேன்'' என்றார்.

''அமைச்சரே, இங்கிருந்து செங்கற்பட்டு எவ்வளவு தூரம்?'' என்று கேட்டார் அரசர்.

''50 மைல்'' என்றார் அமைச்சர்.

''அப்படியானால் இவருக்கு 50 ரூபாய் சன்மானம் வழங்குங்கள்'' என்று உத்தரவிட்டார் அரசர்.

அடுத்து வந்த பண்டிதர், ''நான் விழுப்புரத்திலிருந்து வருகிறேன்'' என்றார். விழுப்புரம் 100 மைல் தூரத்தில் இருப்பதால், அவருக்கு 100 ரூபாய் சன்மானம் வழங்கப்பட்டது.

இப்படியே திருச்சி 200 மைல் தூரத்திலிருப்பதால், திருச்சியிலிருந்து வந்தவருக்கு 200 ரூபாயும், மதுரை 300 மைல் தூரத்திலிருப்பதால், மதுரையிலிருந்து வந்தவருக்கு 300 ரூபாயும், திருநெல்வேலி 400 மைல் தூரத்திலிருப்பதால், திருநெல்வேலியிலிருந்து வந்தவருக்கு 400 ரூபாயும் கொடுத்தார்கள்.

இவ்வளவையும் பார்த்துக் கொண்டிருந்த பேராசை பிடித்த ஒரு பண்டிதர், ''மகாராஜா, நான் வைகுண்டத்திலிருந்து வருகிறேன்'' என்றார்.

''என்ன! வைகுண்டமா! அது எங்கே இருக்கிறது?'' என்று கேட்டார் அரசர்.

''சாட்சாத் விஷ்ணு பகவான் இருக்கிறாரே, அந்த வைகுண்டம் தான்'' என்றார் பண்டிதர்.

'பூமியிலிருந்து லட்சக்கணக்கான மைல் தூரத்தில் வைகுண்டம் இருக்கிறது. அதனால், தனக்கு நிறைய நிறையப் பணம் கிடைக்கும் என்ற பேராசையால்தான் அவர் அப்படிக் கூறினார்.

உடனே அரசர், ''அமைச்சரே, வைகுண்டம் எவ்வளவு தூரத்தில் இருக்கிறது?'' என்று கேட்டார்.

''அரசே, கஜேந்திரன் என்ற யானையின் காலை முதலை பிடித்துக் கொண்டதும், அது 'ஆதிமூலமே' என்று விஷ்ணுவை அழைத்தது. யானையின் குரல் விஷ்ணுவின் காதில் விழுந்ததும், உடனே அவர் வைகுண்டத்திலிருந்து புறப்பட்டு வந்து முதலையைக் கொன்று யானையைக் காப்பாற்றினார். யானை கூப்பிட்டதும் அதன் குரல் விஷ்ணுவின் காதில் விழுந்ததால், வைகுண்டம் கூப்பிடு தூரத்தில்தான் இருக்கிறது'' என்றார் அமைச்சர்.

''அப்படியானால், இவருக்கு ஒரு ரூபாய் கொடுத்து அனுப்புங்கள்'' என்றார் அரசர்.

பேராசை பிடித்த பண்டிதரின் முகத்தை அப்போது பார்க்க வேண்டுமே!

உலக்கைப் பூஜை

அந்த வீட்டுக்காரர் மிகவும் நல்லவர். கருணை உள்ளம் கொண்டவர். ஆனால், அவர் மனைவியோ அவருக்கு நேர் எதிரானவள்.

ஒருநாள் ஒரு பெரியவர், அந்த வீட்டுக்கு வந்தார். ''மிகவும் பசியாயிருக்கிறது. ஏதாவது ஆகாரம் கிடைக்குமா?'' என்று கேட்டார்.

அவரைப் பார்த்தால், மிகவும் பரிதாபமாக இருந்தது. உடனே வீட்டுக்காரர், ''ஐயா, உள்ளே வாருங்கள். இப்படி உட்காருங்கள். சமையல் ஆனதும் வயிறாரச் சாப்பிட்டுச் செல்லலாம்'' என்று கூறி அவரை உள்ளே அழைத்து வந்து உட்கார வைத்தார்.

பிறகு, சமையல் அறைக்குள் சென்று, மனைவியிடம், விஷயத்தைச் சொன்னார். ''வேறு வேலை இல்லை. வழிப்போக்கனுக்கெல்லாம் வடித்துப் போடுவதுதான் என் வேலையா?'' என்று அவள் முணுமுணுத்தாள்.

''சத்தம் போடாதே! அவரோ வயதானவர். என் சாப்பாட்டை வேண்டுமானாலும், அவருக்குக் கொடு. ஆனால், அவர் பட்டினியாகப் போகக் கூடாது'' என்று கூறிவிட்டு, அந்தப் பெரியவரிடம் வந்தார்.

''ஐயா, நான் பக்கத்திலுள்ள குளத்தில் குளித்துவிட்டு வருகிறேன். அதுவரை பொறுத்திருங்கள்'' என்று கூறிவிட்டு, துண்டை எடுத்துக் கொண்டு புறப்பட்டார்.

கணவர் வெளியே சென்றதும், அந்த மனைவி கூடத்தில் ஓர் உலக்கையைக் கொண்டு வந்து வைத்தாள். அதற்கு விபூதி பூசி, குங்குமம் இட்டு, பூ வைத்து வணங்கினாள். பிறகு அந்தப் பெரியவரைப் பார்த்து, ''ஐயா,



உங்களைப் பார்த்தால், பாவமாயிருக்கிறது. என் வீட்டுக்காரர் இப்படித் தினமும் ஒருவரை அழைத்து வந்து உலக்கைப் பூஜை செய்யும்படி சொல்லுவார். பூஜை முடிந்ததும், அவர் குளித்துவிட்டு வந்து, இந்த உலக்கையாலே வந்தவருக்குப் பூசை தொடுப்பார். வயதான நீங்கள் எப்படித்தான் அந்தப் பூசையைத் தாங்கப் போகிறீர்களோ?'' என்றாள்.

இதைக் கேட்டதும், அந்த வயதானவர் திடுக்கிட்டு எழுந்து ஓட்டம் பிடித்தார். குளித்துவிட்டு வந்த கணவர், ''எங்கே அந்தப் பெரியவர்?'' என்று கேட்டார்.

''அவருக்கு இந்த உலக்கை வேணுமாம். கேட்டார். தர முடியாது என்றேன். கோபித்துக் கொண்டு போய்விட்டார்.''

''அடிப்பாவி, உலக்கையைக் கொடுத்தால் என்ன? சாப்பிடு முன்பே அவரைத் துரத்தி விட்டாயே!'' என்று கூறிவிட்டு, கையில் 'உலக்கையை எடுத்துக் கொண்டு அவர் சென்ற பக்கமாக ஓடினார். உலக்கையுடன் வீட்டுக்காரர் வருவதைத் திரும்பிப் பார்த்துத் தெரிந்து கொண்ட பெரியவர், ''ஐயோ! உலக்கையைத் தூக்கிக் கொண்டு அடிக்க வருகிறானே!'' என்று நினைத்து மேலும் வேகமாக ஓட ஆரம்பித்தார்.

வீட்டுக்காரர் வெகுதூரம் ஓடியும் அவரைப் பிடிக்க முடியவில்லை. அயர்ந்து போய் வருத்தத்துடன் திரும்பி வந்தார். வந்த ஆத்திரத்தில் அந்த உலக்கையாலேயே மனைவிக்குச் சரியாகப் பூசை கொடுத்தார்!

பாட்டியின் தந்திரம்



ஊர்க் கோடியில் ஒரு கிழவியின் வீடு இருந்தது. பலகாரம் செய்து வழிப் போக்கர்களுக்கு விற்று, அவள் நிறையக் காசு சேர்த்து வைத்திருந்தாள்.

இதை அறிந்த சுப்பன், குப்பன் என்ற இருவரும் கூட்டாகச் சேர்ந்து, அந்தப் பாட்டியின் பணத்தைக் கொள்ளையடிக்க நினைத்தார்கள்.

பாட்டியிடம் வந்து, ''பாட்டி, பாட்டி, நாங்கள் பக்கத்துக் காட்டிலே முயல் பிடிக்க வந்திருக்கிறோம். இரண்டு நாள் இங்கே தங்கிக்கிறோம். சாப்பாடு போடு. பணம் தருகிறோம்'' என்றார்கள். பாட்டியும் 'சரி' என்றாள்.

அன்று இரவு சுப்பனும் குப்பனும் வெளிப்பக்கமாக உட்கார்ந்து மெதுவாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். ''பாட்டி மூலையிலே வைத்திருக்கிறாளே பெரிய பெட்டி, அதில்தான் நிறையப் பணம் வைத்திருக்கிறாள். எப்படியாவது அந்தப் பெட்டியை நாளை இரவு நாம் கடத்திக் கொண்டு போய் விடவேண்டும்'' என்று பேசிக் கொண்டார்கள். பாட்டி அவர்கள் பேசியதை அவர்களுக்குத் தெரியாமல் ஒட்டுக் கேட்டுவிட்டாள்.

மறுநாள், அவர்கள் இருவரும் வெளியே சென்றிருந்த சமயம் பார்த்து, பெட்டியிலிருந்த பணத்தையெல்லாம் பாட்டி எடுத்தாள். ஒரு பெரிய பானைக்குள் வைத்தாள். வீட்டின் பின்புறமுள்ள தென்னை மரத்தடியில் குழி

இருக்கிறதாம் சொந்த ஊர். பெயர் சொல்லத் தெரியவில்லை. ரயிலில் வந்திருக்கிறான். பயணிகளிடம், கடைக்காரர்களிடம் காசு, பழம், உணவு எது கிடைத்தாலும் வாங்கியிருக்கிறான். கொஞ்ச நாட்களாய் அந்த நகரத்தில் சுற்றி வருகிறான்.. கடைசியாக ஃபாதர் கண்ணில் பட்டிருக்கிறான்.

ஃபாதர் அவனைத் தம்மோடு தம் வீட்டுக்கு அழைத்துச் சென்றார். சாப்பாடு கொடுத்தார். உடைகள் கொடுத்தார். சிறுவர் இல்லத்தில் சேர்த்துக் கொண்டார். பொதுவாகச் சிறுவர் இல்லத்தில் அனாதைகள் என்று சிலராவது இருப்பார்கள். அந்தச் சிறுவர் இல்லத்தில் அவன்தான் அந்த வருடத்தில் ஒரே அனாதை மாணவன்!

புனிதவண்ணன் நன்கு படித்தான். ஃபாதர் ரபேலுக்கு மிகவும் சந்தோஷம். அவனுக்குத் தேவையானவை அனைத்தும் வாங்கிக் கொடுத்தார். ஓர் அனாதை என்ற உணர்வு அவனுக்கு வரக் கூடாது என்பதில் மிகவும் கவனமாக இருந்தார்.

ஆனால், புனிதவண்ணனின் படிப்பும், அவனது குரல் இனிமையும், ஃபாதர் அவனுக்குத் தரும் சலுகைகளும் சில மாணவர்களுக்குப் பொறாமை உணர்வை ஏற்படுத்தின. ஆனால், சிறுவர்கள்தானே! உள்ளத்தில் அவனை வெறுத்தாலும் உதட்டளவில் நன்றாகப் பேசிப் பழகினர்.

புனிதவண்ணன் ஆறாம் வகுப்பிற்கு வந்தான். வளர்ந்த சில சிறுவர்கள், புனிதவண்ணனிடம் பொறாமை கொண்ட மாணவர்கள் அவனுக்குத் தொல்லை கொடுத்தனர், பல வழிகளில். எல்லா இடங்களிலும் அவனை ஒதுக்கி வந்தனர். கடைசி இடம்தான் அவனுக்கு. விளையாட்டா, சாப்பாடா, பொழுதுபோக்கா அனைத்திலும் அவன் பின்தள்ளப்பட்டான். புனிதவண்ணன் மேல் இரக்கப்பட்டவர்களும் உண்டு. ஆனால், அவன் மேல் பொறாமை கொண்ட முரட்டு மாணவர்களுக்கு அஞ்சி அந்த இரக்க உணர்வை வெளிப்படுத்தாமல் இருந்தனர்.

புனிதவண்ணனின் எதிரிகள் படிப்பில் அவனை மிஞ்ச முடியாது. ஃபாத



றது. அதிலிருந்து இறங்கினார் புனித வண்ணன். சிறுவர்கள் கரகோஷத்துடன் வரவேற்றனர். ஃபாதர் அந்தோனி குருஸ் புனிதவண்ணனைக் கைகுலுக்கி வரவேற்றார். ஒரு சிறுவன் ரோஜாப்பூ மாலையிட அதைக் குனிந்து ஏற்றுக் கொண்டார். நேராக மேடையை நோக்கி நடந்தார்கள்...

இறை வணக்கம், வரவேற்புரை, ஆண்டறிக்கை எல்லாம் முடிந்த பிறகு கலைநிகழ்ச்சிகள் நடந்தன. கடைசியாகப் புனிதவண்ணனைப் பேச அழைத்தார்கள்...

அருட்தந்தை அந்தோனி குருஸ் அவர்களே, சிறுவர் இல்ல மேலாளர்களே, விழாவிற்கு வருகை தந்துள்ள பெரியோர்களே... மற்றும் சிறுவர் இல்ல மாணவர்களே! எல்லோருக்கும் எனது வணக்கம். முன்னாள் மாணவன் என்ற முறையில் என்னை இந்த விழாவிற்கு அழைத்திருப்பது எனக்குப் பெருமை தரும் விஷயம். ஓர் அனாதையாக, பெற்றோரை இழந்து உறவினர்களின் ஆதரவின்றி நான் தவித்துக் கொண்டிருந்த போது, ஃபாதர் ரபேல் அவர்கள் என்னை இச்சிறுவர் இல்லத்தில் சேர்த்துக் கொண்டார்கள். நான் நன்றாகப் படித்தேன். எனக்குள்ளிருந்த இசைத் திறமையைக் கண்டுபிடித்து ஃபாதர் ரபேல் தான் என்னை சர்ச் இசைக் குழுவில் சேர்த்து விட்டார். அங்குதான் எனது திறமை எல்லோருக்கும் தெரியலாயிற்று... ஆனால், ஓர் அனாதை என்ற காரணத்துக்காக நான் பட்ட துன்பங்களை இப்போது நினைத்தாலும் எனக்குக் கஷ்டமாக இருக்கிறது.''

புனிதவண்ணன் பேசிக் கொண்டு போக, கேட்டுக் கொண்டிருந்த பலரின் மனக்கண்களுக்கு இருபது வருடங்களுக்கு முற்பட்ட காட்சி தெரிந்தது.

அந்தச் சிறுவன் கிழிந்த உடைகளுடன் வாடிய முகத்துடன்; சோர்ந்து போய்க் கோவில் வாசலில் அமர்ந்திருக்கிறான். ஃபாதர் ரபேல் அவனை விசாரிக்கிறார்... ஐந்து வயசுப் பையன்.. 'அப்பா, அம்மா செத்துப் போயிட்டாங்க' என்று சொல்கிறான்.. உறவினர்கள் யாருமில்லையாம். சொந்த ஊர் எது என்று கேட்டால் சொல்லத் தெரியவில்லை. தூ... ரத்தில்

மிகுந்த மதிப்பு வைத்திருந்தார். "சுவாமிஜி, தங்கள் குரலை நான் போனோகிராமில் பதிவு செய்து கொள்ள விரும்புகிறேன். அனுமதிப்பீர்களா?" என்று அவர் கேட்டார். "சரி" என்றார் விவேகானந்தர். அவர் குரலைப் பதிவு செய்த 'ரிகார்டு' ஒலி மங்கிப் போய்ப் பல காலமாகிவிட்டதாகக் கூறுகிறார்கள்.

* விவேகானந்தர் கன்னியாகுமரிக்கு வந்தபோது கடலிலே சிறிது தூரத்தில் இருந்த பாறைக்குச் சென்று அங்கு தியானம் செய்தார். அந்தப் பாறையின் மீது நினைவுச் சின்னமாக அழகிய மண்டபம் ஒன்று எழுப்பப்பட்டிருக்கிறது. இது சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்தது. விவேகானந்தரின் வெண்கலச் சிலை அந்த மண்டபத்தில் கம்பீரமாகக் காட்சி அளிக்கிறது.

* விவேகானந்தரை அமெரிக்காவுக்கு ஏற்றிச் சென்ற கப்பலின் பெயர் 'பெனின்சுலர்'. ஆரஞ்சு நிறத்தில் பட்டு ஜிப்பாவும், அழகான தலைப்பாகையும் அணிந்து இவர் புறப்பட்டார்.

* அமெரிக்காவில் உள்ள சிகாகோவில் நடந்த சர்வ மத மகாசபையில் இவர் கலந்து கொண்டு பேசினார். எல்லாரும், 'சீமாட்டிகளே, சீமான்களே' என்று தொடங்கினார்கள். ஆனால் விவேகானந்தரோ, 'அமெரிக்க சகோதரர்களே, சகோதரிகளே' என்று ஆரம்பித்தவுடனே அனைவரும் பலமாகக் கைதட்டினார்கள்.

* அங்கு பெரும்பாலோர் எழுதி வைத்துப் படித்தார்கள். சிலர் குறிப்புகளை வைத்துக் கொண்டு பேசினார்கள். ஆனால் எவ்விதக் குறிப்பையும் வைத்துக் கொள்ளாமல் இந்து மதத்தின் பெருமையை எடுத்துக் கூறி எல்லாரையும் வியப்பில் ஆழ்த்தினார் விவேகானந்தர். 17 நாட்கள் நடந்த அந்த மாநாட்டில் இவர் பலமுறை பேசி எல்லாருடைய உள்ளத்தையும் கவர்ந்தார்.

* விவேகானந்தர் கையைக் கட்டிக் கொண்டு நிற்பதுபோல இருக்கும் படம் அமெரிக்காவில் எடுக்கப்பட்டதுதான். அவரது படம் அப்போது அமெரிக்காவில் எல்லா இடங்களிலும் காட்சி அளித்தன.

* மகாகவி பாரதியாரைப் போல இவரும் இளம் வயதிலே நம்மை விட்டுப் பிரிந்தார். 39 ஆண்டுகள், 5 மாதங்கள், 24 நாட்களே இவ்வுலகில் வாழ்ந்தார். ஆனால், இந்தியர் அனைவரது உள்ளங்களிலும் என்றும் வாழ்கிறார்.



சார் தபால்!

டாக்டருக்கு நன்றி

* மயிலை சிவமுத்துவின் வாழ்க்கை என் போன்ற வளரும் குழந்தைகளுக்கு நல்ல எடுத்துக்காட்டு.

— கே.எல். ஸ்ரீதேவி,
மேலக்கிருஷ்ணன்புதூர்.

* மயிலை சிவமுத்து அவர்களின் இளமைப் பருவம் அருமை. அவர் இளமையில் அவ்வளவு துன்பப்பட்டபோதிலும், தமிழில் இத்தகைய புலமை பெற்றது பெருமைக்கு உரிய செயல்.

— நா. ஸ்ரீராம் (8002),
வெங்கடாத்ரி அகரம்.

* C.L.T. (சில்ட்ரன்ஸ் லிட்டில் தியேட்டர்) கல்கத்தாக் குழந்தைகளுக்கு மட்டும்தான் வரப்பிரசாதமா? அவர்கள் கொடுத்துவைத்தவர்கள். தமிழ்நாட்டிலும் அதைப் போல நிறுவினால் எவ்வளவு நன்றாயிருக்கும்!

— எம்.எஸ். சுரேஷ் (7005), சென்னை—7

* மந்தமாகக் காது கேட்டுக் கொண்டிருந்த எனக்கு டாக்டர் கணேசனின் கட்டுரையைப் படித்தவுடனே மருத்துவரிடம் செல்ல வேண்டுமென்று தோன்றியது. தக்கசமயத்தில் காண்பித்துப் பயனடைந்தேன். டாக்டர் அவர்களுக்கும், கோகுலத்திற்கும் நன்றி.

— கு. வெ. பாலசுப்பிரமணியம் (11175)
காளிங்கராயன்பாளையம்புதூர்.

* திருபுத்தனேரி சுப்பிரமணியம் அவர்கள் எழுதியுள்ள பண்பை வளர்க்கும் பாலபவனம் கட்டுரையின் மூலம், சிறுவர் இல்லத்தின் பணிகளையும் சிறப்புக்களையும் அறிந்து வியந்தேன். சத்திய வழி, வாய்மை நெறி, பயமின்மை முதலிய விளக்கங்களை மிகவும் அழகாகவும் தெளிவாகவும் அவர் கூறியுள்ளார்.

— பானு அசோக், திருச்சி—1

* அட்டையின் இருபுறமும் பெரியவர்கள் படங்களை வெளியிடுகிறீர்களே, ஃபிரேம் போட்டு வைக்கச் சிரமமாயிருக்கிறது.

— ஆர். இராகுல் (10733)

* 'கைமேல் பலன்' கதை —
'பிறர்க்கு இன்னா முற்பகல் செய்யின்
தமக்கு இன்னா
பிற்பகல் தாமே வரும்' — என்ற குறளுக்கு நல்லதொரு விளக்கம்.

— இரா. கணேசன் (11112)

* குழந்தை நூலகம் ஒவ்வொரு ஊரிலும் இருக்க வேண்டும் என்று எழுதியிருந்தீர்கள். நாங்கள் எங்கள் ஊர்ப் பஞ்சாயத்துத் தலைவரிடம் சென்று கேட்டோம். அவர் 'சரி' என்று கூறி, என்னென்ன நூல்கள் வாங்க வேண்டும் என்பதற்கு ஒரு பட்டியல் தயார் செய்து தரும்படி கேட்டார். நீங்கள் ஒரு பட்டியல் தயார் செய்து தந்தால் நல்லது.

— டி. செல்லக் கண்ணன் மற்றும் வீரவநல்லூர் கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர்கள்.

(பட்டியலை விரைவில் அனுப்பி வைக்கிறோம்.)
— ஆசிரியர்

* இருமொழிகளில் பழமொழிகள் மிகவும் பயனுள்ளது. தொடர்ந்து வெளியிடுவீர்களா?

— கே. சுந்தரம், கூத்தநல்லூர்

* 'ராஜாஜியின் வாழ்விலே' கட்டுரையைப் படித்தபோது இதுவரை தெரியாத பல உண்மைகளைத் தெரிந்து கொண்டேன். இது போல் பயனுள்ள செய்திகளைத் தொடர்ந்து வெளியிட வேண்டுகிறேன்.

— க. சிவமணி, மேலூர்.

* சித்திரப் புதிர் 16ல் 卐 ஸ்வஸ்திக் படம் போட்டு 'இது எந்த மதத்தின் சின்னம்' என்று கேட்கப்பட்டிருந்தது. அதற்கு 'புத்த மதம்' என்று விடையும் தரப்பட்டது. அது புத்த மதத்தின் சின்னம் அன்று. சமணர்களின் (ஜைன மதத்தினரின்) சின்னம். ஆதாரம்: மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள் எழுதிய 'சமணமும் தமிழும்'.

— விமலா சக்ரவர்த்தி, வேலூர்

* 'புதையல் வீடு' தொடர்கதை திகிலும், மர்மமுமாகச் செல்கிறது. 'சகுந்தலை', 'பிருந்தாவனம்' இளம் உள்ளங்களுக்கு மகிழ்ச்சி தருகின்றன. கோகுலம் ஒரு 'கலைக் களஞ்சியம்.'

— இரா. குமரேசன் (15436),
வீரவநல்லூர்

* 'சகுந்தலை' வண்ணப் படக்கதையை சுருக்கமாகவும் தெளிவாகவும் விளக்கிய ஆனந்திக்கும், விளக்கமாகப் படங்கள் போட்ட ஓவியர் வினுவுக்கும் நாங்கள் எங்கள் நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம்.

— சி. எல். சரவணன் (706), மதுரை—1



என் குழந்தைப் பருவம்

M.O.H. பாரூக் மரைக்காயர்
(புதுவை முதலமைச்சர்)

புதுவை மாநிலத்தின் மாண்புமிகு முதலமைச்சராகத் திகழ்பவர் எம்.ஓ.எச். பாரூக் மரைக்காயர் அவர்கள்.

இதற்கு முன்பு இருமுறை முதல்வராகவும், மூன்று முறை புதுவை சட்டமன்ற சபாநாயகராகவும் இருந்திருக்கிறார். ரஷ்யாவில் நடைபெற்ற சபாநாயகர் மாநாட்டில், இந்தியாவின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டு, அங்கு சபாநாயகர்களுள் 'முதல் தகுதி உடையவர்' என்ற சான்றிதழ் பெற்றவர்.

முதல் முறை இவர் புதுவை மாநில முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றபோது, இவருக்கு வயது 35 தான்! (இப்போது வயது 50) அக்காலத்தில் இந்தியாவிலேயே இளம் வயதில் முதல்வரானவர் இவர்தான் என்று போற்றப்பட்டார். கட்சி வேறுபாடின்றி எல்லோருடனும் இனிமையாகப் பழகக் கூடியவர்.

மூன்றாவது உலகத் தமிழ் மாநாடு பாரிசில் நடைபெற ஏற்பாடு செய்து, அதன் வெற்றிக்குப் பெரிதும் உழைத்தவர்.

புதுவையில் மத்திய பல்கலைக் கழகம் ஏற்படக் காரணமாயிருந்தவர்.

தமிழ், ஆங்கிலம், பிரெஞ்சு ஆகிய மும்மொழிகளிலும் நன்கு பேசக் கூடிய இவருக்கு இலக்கியத்தில் மிகுந்த ஈடுபாடு உண்டு. இவரது இலக்கிய ஈடுபாட்டைப் பாராட்டும் வகையில், புதுவை மாநிலத்திலுள்ள இலக்கிய அமைப்புகள் சேர்ந்து இவருக்கு 'இலக்கியக் காவலர்' என்ற பட்டம் வழங்கியுள்ளன.

பாவேந்தர் பாரதிதாசனாரின் வீட்டை அரசுடைமையாக்கி அதை இன்று நல்லதொரு நூலகமாக விளங்கச் செய்தவர். புதுவைக் கம்பன் கழகப் புரவலராகவும் விளங்குபவர்.

வங்கக் கடலோரத்தில், வரலாற்றுச் சிறப்பு மிக்க ஊர்களுள் ஒன்றாகத் திகழும் காரைக்கால்தான் நான் பிறந்த ஊர். 'மாட மலி காரைக்கால்' என்றும், 'வங்க மலி கடல் சூழ் காரைக்கால்' என்றும் சேக்கிழார் பெரிய புராணத்தில் எங்கள் ஊரைப் பாராட்டியுள்ளார்.

அறுபத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவரும், சைவ இலக்கியத் தோற்றத்துக்குக் காரணமாய் இருந்தவருமான காரைக்காலம்மையார் எங்கள் ஊரில் தான் பிறந்தவர். அதுமட்டுமின்றி, இஸ்லாமிய நெறியைப் பரப்புவதற்காக ரஷ்யாவிலிருந்து இந்தியாவுக்கு வந்த ஹலரத்து செயயிதினா ஹாஜி ஷாஹ் அலி இமாம் திவான் மஸ்தான் செய்யிது தாவூது புகாரி வலியுல்லாஹ் அவர்களின் திருச்சமாதியும் காரைக்காலில்தான் இருக்கின்றது.

ஆங்கிலேயர்களின் ஆட்சிக்கு இந்தியா அடிமைப்பட்டுக் கிடந்த



போது, எங்கள் ஊராகிய காரைக்கால் பிரெஞ்சுக்காரர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. காரைக்காலை ஒரு 'புனித யாத்திரை மையம்' என்று சொல்லலாம். திருநள்ளாறு, திருக்கடையூர், நாகூர், வேளாங்கண்ணி போன்ற எல்லாச் சமயத் திருத்தலங்களும் காரைக்காலைச் சுற்றியே அமைந்துள்ளன.

தமிழகத்தின் நெற்களஞ்சியம் தஞ்சாவூர் என்றால், தஞ்சையின் நெற்களஞ்சியம் காரைக்கால்தான்! அவ்வளவு வளமான பூமி!

இயற்கை வளமும், பண்பாட்டுச் சிறப்பும் மிக்க காரைக்காலில் பாரம்பர்யம் மிக்க ஒரு குடும்பத்தில் 1937 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 6 ஆம் தேதி நான் பிறந்தேன். இப்போது எனக்கு ஐம்பது வயது நடக்கின்றது.



ஆம்! இது என் பொன்விழா ஆண்டு.

என் தந்தையார் M.O. ஹசன் குத்தூஸ் மரைக்காயர். தாயார் செய்யது சுல்தான் பீவி ஆவார். என் பெற்றோருக்கு ஐந்து குழந்தைகள்! நான் இரண்டாவது குழந்தையாகப் பிறந்தேன்.

உதுமான், என்னுடைய அண்ணன் ஆவார். இக்பால், அஸ்லம் இருவரும் என்னுடைய தம்பியர்! எங்களுக்கு ஒரே ஒரு தங்கை உண்டு. அவரது பெயர் நஜீமுன்னிசா.

என் தாய் வழிக் குடும்பம், தந்தை வழிக் குடும்பம் இரண்டுமே எங்கள் பகுதியில் பாரம்பரியமும் கௌரவமும் மிக்க வசதியான குடும்பங்கள் ஆகும். என் பாட்டியாரின் தகப்பனுருக்கு நாகப்பட்டினத்தில் 120 கப்பல்கள் சொந்தமாக இருந்தனவாம்.

என் பாட்டனாரின் தந்தை ஒரு வானவியல் நிபுணர் ஆவார். அவர் காக்கிநாடாவில் பண்டமாற்று வியாபாரம் புரிந்து வந்தார். ஒருமுறை அவர் வானத்திலுள்ள நட்சத்திரங்களைப் பார்த்து இன்னும் 18 நாட்களில் புயல் வீசப் போவதாகவும், அதனால் காக்கிநாடா துறைமுகம் பாதிக்கப்படும் என்றும் கணித்துச் சொன்னாராம். தமக்குச் சொந்தமான கப்பல்களைக் காக்கிநாடாவிலிருந்து சென்னைக்குக் கொண்டுபோகத்துறைமுக அதிகாரியிடம் அனுமதி கேட்டாராம். துறைமுக அதிகாரி அனுமதி கொடுத்தாலும், என் பாட்டனாரின் தந்தை கூறிய கணிப்பை நம்பவில்லை.

ஆனால் என் பாட்டனார் சொன்ன அதே நாள், அதே நேரத்தில் புயல் வீசி, காக்கிநாடா துறைமுகத்திலிருந்த 22 கப்பல்கள் மூழ்கிப் போயிற்றாம். ஓர் இந்தியரின் வான வியற் புலமையைக் கண்டு வியந்து என் பாட்டனாரைப் பாராட்டி இங்கிலாந்திலிருந்து ஒரு நற்சான்றிதழ் கொடுத்தார்களாம். அந்தச் சான்றிதழை வெள்ளிப் பேழையில் வைத்து இன்னும் நாங்கள் பாதுகாத்து வருகிறோம்.

மேலும் என் முன்னோர் தரும சிந்தனை படைத்தவர்கள். தமக்குச் சொந்தமான நாற்பது வேலி நிலத்தை என் பாட்டனார் தருமத்துக்காக எழுதிக்

கொடுத்துவிட்டார்கள். பல தரும் சத்திரங்களை அவர்கள் கட்டிக்கொடுத் திருக்கிறார்கள். நாகூரிலுள்ள தெருப் பள்ளி வாசலைக் கட்டித் தந்தவர் களும் அவர்களே!

இப்படிப் பாரம்பர்யமும் தரும சிந்தனையும், கௌரவமும், அறிவாற்ற லும் வசதியும் மிக்க ஒரு குடும்பத்தில் பிறந்ததை நான் என் வாழ்க்கையின் பெரும் பேறாகக் கருதுகிறேன்.

காரைக்காலிலுள்ள முஸ்லிம் வித்தியா சங்க **(Muslim Educational Society)** உயர்நிலைப் பள்ளியில் ஆறாவது வகுப்பு வரை நான் படித் தேன். தற்போது இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தமிழ்நாட்டுத் தலைவராகத் திகழ்பவரும், திருவல்லிக் கேணி சட்ட மன்ற உறுப்பினருமாகிய அப்துல் சமது, என் மாமா தாவூத் ஷா ஆகிய இருவருந்தான் என்னைப் பள்ளிக்கூடத்தில் கொண்டு போய்ச் சேர்த்தார்கள். ஏழாம் வகுப்பு முதல் மெட்ரிகுலேஷன் வரை காரைக்காலி லுள்ள தூய மரியன்னை உயர்நிலைப் பள்ளியில் **(St. Mary's High School)** படித்தேன்.

நானும், என் அண்ணன் உதுமா னும்ஒரே வகுப்பில்தான் சேர்ந்துபடித் தோம். என் அண்ணன் இரவெல்லாம் கண்விழித்து, அதிக நேரம் படிப்பார். ஆனால் நான் கொஞ்ச நேரமே படிப் பேன் என்றாலும்,எனக்குத்தான் முதல் மதிப்பெண் கிடைக்கும். எனக்கு கிர கிக்கும் சக்தி கொஞ்சம் அதிகம். ஒரு முறை படித்தாலும் என் மனத்தில் பதிந்துவிடும்.

என் தந்தையார் ஹசன் குத்தூஸ் மரைக்காயர் மிகவும் கண்டிப்பான வர். காலையில் நான்கு மணிக்கே எழுந்து, தொழுகைக்குப் போக வேண்டுமென்று அவர் வற்புறுத்து வார். என்னால் காலையில் எழுந்திருக் கவே முடியாது. எனவே காய்ச்சல், வயிற்று வலி என்று ஏதாவது பொய்க் காரணம் சொல்லிவிட்டு நான் தூங்கி விடுவேன். இரவிலே எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் என்னால் விழித்துக் கொண்டிருக்க முடியும். இப்போ தும் என்னால் காலையில் விரை வாக எழுந்திருக்க முடியவில்லை.

வசதி மிக்க குடும்பத்தில் பிறந்



திருந்தாலும், என் பெற்றோர் சிறு வயதில் அதிகமாகக் காசு கொடுத்துப் பழக்கவில்லை. மாதத்துக்கு 5 அணா மட்டும் செலவுக்காக என் பாட்டியார் கொடுப்பார். அது எனக்கு அப்போது பெருந் தொகையாக இருந்தது. என் தந்தையாரிடம் நான் காசு கேட்ட தில்லை. எது வேண்டுமென்றாலும் அம்மாவிடந்தான் கேட்பது வழக்கம்!

சிறு வயதில் எங்கு சென்றாலும் என் தாயார் என்னைத்தான் உடன் அழைத்துச் செல்வார். அப்போதே சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை எல்லாரிடமும் நான் நெருங்கிப் பழகுவேன்.

நானும், என் அண்ணன் உதுமா னும் இரட்டைப் பிள்ளைகள் போல் வளர்ந்தோம். எங்களுக்கிடையே அடிக்கடி வாய்ச் சண்டைகள் ஏற்





படும். சிலசமயங்களில் அது அடிதடிச் சண்டையாகவும் முடிவதுண்டு. பெரும்பாலும் நான்தான் அடி வாங்குபவனாக இருப்பேன்.

குழந்தைப் பருவத்தில் விளையாட்டில் எனக்கு மிகுந்த ஈடுபாடு இருந்தது. உயரம் தாண்டுதல் போட்டியில் பலமுறை நான் பரிசு பெற்றுள்ளேன். கைப்பந்தும் நன்றாக விளையாடுவேன்.

சிறு வயதில், சிலம்பம், குத்துச் சண்டை போன்றவற்றையும் நான் கற்றுக் கொண்டேன் என்றாலும் தொடர்ந்து பயிற்சி பெறவில்லை.

பூப்பந்தாட்டம் எனக்கு மிகவும் பிடித்த விளையாட்டு ஆகும். பூப்பந்தாட்டப் போட்டிகளில் பங்கேற்று, பல பரிசுக் கோப்பைகளை நான் பெற்றுள்ளேன்.

மறக்க முடியாத அனுபவம் ஒன்று உண்டு. ஒருமுறை பூப்பந்தாட்டப் போட்டியின் இறுதிச் சுற்றுக்கு நானும், என் நண்பரும் வெற்றி பெற்று வந்துவிட்டோம். எதிரணியில் என் அண்ணன் உதுமானும், அவரது நண்பரும் வெற்றி பெற்று வந்துவிட்டார்கள். பரிசுக் கோப்பை என் அணிக்கா அல்லது என் அண்ணன் அணிக்கா என்பதில்தான் இறுதிப் போட்டி! நானே வெற்றி பெற வேண்டுமென்று ஆசீர்வதிக்கும்படி அம்மாவிடம் கேட்டேன். அவ்வாறே அண்ணனும் கேட்டார். அம்மா யாரை ஆசீர்வதிப்பதென்று புரியாமல் இருவரையுமே வாழ்த்தி அனுப்பினார்கள். போட்டியின் முடிவில் நான்தான் வெற்றி பெற்றேன்

நான் ஒன்பதாம் வகுப்பு படிக்கும்போது, 'டைபாயிடு' காய்ச்சல் ஏற்பட்டு 42 நாட்கள் படுக்கையில் கிடந்தேன். அப்போது என் தாயார் என் அருகிலேயே இருந்து கண்ணும் கருத்துமாக என்னைக் கவனித்தார்கள். அந்த நிகழ்ச்சியையும் என்னால் மறக்க முடியவில்லை.

இன்னொரு நிகழ்ச்சி! ஒருமுறை குரங்காட்டி ஒருவன் எங்கள் வீட்டு வாசலில் ஒரு குரங்கை வைத்துக் கொண்டு வேடிக்கை காட்டிக்கொண்டிருந்தான். நானும் ஆசையோடு பார்த்துக் கொண்டிருந்தேன். அப்போது அந்தக் குரங்கு திடீரென்று என் மேல் பாய்ந்து, என் காலில் கடித்துவிட்டது. உடன் என்னை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சை செய்தார்கள். சிறுவயதில் குரங்கு கடித்ததை இப்போது நினைத்துப் பார்த்துச் சிரித்துக் கொள்கிறேன்.

அப்போதே நான் மேடையேறிப் பேசியிருக்கிறேன். காரைக்காலிலுள்ள பெரிய பள்ளி வாசல் முகப்பில் ''மீலாத் மாநாடுகள்' நடைபெறும். பேச்சைத் தக்கவர்கள் யாரிடமிருந்தாவது எழுதி வாங்கி, அதை நன்றாக மனப்பாடம் செய்து அழகாகப் பேசிப் பலரின் பாராட்டைப் பெற்றுள்ளேன்.

மாணவராக இருக்கும்போதே அரசியலில் ஈடுபாடு உண்டு. தொடக்கத்திலிருந்தே நான் காங்கிரஸ்காரனாக இருந்தேன். அப்போது பல கூட்டங்களில் நான் பேசியிருக்கிறேன்.

''இந்த நாட்டின் விடுதலைக்காகப் போராட வேண்டும். பிரெஞ்சுக்காரர்களை இந்த மண்ணை விட்டு விரட்ட வேண்டும்'' என்றெல்லாம் மனத்தில் ஓர் இலட்சியப் பிடிப்பைக் கொண்டிருந்தேன். அதற்காகப் பெரிய தியாகம் எதையும் நான் செய்துவிட்டதாகச் சொல்லமாட்டேன்.

என்றாலும், விடுதலைப் போராட்டத்தில் நானும் பங்கு பெற்றிருக்கிறேன். போராட்டத்தைத் தூண்டிவிட்டதாகவும், பள்ளிக்கூடம் போகாமல் மாணவர்களை நான் தடுத்ததாகவும் 'ரிகார்டு' இருக்கிறது. அந்த வயதில் தேச விடுதலைக்காக என்னால்

எதைச் செய்ய முடியுமோ, அதை நான் அப்போதே செய்தேன்.

நான் பொதுவாழ்விற்கு வருவேன் என்று நினைக்கவே இல்லை. படித்து விட்டு 'டாக்டர்' ஆக வேண்டும் என்றுதான் ஆசைப்பட்டேன். சிறு வயதில் 'டாக்டர் பாரூக்' என்றே சில உறவினர்கள் என்னை அழைப்பார்கள்: அப்படிச் சொல்லிக் கேட்பதற்கு எனக்கு மகிழ்ச்சியாக இருக்கும். ஆனால் டாக்டர் ஆக வேண்டும் என்ற அந்த ஆசை மட்டும் ஈடேறவில்லை.

காரைக்கால் தூய மரியன்னை உயர் நிலைப் பள்ளியில் எனக்குப் பாடம் சொல்லிக் கொடுத்த 'பாதர் தாமஸ்' என்றால் மறக்க முடியாத ஆசிரியர்! அவர் மிகவும் கண்டிப்பானவர். என்னை உருவாக்கிய ஆசிரியர் என்றே அவரைச் சொல்ல வேண்டும். இப் போது அவர் ஓய்வு பெற்று, புதுவை யில் தம் வீட்டில் வாழ்கிறார். எனக்கு நேரம் கிடைக்கும்போதெல்லாம் அவரைச் சந்தித்து ஆசிகளும் அறி வுரைகளும் பெறுவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறேன்.

நினைவில் நிற்கும் இன்னொர் ஆசிரியர், 'கீரிப் பிள்ளை வாத்தியார்!' மு.வி.ச. உயர்நிலைப் பள்ளியில் அவர் எனக்குப் பாடம் சொல்லித் தந்தவர். கீச்சுக் குரலில் பேசுவதால் எல்லா ரும் அவரைக் 'கீரிப்பிள்ளை வாத்தி யார்' என்று சொல்வதுண்டு. அந்தப் பெயர்தான் இப்போது என் நினை வில் இருக்கிறது. அவருடைய சொந் தப் பெயரை மறந்துவிட்டேன். வரலாறு, பூகோளம் நடத்திய 'கண பதி வாத்தியார்'ரும் என்னால் மறக்க முடியாத ஆசிரியர்.

சிறு வயதிலேயே நான் குர்ஆன் ஓதி முடித்துவிட்டேன். எனக்கு வாழ் வில் திருப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தவை திரு.வி.க., டாக்டர் மு.வ. ஆகியோரது புத்தகங்கள் என லாம். இப்போதும் அவர்களது புத் தகங்களை நான் விரும்பிப் படிக் கிறேன். எனக்கு மிகவும் பிடித்த தலைவர் நேரு அவர்கள்தாம்!

சிறு வயதிலிருந்தே படுக்கைக்குப்



போகும் முன்னர் 'பிரார்த்தனை' செய்து விட்டுத் தூங்கும் பழக்கம் எனக்கு உண்டு. பிரார்த்தனை செய்யா மல் ஒருநாள்கூட இருந்ததில்லை. அந்தப் பிரார்த்தனை மற்றவர்கள் எனக்குச் சொல்லிக் கொடுத்த தில்லை. என் மன அமைதிக்காக நான் சொல்லி வரும் பிரார்த்தனை இது தான்:

"இறைவா! என்னை நல்லவனுக்கு; நேர்மை உள்ளவனாக ஆக்கு; நாணயம்உள்ளவனாகஆக்கு;பிறருக்கு நன்மை செய்து வாழ்பவனுக்கு; இறைவா! உன் கருணையை என் மீதும் என் குடும்பத்தார் மீதும் காட்டு! உல கத்தார் மீதும்காட்டு! நான் தெரிந்தோ தெரியாமலோ தவறு செய்தால் மனமு வந்து என்னை மன்னித்துவிடு!"


— இந்தப் பிரார்த்தனையை இப் பொழுதும் செய்துவிட்டுத்தான் படுக் கைக்குப் போகிறேன். குழந்தைப் பரு வத்திலிருந்தே எனக்கு ஏற்பட்ட பழக் கம் இது!

குழந்தைப் பருவம் எவ்வளவு இனிமையான பருவம்! மகிழ்ச்சியான அந்தப் பருவம் மீண்டும் வ்ராதா என்று இப்பொழுது ஏங்குகிறேன்.

பேட்டி கண்டு எழுதியவர்:
பேராசிரியர் மு. சாயபு மரைக் காயர்.

பழைய மாணவனுக்கு வரவேற்பு

டி. டேவிட் ஜான் பிரிட்டோ



புனித ஆரோக்கிய அன்னை சிறுவர் இல்லம் விழாக் கோலம் பூண்டிருந்தது. கட்டடம் முழுவதும் தட்டா மாலைகளும், வண்ணக் காகிதப் பூக்களும் காற்றில் அசைந்து ரகசியம் பேசிக் கொண்டிருந்தன. சிறுவர் இல்லம் முழுவதும் தூய்மை பளிச்சிட்டது. இல்லத்திற்கு முன்புறம் ரோஜா, ஜினியா, செவ்வந்தி, லில்லி மலர்ச் செடிகளில் மலர்ந்திருந்த வண்ணப் பூக்கள் கூட சந்தோஷமாயிருப்பது போலிருந்தது. அன்று சிறுவர் இல்ல ஆண்டு விழா. சிறுவர்களெல்லாரும் வண்ண ஆடைகளுடன் சந்தோஷத்தையும் உடுத்திக் கொண்டு திரிந்தார்கள். அவர்கள் சந்தோஷத்திற்கு விசேஷ காரணம் ஒன்று இருந்தது. அன்று நடக்கும் விழாவிற்கு சிறப்பு விருந்தினராக வருகை தரப் போகிறவர் பிரபல திரைப்படப் பாடகர் புனிதவண்ணன்!

புனிதவண்ணனின் பாடல்கள் இடம் பெறாத திரைப்படமே கிடையாது. அவரது பாடலுக்காகவே நூற்றுக்கணக்கான நாட்கள் ஓடிய படங்களும் உண்டு. புனிதவண்ணனின் பாடல்கள் வானொலியில் ஒலிபரப்பாகாத நாட்களே கிடையாது. ரேடியோ அலைவரிசைகளில் எல்லாம் புனிதவண்ணனின் தேனினும் இனிய, கேட்பவரைக் கவர்ந்திழுக்கும் காந்தக் குரல்தான் ஒலிக்கிறது. அவர் இன்று இந்தச் சிறுவர் இல்ல ஆண்டு விழாவிற்கு முக்கியத்துவம் கொடுத்துச் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்கிறார் என்றால், அதற்கும் காரணம் இருந்தது. ஒன்று முதல் எட்டு வகுப்புகள் வரை இந்தச் சிறுவர் இல்லத்திலிருந்தே படித்தவர். ஆம்! இந்தச் சிறுவர் இல்லத்தின் முன்னாள் மாணவர் அவர்.

மாலை ஆறு மணி. மெல்ல மெல்ல பூமியை இருள் கவ்வ ஆரம்பித்தது. மின் விளக்குகள் இரவைப் பகலாக்கும் உத்தேசத்துடன் பிரகாசமாய் ஒளிர்ந்தன. "திரை இசைத் தென்றல் புனிதவண்ணன் அவர்களே! வருக! வருக!" என்ற அலங்கார வளைவைத் தாண்டிக் கொண்டு அந்த வெள்ளை நிற பியட் கார் விரைந்து வந்து நின்

தோண்டிப் புதைத்தாள். காலிப் பெட்டியில் கல்லையும் மண்ணையும் போட்டு நிரப்பி வைத்தாள்.

மாலையில் சுப்பனும் குப்பனும் வந்ததும், ''தம்பிகளா, வடக்கேயிருந்து இந்தப் பக்கம் திருட்டுப் பசங்கள் வந்திருக்கிறாங்களாம். ஒருத்தர் சொன்னார். அதனாலே, நான் காசு சேர்த்து வைச்சிருக்கிற இந்தப் பெட்டியை, பின்புறமுள்ள கிணத்துக்குள்ளே போட்டு வைத்திடலாம்னு நினைக்கிறேன். ஒரு வாரம், பத்து நாள் சென்று எடுத்துக்கலாம். எனக்குக் கொஞ்சம் உதவுறீங்களா? நீங்கள் இரண்டு பேரும் பெட்டியைத் தூக்கிட்டு வாங்க. கிணத்துக்குள்ளே போட்டிடலாம்'' என்றாள். அவர்களும் அவ்வாறே செய்தார்கள்.

அன்று நடு இரவில், சுப்பனும் குப்பனும் மெல்ல எழுந்து, கிணற்றுப் பக்கம் போனார்கள். ''நான் இந்தக் கயிற்றைப் பிடித்துக் கொண்டு உள்ளே இறங்குகிறேன். பெட்டியை எடுத்துக் கயிற்றிலே கட்டிவிட்டு, 'உம், இழு' என்று குரல் கொடுக்கிறேன். நீ மேலே தூக்கு. பிறகு, கயிற்றைக் கீழே விடு. நான் மேலே ஏறி வந்துடுறேன்'' என்று கூறிவிட்டு சுப்பன், கயிற்றைப் பிடித்துக் கொண்டு உள்ளே இறங்கினான். பெட்டியைத் தண்ணீருக்கு மேலே எடுத்தான். 'உள்ளே இருக்கும் பணத்தில் பாதியைக் கிணற்றுக்குள்ளே போட்டுவிட்டு, பிறகு வந்து குப்பனுக்குத் தெரியாமல் எடுத்துக் கொள்ளலாம்' என்று நினைத்துப் பெட்டியைத் திறந்தான். உள்ளே வெறும் கல்லும் மண்ணுமே கையில் தட்டுப்பட்டதை அறிந்து திடுக்கிட்டான்.

'பெட்டிக்குள் ஒன்றுமில்லை' என்று சொன்னால், தன் கூட்டாளி குப்பன், தன்னைக் கிணற்றுக்குள்ளேயே விட்டுவிட்டு ஓடி விடுவான்' என்று பயந்து, பெட்டிக்குள்ளிருந்த கல்லையும் மண்ணையும் கொட்டிவிட்டு, பெட்டியைக் கயிற்றுடன் கட்டினான். தானே பெட்டிக்குள் ஏறி உட்கார்ந்து கொண்டு ''உம் இழு'' என்று கூறிவிட்டு, மூடியை நன்றாக மூடிவிட்டான்.

பெட்டி மேலே வந்ததும், குப்பன் ஆவலாக அதைப் பிடித்துக் கயிற்றை அவிழ்த்தான். 'கிணற்றுக்குள் இருக்கிற சுப்பன் மேலே வந்தால், பங்கு கேட்பான். ஆகையால், இதை நாமே எடுத்துக் கொண்டு ஓடி விடலாம்' என்று நினைத்து, பெட்டியைத் தூக்கித் தலையிலே வைத்தான். எடுத்தான் ஓட்டம்!

வெகுதூரம் சென்ற பிறகே, பொழுது விடிந்தது. உடனே பெட்டியைக் கீழே இறக்கி வைத்து, ஆவலாகத் திறந்தான். உள்ளே தன் கூட்டாளி சுப்பன் சிரித்துக் கொண்டே எழுந்ததைக் கண்டு அவன் திடுக்கிட்டான்.

''என்னை நீ ஏமாற்றப் பார்த்தாய். உன்னை நானும் ஏமாற்றப் பார்த்தேன். ஆனால், நம் இருவரையும் நன்றாக ஏமாற்றி விட்டாளே அந்தக் கிழவி'' என்று நடந்ததைக் கூறினான் சுப்பன்.

அடுத்த இதழில்...



என் குழந்தைப் பருவம்

-தசாவதானி பெ. இராமையா

விவேகானந்தர் வாழ்விலே



* விவேகானந்தருக்கு அவரது பெற்றோர் வைத்த பெயர் நரேந்திர நாத தத்தா. அவரைச் செல்லமாக அழைக்கும் பெயர் 'நரேன்.'


* இவருக்கு மூன்று வயதாயிருக்கும்போது இவருடைய அம்மா இவரை அழைத்துக் கொண்டு காசி விஸ்வநாதரைத் தரிசிப்பதற்காகப் புறப்பட்டார். கங்கையைக் கடந்து படகில் செல்லும்போது, குழந்தை தவறிக் கங்கையில் விழுந்துவிட்டது! அம்மாவுக்கு நீச்சல் தெரியாது. ஆயினும், பிள்ளைப் பாசத்தால் நதியில் குதித்துவிட்டார்! நல்லவேளை, பிறரது உதவியால் அம்மாவும் பிள்ளையும் காப்பாற்றப்பட்டார்கள்!

* சிறிய வயதில் இராமாயணப் பிரசங்கம் நடக்கும் இடத்திற்குச் சென்று அக்கறையோடு கேட்பார். ஆஞ்சநேயரிடத்தில் இவருக்கு மிகுந்த ஈடுபாடு. வாழைத் தோட்டங்களுக்குச் சென்று அங்கு ஆஞ்சநேயர் இருக்கிறாரா என்று தேடிப் பார்ப்பார். இதற்குக் காரணம் வங்காளி இராமாயணத்தில் ஆஞ்சநேயர் வசிக்கும் இடம் வாழைத் தோட்டமே என்று இருப்பதுதான்!

* மற்ற சிறுவர்களுடன் சேர்ந்து வீட்டிலே நாடகங்கள் நடத்துவார். உடற்பயிற்சிக் கூடத்தில் சேர்ந்து, நீச்சல், மல்யுத்தம்; சிலம்பம், படகு ஓட்டுதல் போன்ற பலவற்றையும் நன்கு கற்றுக் கொண்டார். இனிமையாகப் பாடுவார்; வீணை வாசிப்பார்; ஓவியம் வரைவார்; விஞ்ஞான உண்மைகளை அறிவதிலும் ஆர்வம் காட்டுவார்.,

* இவரை முதல்முதலாக இராமகிருஷ்ண பரமஹம்சர் கண்டதும், ''நான் இவ்வளவு காலமாகத் தேடி வந்த சீடன் கிடைத்துவிட்டான்!'' என்று நினைந்து அளவில்லாத ஆனந்தம் அடைந்தார். சில இனிப்புப் பண்டங்களை அவர் எடுத்து வந்து தம் கையாலேயே இவருக்கு ஊட்டிவிட்டார்.

* மைசூர் மன்னராயிருந்த சாமராஜேந்திர உடையார் விவேகானந்தரிடம்



ரின் சலுகைகளிலிருந்தும் அவனை விடுவிக்க முடியாது. எனவே, ஆசிரியர்களிடத்தில் கோள் மூட்டி அவனுக்குச் சில முறை தண்டனை வாங்கித் தந்து திருப்தியடைந்தனர். அற்ப விஷயங்களுக்கெல்லாம் சண்டைக்கு இழுப்பார்கள்... அவனைப் பின் மண்டையில் அடிப்பார்கள்... சண்டை வலுப்பது போலப் பாவனை செய்து கன்னத்தில் அறைவார்கள்... "போடா அப்பன் பேரு தெரியாத பயலே..." என்று அகங்காரமாய்ச் சிரிப்பார்கள்.

இவற்றையெல்லாம் ஃபாதரிடம் சொல்லியிருந்தால் அந்த மாணவர்களுக்குத் தண்டனை கிடைத்திருக்கும். ஆனால், புனிதவண்ணன் பகைவர்களையும் நேசிக்கக் கற்றுக் கொண்டவன். சில சமயங்களில் தனிமையில் கண்ணீர் விடுவதோடு சரி.,... மற்ற சமயங்களில் மனத்துக்குள் எவ்வளவுதான் வேதனையாக, அவமானமாக இருந்தாலும் வெளியில் காட்டாமல் ஒரு புன்முறுவலோடு அனைத்தையும் சகித்துக் கொள்வான்.

பாடல் குழுவில் புனிதவண்ணனுக்குத்தான் நல்ல பெயர். ஆனால், அங்கும் சில தீயவர்கள் இருந்தார்கள். சர்ச் வழிபாட்டுப் பாடல்களின் போதோ பிற கோரஸ் பாட்டுக்களின் போதோ புனிதவண்ணனை மைக் அருகே அவர்கள் நெருங்க விடுவதில்லை. முண்டியடித்துக் கொண்டு அவர்களே மைக்கைச் சுற்றி நின்று கொள்வார்கள். பின்னாலிருந்து பாடுகின்ற புனிதவண்ணனின் குரல் அமுங்கிவிடும்.

வருடாவருடம் புனித செசிலி திருநாள் வரும். புனித செசிலியாள் இறைவனுக்குத் தன் குரலை அர்ப்பணம் செய்த இன்னிசைவாணி. அவளது திருநாளில் இசைக்குழுவினர் அனைவரும் காலை வழிபாடு முடிந்ததும் ஒரு நாள் எங்காவது உல்லாசப் பயணம் போய் வருவார்கள். புனிதவண்ணன் எட்டாம் வகுப்பு படிக்கின்ற போது தஞ்சாவூருக்குச் செல்வதென்று முடிவு செய்தார்கள். தஞ்சாவூர் என்றதும் புனிதவண்ணனுக்கு மிகச் சந்தோஷமாக இருந்தது. பெரிய கோவில், அரண்மனை, சரஸ்வதி மகால், சிவ

கங்கைப் பூங்கா முதலியவற்றைப் பார்க்கலாமே!

செசிலியாள் திருநாளன்று காலை வழிபாடு முடிந்ததும், இசைக் குழுவினர் புறப்பட்டனர். ஆர்மோனியம் வாசிக்கின்ற அடைக்கலம் சார்தான் தலைமை. இவர்கள் செல்வதற்கென்று ஒரு 'வேன்' ஏற்பாடு செய்திருந்தார் ஃபாதர். எல்லோரும் வேனில் ஏறிக் கொண்டனர். கடைசியாக இவன் ஏற முயன்ற போது வேனில் இடமில்லை.

"டேய் பாருங்கடா... நம்ம பாடகருக்கு இடமில்லை" என்று தடியன் பாஸ்கர் கூற... ஹோவென்று சிரிப்பலை... அகங்காரச் சிரிப்பு!

"என்ன அங்கே சிரிப்பு? எல்லோரும் ஏறியாச்சா ...?" என்று கேட்டார் டிரைவரருகே இருந்த அடைக்கலம் சார்.

"ஏறியாச்சுசார்...வண்டியை எடுக்கலாம்..." என்று பாஸ்கர் கூற, இவன் அவமானத்தால் வாய் அடைத்துப் போய் நின்றான். வேன் புகை கக்கிப் புறப்பட அவர்கள் ஏளனமாய் டாட்டா காட்டிப் பார்வையிலிருந்து மறைந்தார்கள். அற்புதமாய்ப் பாடுகிற அந்தச் சிறுவனை விட்டுவிட்டு அவர்கள் சென்று விட்டார்கள்.

"அன்று எனக்கு நேர்ந்த அவமானம் தாளாமல் நான் உரக்க, வாய்விட்டு அழுதேன். ஓ...வென்று கதறினேன்... ஃபாதருக்குத் தெரிந்த போது அவர் சொன்னார்: "ஃபூல்... நீ இல்லாமல் இசைக் குழுவா? யார்டா உன்னைத் தடுத்தது? இடமில்லைன்னாலும் வேனில் ஏறியிருக்க வேண்டியதுதானே? நாம அனாதைன்னு நீயே நினைச்சுக்கறே... அது தப்பு... அந்தத் தாழ்வுணர்ச்சியை விட்டுடு முதலில்... அப்பத்தான் வாழ்க்கையில முன்னேற முடியும்!

அப்பொழுதுதான் எனக்கே தெரிந்தது, தவறு அவர்கள் மீது மட்டுமல்ல; தாழ்வுணர்ச்சி கொண்டிருந்த என் மீதும்தான் என்று.... அன்று ஒழித்தேன் தாழ்வுணர்ச்சியை... பல போராட்டங்களுக்குப் பின் இன்று ஒரு நல்ல நிலையில் இருக்கிறேன்... பணம், புகழ் இரண்டும் இருக்கின்றன.

இதை நான் உங்களுக்குச் சொல்வதற்குக் காரணம், நான் எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கிறேன் என்பதைக் காட்ட அல்ல... சிறுவர்களுக்கு இதன் மூலம் ஒரு நல்ல கருத்தைச் சொல்ல வேண்டும் என்றுதான். அனாதை என்று, ஆதரவற்றவர் என்று யாரையும் ஒதுக்காதீர்கள்! அது அவர்களை மனத்தளவில் கொல்வதற்குச் சமம். அந்த வேதனையை, அவமானத்தை நான் உணர்ந்திருக்கிறேன். திறமையிருப்பவர்களை வெறுக்காதீர்கள். அவர்கள் உதவியுடன் நீங்களும் முன்னேற முயலுங்கள்... அதே சமயம், யாரும் அனாதையென்றோ, ஆதரவற்றவன் என்றோ கிடையாது... எல்லோரையும் நேசிக்க எல்லாரும் இருக்கிறோம்... சிறுவர்களே! இதை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்..." புனிதவண்ணனின் பேச்சை ஏற்றுக் கொண்டவர்களாய்ச் சிறுவர்கள் படபடவென்று கைதட்டினார்கள்.

விழா முடிந்து புனிதவண்ணன் ஃபாதருடன் அவரது இல்லத்தில் பேசிக் கொண்டிருந்த பொழுது, அந்த இளைஞன் வந்தான். அழுக்கான சட்டையும், சாயம் போன கைலியும் அணிந்திருந்தான்.

புனிதவண்ணன் ஆச்சரியப்பட்டார். "நீ... நீ... பாஸ்கர் இல்லே..."

அவன் — பாஸ்கர் — நெளிந்தான்.

முடிவில் 'கை'

கீழே சில குறிப்புகள் இருக்கின்றன. அவற்றைக் கொண்டு விடை கண்டுபிடிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 'கை' என்ற எழுத்தில் முடியும். எங்கே, கண்டு பிடியுங்கள்:

1. வாழ்க்கையில் முன்னேற இது வேண்டும்.

2. நாட்டியம் ஆடுவோர் இதை அணிவார்கள்

3. இது தூங்குவதற்குப் பயன்படுகிறது

4. ஒரு தமிழ் மாதத்தின் பெயர்

5. கரிய பறவை இது

விடை: 1. நம்பிக்கை; 2. சலங்கை; 3. படுக்கை; 4. கார்த்திகை, 5. காக்கை

— ப. பார்த்தசாரதி (109), தேனி.

தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்



''தெ. பொ. மீனாட்சி சுந்தரனாரைச் சிலர் பல்கலைக்கழகம் என்பர். அவர் பல்கலைக் கழகத்தையும் கடந்த ஒருவர்'' என்று பல்லாண்டுகளுக்கு முன்பே தமிழ்த் தென்றல் திரு. வி. க. இவரைப் பாராட்டியிருக்கிறார்.

நம் தேச விடுதலைக்காகப் போராடிச் சிறை சென்ற தேசபக்தர் இந்தத் தமிழ்ப் பேரறிஞர். இவர் தாய்மொழியான தமிழுடன், ஆங்கிலம், மலையாளம், கன்னடம், தெலுங்கு, இந்தி, சம்ஸ்கிருதம், பிரெஞ்சு, ஜெர்மன் ஆகிய மொழிகளையும் நன்கு அறிந்தவர். ஆகையினால்தான் இவரை, 'பன்மொழிப் புலவர்' என்று பலரும் போற்றினார்கள்.

மதுரையில் பல்கலைக் கழகம் நிறுவப்பட்டதும், அதன் முதல் துணை வேந்தராகப் பொறுப்பேற்று, தமிழிலுள்ள பண்டைய இலக்கியங்களுடன் இன்றைய இலக்கியங்களுக்கும் மதிப்புக் கொடுத்து, அவற்றையும் மாணவர்கள் அறிந்து கொள்ளவும், அவற்றிலே ஆராய்ச்சி செய்யவும் வழி வகுத்தார்.

'பத்மபூஷண்' விருது பெற்ற இவர், சிந்தாதிரிப்பேட்டையில் வேதாந்த சங்கத்தை நிறுவவும், பல கல்விக் கூடங்கள் அமைக்கவும், பெரிதும் உதவினார்.

இவ்வளவு பெரிய அறிஞர் ஒரு கூட்டத்தில் பேசும்போது, ''நான் வகுப்பு நடத்தும் போது மாணவர்களிடம் கேள்வி கேட்பதுண்டு. அவர்கள் கூறும் விடைகளிலிருந்து பல உண்மைகளை நான் அறிந்து கொண்டேன்'' என்று அடக்கமாகக் கூறினார்.

இவர் தமிழிலும் ஆங்கிலத்திலும் இருபதுக்கு மேற்பட்ட புத்தகங்களை எழுதியிருக்கிறார்.

''ஆமாம் சார்... நீங்க வர்றதாக் கேள்விப்பட்டு உங்களைப் பார்க்கத்தான் வந்தேன். நீங்க பேசினதைக் கேட்டேன்... உங்களுக்கு எவ்வளவு கொடுமைகள் செஞ்சிருக்கேன்... அதுக்காக வருத்தப்படறேன் சார்... என்னை மன்னிச்சிடுங்க...''

புனிதவண்ணன் புன்முறுவலுடன் சொன்னார்: ''பரவாயில்லே... என்னை புனிதவண்ணன்னு பெயர் சொல்லியே கூப்பிடு. உன்னை நான் இங்கே எதிர்பார்க்கலே... இருந்தாலும் உன்னைச் சந்திச்சதிலே சந்தோஷம். இங்கே படிச்சப்ப, நீங்களெல்லாம் கஷ்டப்படுத்தினப்போ நான் நெனச்சுக்குவேன்... நாம பெரிய-பாடகனா ஆனதுக்கப்புறம் இவனுகளைப் பார்த்தா பேசக் கூடாது... திரும்பிக் கூடப் பார்க்கக் கூடாதுன்னு... ஆனால், பெரியவனானதும் அந்த வெறுப்பு மறைஞ்சுடுச்சு... ஒரு விதத்தில நான் வாழ்க்கையில முன்னேற மறைமுகமா நீங்க தூண்டுதலா இருந்திருக்கீங்க. அந்த நன்றி உணர்ச்சி தான் இப்போ எனக்கு ஏற்படுது... இப்பவும் நான் உன்னை விரும்பறேன். என் நண்பன் நீ. வா போட்டோ எடுத்துக்கலாம். அந்தப் படத்தை ஊரில் காண்பித்து 'புனிதவண்ணன் என் சிநேகிதன்'னு நீ பெருமைப்பட்டுக்கலாமே...!''

''நீ... நீங்க...'' மேலே பேச முடியாமல் பாஸ்கர் தடுமாற, புனிதவண்ணன் எழுந்து அவனை அணைத்துக் கொண்டு அவன் தோள் மீது கைபோட்டுக் கொண்டு, ''எங்கே... சிரி... என் சிநேகிதனே!'' என்று புகைப்படத்துக்கு போஸ் கொடுக்கத் தயாரானார்.

மறைந்த மாம்பழம்

-தேவி நாச்சியப்பன்



பரமதத்தர் தம் மனைவியிடம், "ஆஹா! இந்த மாம்பழம் மிகவும் சுவையாக உள்ளது. எங்கே, இத்துடன் நான் கொடுத்தனுப்பிய இன்னொரு மாம்பழத்தையும் கொண்டு வா" என்றார். அவர் மனைவி புனிதவதிக்குக் கைகால்கள் எல்லாம் நடுங்கின. அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் உள்ளே சென்றார். 'என்ன செய்வது? எப்படி இன்னொரு பழத்தைக் கொடுப்பது?' என்று யோசித்தார்.

பரமதத்தர் ஒரு வணிகர். அவர் அன்று காலை கடைக்குச் செல்லும் போது அவருக்கு இரண்டு மாம்பழங்களை அவருடைய நண்பர் கொடுத்தார். அந்த இரண்டு மாம்பழங்களையும், தம் மனைவியிடம் கொடுக்கும்படி வேலையாளிடம் கொடுத்தனுப்பினார். அந்த வேலையாளும் அப்படியே அவர் வீட்டில் கொண்டு வந்து கொடுத்தான். புனிதவதியும் அவற்றை உள்ளே வைத்தார்.

வேலையாள் மாம்பழங்களைக் கொடுத்துவிட்டுச் சென்ற சிறிது நேரத்தில் ஒரு சிவனடியார் களைப்புடன் வந்தார். புனிதவதி அவரை அன்புடன் வரவேற்றார். அவருக்கு உணவு அளித்து உபசரிக்க நினைத்தார். ஆனால், சமையல் முழுவதுமாக முடியவில்லை. சோறு மட்டுமே செய்திருந்தார். கணவர் அனுப்பிய மாங்கனிகள் நினைவுக்கு வந்தன. உடனே சிவனடியாருக்குச் சோறுடனும், தயிருடனும் ஒரு மாம்பழத்தை அரிந்து வைத்துப் பரிமாறினார். சிவனடியார் வயிறார உண்டு புனிதவதியை மனமார வாழ்த்திச் சென்றார்.

மதியம் கடையிலிருந்து திரும்பி வந்த கணவருக்கு ஒரு மாம்பழத்துடன் உணவு படைத்தார் புனிதவதி. அதை உண்ட அவள் கணவர்தான் இப்போது மற்றொரு மாம்பழத்தையும் கேட்கிறார். கணவரின் கட்டளையின்றிச் சிவனடியாருக்கு மாங்கனி படைத்தது தவறு என்று எண்ணுகிறார். என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் இறைவனிடம் முறையிட்டுக் கெஞ்சுகிறார். என்ன அதி

சயம்! அடுத்த நிமிடமே அதேபோன்ற ஒரு மாங்கனி அவர் கையில் வந்து நிற்கிறது. மகிழ்ச்சியுடன் இறைவனுக்கு நன்றி கூறிய பிறகு அக்கனியைத் தம் கணவரிடம் கொண்டு போய்க் கொடுக்கிறார்.

அவருடைய கணவர் அதைச் சுவைத்தார்.

"ஆஹா! முதலில் உண்ட பழத்தைக் காட்டிலும் இது மிக மிகச் சுவையாக உள்ளதே...! ஆமாம், ஏன் இந்த மாம்பழத்தைக் கொண்டு வர இவ்வளவு தாமதம்?" என்று கேட்டார்.

புனிதவதி தயங்கியபடியே முன் அனுப்பிய மாம்பழத்தைச் சிவனடியாருக்குப் படைத்ததையும், பிறகு சிவனிடம் வேண்டி மாம்பழம் பெற்றதையும் கூறினார். பரம்தத்தர் அதனை நம்பவில்லை. மேலும் சோதிக்க நினைத்து, "எங்கே, அப்படியானால் சிவனிடம் வேண்டி இன்னுமொரு மாம்பழம் கொண்டு வா, பார்க்கலாம்!" என்றார் கேலியாக.

புனிதவதியும் அன்புக் கணவரின் கட்டளைக்கு அடிபணிந்து உள்ளே சென்றார். இறைவனிடம் மனமுருகி வேண்டினார். சிவபெருமான் தன்னை நம்பியவரைக் கைவிடுவாரா? திடீரென்று புனிதவதியின் கையில் ஒரு மாம்பழம் தோன்றியது. அதைக் கொண்டுபோய்கணவனிடம்கொடுத்தார். அதை பரமதத்தர் வாயருகில் உண்பதற்காகக் கொண்டு போகும் போது, மாம்பழம் மாயமாக மறைந்துவிட்டது! இதைக் கண்ட பரமதத்தர் புனிதவதியிடம் தெய்வீக சக்தி இருப்பதை உணர்ந்தார். அவரைத் தெய்வமாகவே கருதினார். அவருடன் வாழ்க்கை நடத்த இயலாது என நினைத்து அவரை விட்டு நீங்கி வெளியூர் சென்றுவிட்டார்.

புனிதவதியின் பெற்றோர் விஷயம் அறிந்து, பரமதத்தரிடம் புனிதவதியை அழைத்துச் சென்று சேர்ந்து வாழுமாறு வேண்டினர். அதற்கு பரமதத்தர், 'புனிதவதி தெய்வம்' என்று கூறி அவரை வழிபட்டார். மற்றவர்களையும் வழிபடச் செய்தார்.

இல்லற வாழ்க்கையில் ஈடுபடாத தமக்கு இளமை தேவையில்லை என்று கருதினார் புனிதவதி.

ஊன் உடலில் உள்ள ஊனை அகற்றிவிட்டு, எலும்பு உருவம் தனக்கு அளிக்குமாறு வேண்டினார். அவ்வாறே இறைவன் அவருக்கு வரம் தந்தார். அந்த உருவத்துடன் அவர் தலைகீழாக நடந்து கைலாயம் போய்ச் சேர்ந்தார். இறைவன் அவரை அன்புடன் வரவேற்று, 'அம்மையே' என்று அழைத்தார். அதனால்தான் காரைக்காலைச் சேர்ந்த புனிதவதி 'காரைக்கால் அம்மையார்' எனப் போற்றப் படுகிறார்.


அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராய்த் திகழும் இவர் அருளிச் செய்த நூல்கள்: அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் முதலியன..

சித்திரப் புதிர்-17

விடைகள்:

1. தொலைக்காட்சியில் தோன்றுபவர் தொலைக்காட்சியைக் கண்டுபிடித்த "லோகி பயர்டு"
2. அமெரிக்கா.
3. ரஷ்ய மொழி. (இதன் பொருள்: "நான் படிக்கிறேன்")
4. டொனால்டு டக்.
5. மலேசியா.


விசித்திரச் செய்திகள்




உயரமானவர்கள்!

உயரமானவர்களுக்குப் புத்திக் கூர்மை அதிகமா, குள்ளமானவர்களுக்குப் புத்திக்கூர்மை அதிகமா என்பது பற்றி அமெரிக்காவில் ஸ்டான்போர்டு பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி நடத்தினார்கள். 14,000 இளைஞர்களிடம் ஆராய்ச்சி நடத்தியதில், உயரமானவர்களுக்குத்தான் புத்திக்கூர்மை அதிகம் என்று கண்டுபிடித்திருக்கிறார் டாக்டர் வில்சன் என்பவர்.

சந்திர மண்டலத்து சிமெண்ட்



அமெரிக்காவில் அப்போலோ ராக்கெட்டில் சந்திரமண்டலத்துக்குப் பயணம் செய்து திரும்பிய விண்வெளி வீரர்கள், அங்கிருந்து கல், மண் ஆகியவற்றை எடுத்து வந்தார்கள் அல்லவா? அந்தக் கல்லிலிருந்து அருமையான சிமெண்ட் தயாரிக்கலாம் என்றும், அது நமது பூமியிலிருந்து கிடைக்கும் பாறையிலிருந்து தயாரிக்கும் சிமெண்டை விட 5 சதவீதம் வலிமை அதிகம் என்றும் கண்டுபிடித்திருக்கிறார்கள். சந்திர மண்டலத்தில் விண்வெளிக் கூண்டு அமைக்க இந்தப் பாறை உதவும் என்று கருதுகிறார்கள்.



கண்ணாடிச் சாலை

மேற்கு ஜெர்மனியில் பல இடங்களில் கண்ணாடி ரோடுகள் போடப்பட்டு வருகின்றன. எப்படி? உடைந்த, மற்றும் பழைய பாட்டில்களை மாவு போல் தூளாக்கி, அதைக் கொண்டு இந்த ரோடுகள் போடப்படுகின்றன. இவை வழவழப்பாக இருப்பதுடன் வாகனங்கள் மிக வேகமாகச் செல்லவும் வசதியாக இருக்கின்றனவாம்!

சூடு கண்ட புலி!




கங்கை, பிரும்மபுத்திரா நதிகளின் டெல்டாக்களில் புலிகள் அதிகம் உள்ளன. அங்கே புலிகளை வேட்டையாடக் கூடாது என்று தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆனால், அந்தப் புலிகள் மனிதர்களை அடித்துக் கொன்று விடுகின்றன. இதைத் தடுக்க இப்போது மனிதப் பொம்மைகளை ஆங்காங்கே நிறுத்தி வைத்திருக்கிறார்கள். அந்த பொம்மைகளுடன் கார் பாட்டரிகளை இணைத்திருக்கிறார்கள். பொம்மையை மனிதன் என்று நினைத்துப் புலிகள் கொல்ல வரும் போது ஷாக் அடிக்கிறது. ஷாக் அடிக்கப் பட்ட புலிகள் உண்மையான மனிதர்களின் கிட்டே கூட வருவதில்லை என்கிறார்கள் அதிகாரிகள்.



தினம் ஒரு பாம்பு!

வாங்பியோ என்னும் வாலிபர் சீனாவில் வசிக்கிறார். அவருக்குக் காக்காய் வலிப்பு இருந்தது. அந்த வலிப்புத் தீரப் பாம்பை விழுங்க வேண்டும் என்று யாரோ சொன்னார்கள். அதிலிருந்து அந்த வாலிபர் இரண்டு ஆண்டுகளாகத் தினமும் சாப்பாட்டுக்கு முன் ஒரு பாம்பை விழுங்கி வருகிறார்!

நத்தைப் பசை



மனிதனின் எலும்பு முறிவை இணைக்கவும், துண்டிக்கப்பட்ட தசை நார்களை எலும்புடன் மறுபடியும் சேர்க்கவும், நத்தையின் உடலிலிருந்து சுரக்கும் பசையைப் பயன்படுத்தலாம் என்று ஐக்கிய அமெரிக்காவில், கனக்டிக்ட் மருத்துவக் கல்லூரியின் எலும்பு மருத்துவ டாக்டர் ஃபெல்கர்ஸன் கண்டுபிடித்திருக்கிறார்.



குடுவையின் மதிப்பு

1000 ஆண்டுகளுக்கு முன்பு எகிப்தில், 'பாதிமித் சுல்தான்ஸ்' ஆட்சிக் காலத்தில் செய்யப்பட்ட, சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய 4 அங்குல உயரக் குடுவை ஒன்று — கல்லில் செய்யப்பட்டது — ரூ. 55 லட்சத்துக்கு ஏலம் போனது. ஏலம் விடப்பட்ட இடம் லண்டன்.

— ஆழி

கேளுங்கள்; சொல்லுகிறோம்

* சுவரின் மீது யாரும் விதை போடுவதில்லை. அப்படியிருந்தும், சில சுவர்களின் மீது செடிகள் முளைக்கின்றனவே, எப்படி?

— குறிஞ்சிநாடன், திருநீர்மலை.

பழங்களைத் தின்கின்ற பறவைகள், கண்ட கண்ட இடங்களில் விதைகளைப் போடுகின்றன; அல்லது எச்சம் இடுகின்றன. அப்படிப் போடப்பட்ட விதைகள் சுவர்களிலுள்ள இடுக்குகள் அல்லது குழிகளில் தங்கி விடுகின்றன. மழை பெய்ததும், அவை மெல்ல முளைக்க ஆரம்பிக்கின்றன. சுவரைத் துளைத்துக் கொண்டு வேர்கள் கீழே போகின்றன. ஆனாலும், இதுபோல் வளரும் செடிகள் பெரிதாக வளர்வதில்லை. காரணம், வளர்வதற்கு வேண்டிய சத்துப் பொருள்கள், பூமியில் தான் இருக்கின்றன. சுவரில் இருப்பதில்லை.


* படித்துவிட்டு வீட்டில் வேலையில்லாமல் இருக்கும் பட்டதாரிகளுக்குத் தாங்கள் கூறும் அறிவுரை என்ன?

— என். சுகுமார், நாகப்பட்டினம்.

அவர்கள் வேலை தேடி அலைய வேண்டாம். உழைப்பையும், நாணயத்தையும் முதலாக வைத்து ஒரு தொழிலை நம்பிக்கையோடு தொடங்க முன்வந்தால், அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து அவர்கள் கடன் உதவி பெறுவதற்கான வாய்ப்பு இருக்கிறதே?

* குற்றாலம் என்ற பெயருடன் தமிழ் நாட்டில் பல ஊர்கள் இருப்பதாகச் சொல்கிறார்களே, உண்மையா?


— சி. மாசிலாமணி, மணச்சநல்லூர்.



குற்றாலம் என்ற பெயருடன் இரண்டு முக்கிய இடங்கள் இருப்பதை அறிவோம். ஒன்று திருநெல்வேலி மாவட்டத்தில் தென்காசிக்குப் பக்கத்திலுள்ள குற்றாலம். இது அருவிகளுக்குப் பெயர் பெற்ற ஊர். மற்றொன்று தஞ்சாவூர் மாவட்டத்தில் காவிரி ஆற்றங்கரையில் மயிலாடுதுறைக்குத் தென்மேற்கே இருக்கிறது. இரண்டுமே பாடல் பெற்ற தலங்கள்தான்.

* தேள் எதை எதைத் தின்னும்?

— என். மோகன், சேலம்—7.



சிறுசிறு பூச்சிகளே தேளின் முக்கிய உணவு. சிலந்தி, மரவட்டை, பூரான் கிடைத்தால் விடாது. அவற்றையும் பிடித்துத் தின்று விடும்! தேளுக்கு அதிகமான உணவு தேவையில்லையாம். உணவில்லாமல் ஓராண்டு காலம்கூட உயிரோடு இருக்க முடியுமாம்!

* இந்தியாவில் அளிக்கப்படும் விருதுகளில் மிக உயர்ந்த விருது எது? எதற்காகக் கொடுக்கப்படுகிறது?

— இரா. இராமசாமி, திருநெல்வேலி—6.

மிக உயர்ந்த விருது 'பாரத ரத்னா' தான். கலை, இலக்கியம், விஞ்ஞானம் ஆகியவற்றின் வளர்ச்சிக்காகச் செயற்கரிய செய்தவர்களுக்கும் மிகச் சிறந்த முறையில் பொது நலத் தொண்டாற்றியவர்களுக்கும் வழங்கப்படுகிறது இந்த விருது.

* பாரதியார் எட்டயபுரம், ராஜாவுக்குச் சீட்டுக்கவி எழுதியதாகப் படித்தேன். சீட்டுக்கவி என்றால் என்ன?

— பி. கோமளம், திருச்செந்தூர்.



சீட்டுக் கவி என்பது கவிதையிலே எழுதப்படும் கடிதம். அரசர்களுக்கோ, அல்லது வள்ளல்களுக்கோ புலவர்கள் எழுதுவார்கள். சீட்டுக் கவியில் மூன்று பகுதிகள் இருக்கும். முதல் பகுதியில் புலவர் தமது தகுதிகளைப் பற்றியும் இரண்டாவது பகுதியில் யாருக்கு அனுப்பப்படுகிறதோ அவரது சிறப்புகளைப் பற்றியும் கடைசிப் பகுதியில் தமது வேண்டுகோள் என்ன என்பது குறித்தும் பாடியிருப்பார்.

* கவிஞர் வாணிதாசனின் இயற் பெயர் என்ன? இவர் எப்போது பிறந்தார்? இவர் எழுதிய நூல்களில் குறிப்பிடத்தக்கவை யாவை?

— சி. தியாகராஜன், திருச்சி—7.

இயற்பெயர் திரு. அரங்கசாமி. பிறந்த தேதி: 1.7.1921. இவர் இயற்றிய நூல்களில் சில: எழிலோவியம், கொடிமுல்லை, தமிழச்சி, இன்ப இலக்கியம், குழந்தை இலக்கியம் (ஐந்தும் கவிதைகள்.)

* பத்தாவது சீக்கிய குருவான குருகோவிந்த சிங் பிறந்த இடம் எது?

— பி.பி. கௌதமன், திருச்சி—17.

பாட்னா நகர்.

* ஆண்டவன் எங்கும் நிறைந்திருக்கிறார் என்கிறோம். அப்படியானால் ஏன் அவரைக் கோயிலில் வைத்துக் கும்பிட வேண்டும்?

— ப. முருகேசன், திருத்தணி



இதற்கு இந்து மத பால பாடம் என்ற புத்தகத்தில் ஆறுமுக நாவலர் எழுதிய பதில் இதோ:

பூமியின் அடியில் எங்கும் வியாபித்திருக்கும் தண்ணீரை உபயோகப்படுத்த வேண்டுமானால் ஒரு கிணறு வெட்டிக் கட்ட வேண்டியிருக்கிறது. தண்ணீர் பூமியின் அடியில் எங்கும் நிறைந்திருந்தாலும், கிணற்றிலேயே நமக்குத் தாகவிடாய் தீருகிறது. எலெக்ட்ரான் (மின்சாரம்) ஆகாயமெங்கும் வியாபித்திருந்தாலும், எலெக்ட்ரிஸிட்டி பவர் ஹவுஸ் (மின்சார நிலையம்) மூலமாகவே நமக்கு அதனை அனுபவிக்க முடிகிறது. இவற்றைப் போல கடவுள் எங்கும் நிறைந்திருந்தாலும், ஆலயங்கள் மூலமாக நின்றே அருள் செய்கிறார். ஆகையால், அவர் அருள் பெற ஆலயம் இன்றியமையாதது.

* கோகுலம் வேறு எந்த மொழிகளிலாவது வெளி வருகிறதா?

— அன்வர் நிவாஸ், நாட்டரசன்கோட்டை

இல்லை.

* எங்கள் குன்றக்குடியில் 'காமராசர் சிறுவர் பூங்கா' என்ற பெயரில் குழந்தைகளுக்கு மட்டுமேயான நூலகம் ஒன்று இருக்கிறது. அதில் ஐந்து வயது முதல் பதினாறு வரையிலுள்ள 70 பேர் உறுப்பினர்களாக உள்ளோம். சுமார் 400 குழந்தைப் புத்தகங்களும் நிழல் விளையாட்டுக் கருவிகளும் இருக்கின்றன. தொலைக்காட்சிப் பெட்டியும் ரேடியோவும்கூட இருக்கின்றன. மாலை 5.30 மணியிலிருந்து 8 மணிவரை சராசரியாக 50 குழந்தைகள் இங்கு சென்று பயன் பெறுகிறோம். இதேபோல, நம் தமிழகத்தில் வேறு எங்கேனும் குழந்தைகளுக்கு மட்டுமேயான நூலகங்கள் உண்டா?

— சு. தணிகை முருகன், குன்றக்குடி



சரியாகத் தெரியவில்லையே தம்பி. ஆனால், நீயோ அதிர்ஷ்டசாலி. குழந்தைகளிடம் பேரன்பு கொண்ட குன்றக்குடி அடிகளார் வாழும் ஊரில் நீ வசிக்கிறாய். அவரது முயற்சியால் ஏற்படுத்தப்பட்ட நூலகத்தைப் பயன்படுத்துகிறாய். இப்படிக் குழந்தைகளுக்கான நூலகங்களில் குழந்தைகள் பகுதி எங்கெங்கே உள்ளன என்பதை அந்தந்த நூலகர்கள் விவரமாக எழுதி அனுப்பினால் உன் கேள்விக்கான பதிலாகக் கோகுலத்தில் வெளியிடுவோம்.

புதிய புத்தகங்கள்



குழந்தை எழுத்தாளர் சங்கம், பல பதிப்பாளர்களுக்கும் வேண்டுகோள் அனுப்பி அவர்கள் தயாரிக்கும் குழந்தைப் புத்தகங்களை, குழந்தைகள் தினத்தில் வெளியிட்டு வருகிறது. இந்த ஆண்டு 18 எழுத்தாளர்கள் எழுதி, 9 பதிப்பாளர்கள் தயாரித்த 20 குழந்தை நூல்களை சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் அவர்கள் தலைமையில், கல்வி அமைச்சர் சி. பொன்னையன் அவர்கள் வெளியிட்டார். 1957 முதல் 1986 வரை இவ்வாறு இச்சங்க விழாவில் வெளியிடப்பட்ட நூல்கள் 613. இந்த ஆண்டு வெளியிடப்பட்ட நூல்களில் சில:



மாணிக்கப் பாடல்கள்

குழந்தை எழுத்தாளர் சங்கம் நடத்திய போட்டியில் ஏ. வி. எம். தங்கப் பதக்கம் பெற்ற 82 பாடல்களை ஐந்து பகுதிகளாகப் பிரித்து நிறையப் படங்களுடன் தந்திருக்கிறார் புலவர் சி. மாணிக்கம். குழந்தைகளின் உள்ளத்தைப் பண்படுத்துகிற; உவமை நயம் மிகுந்த, சிந்தனையை வளர்க்கிற, தேசத்தைப் போற்றுகிற பாடல்களின் தொகுப்பு. பக்கங்கள்; 94; விலை ரூ. 10/–



கருத்துக் கதைகள்

முதல் முதலாக விண்வெளிப் பயணம் செய்த வீரப் பெண்மணி வாலண்டினா, கண், காது, வாய் ஆகிய முக்கிய உறுப்புகள் பாதிக்கப்பட்ட நிலையிலும் உலகம் போற்றும் பல அற்புதங்களைச் செய்த ஹெலன் கெல்லர், தன்னம்பிக்கையும் தளராத முயற்சியும் கொண்டு ரோல்ஸ் ராய்ஸ் காரைத் தயாரித்த ஃபிரெடரிக் ஹென்றி ராய்ஸ், சிறிய வயதில் வறுமையால் வாடி, தம்முடைய முயற்சியால் முன்னேறி, பலரும் போற்றும் நீதிபதியாக விளங்கிய முத்துசாமி ஐயர் போன்ற பதினோரு பேருடைய வாழ்க்கைக் கதைகளை அழகாக, சுவையாகக் கூறுகிறார் அரு. வெங்கடாசலம். பக்கங்கள்: 132; விலை ரூ. 10/–

— வெளியிட்டோர்: அருணோதயம், சென்னை – 14.

ஆடிப் பாடுவோம்




''குழந்தைகள் ஆடிக் கொண்டு பாடுவதற்கும், பாடிக் கொண்டு ஆடுவதற்கும் ஏற்ற பாடல்களைத் தாமும் ஒரு குழந்தையாகவே மாறித் தந்திருக்கிறார் கவிஞர் செல்ல கணபதி'' என்று டாக்டர் சிலம்பொலி செல்லப்பன் கூறுவது நூற்றுக்கு நூறு உண்மை. பொறியியல் கல்வி படித்துக் கொண்டிருந்த போது, அகால மரணமடைந்த தம் அருமை மகன் செல்லப்பன் நினைவாக வெளியிடப்பட்ட இந்தப் புத்தகம், ஆங்கிலப் புத்தகங்களுடன் போட்டியிடும் அளவுக்கு அழகான வண்ணப் படங்கள், உயர்ந்த தாள், அச்சு — அமைப்புடன் விளங்குகிறது. பக்கங்கள்: 68, விலை ரூ. 6.90.

தங்கத் தங்கை



குழந்தைகளுக்காகக் கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ந்து 'ரேவதி' என்ற புனை பெயரில் எழுதிப் பல பரிசுகளும், பாராட்டுகளும் பெற்ற டாக்டர் ஈ. எஸ். ஹரிஹரன் எழுதிய ஏழு கதைகள் அடங்கியது இந்த நூல். நட்பின் சிறப்பு, ஏழைகளிடம் இரக்கம், பிராணிகளிடம் பிரியம் போன்ற நல்ல இயல்புகளை மிக அழகாகச் சித்திரிக்கிறார் ஆசிரியர், பக்கங்கள்: 52, விலை ரூ. 4.90.

நிலவுக்குப் போவோம்



அமெரிக்க வீரர்களான ஆர்ம்ஸ்ட்ராங், ஆல்ட்ரின் என்ற இருவர் முதல் முதலாக நிலவில் இறங்கிய அரியதொரு சாதனையை எளிமையாகவும் சுவையாகவும் இப்புத்தகத்தில் விளக்குகிறார் சந்தானலட்சுமி. சில வண்ணப்படங்களுடன், பல விளக்கப் படங்களும் இப்புத்தகத்தின் சிறப்பை உயர்த்துகின்றன. பக்கங்கள்: 96, விலை ரூ. 9.90. •


— இம்மூன்று புத்தகங்களையும் வெளியிட்டோர்: பழனியப்பா பிரதர்ஸ், சென்னை — 14.

கீதா



1985 இல் குழந்தை எழுத்தாளர் சங்கம் நடத்திய போட்டியில் ஏ. வி. எம். தங்கப் பதக்கம் பெற்ற கையெழுத்துப் பிரதி இப்போது புத்தகமாக வந்திருக்கிறது. கீதா என்ற சிறுமியின் அன்பு, பரிவு, மதிநுட்பம் ஆகியவற்றை அழகாக எடுத்துக் காட்டும் எட்டுக் கதைகளை, புதுமையான முறையில் கூறுகிறார் இந்திரா அனந்தகிருஷ்ணன். பக்கங்கள்: 68; விலை ரூ. 4,50.

மெழுகு மாளிகை



40 ஆண்டுகளுக்கும் மேலாகப் பலவகையான குழந்தை நூல்களை எழுதிப் புகழ்பெற்ற வாண்டு மாமா, இப்புத்தகத்தில்தேனீக்களையும்,குளவிகளையும்,எறும்புகளையும் பற்றிய விந்தையான பல செய்திகளைக் கூறுகிறார். அவை பற்றிய செய்திகளைப் படிக்கும் போது, ஒரு மர்மக் கதை படிக்கின்ற உணர்வு ஏற்படுகிறது. விளக்கப் படங்களுடன் கூடிய இப்புத்தகத்திலுள்ள பக்கங்கள்: 116; விலை ரூ. 12.50.

— இந்த இரண்டு புத்தகங்களையும் வெளியிட்டோர்: வானதி பதிப்பகம், சென்னை — 17.

(இன்னும் வரும்)



சீன தேசம் தன்னிலே
சிறிய கிராமம் ஒன்றிலே

நடந்த கதையைக் கூறுவேன்
நன்றாய் நீங்கள் கேளுங்கள்

* * * * *

அப்பா வயதோ நூற்றிஎட்டு
அவர்மகன் வயது தொண்ணூறு

அதிகாலையிலே சுறுசுறுப்பாய்
அப்பனும் மகனும் எழுந்திடுவார்

வயலில் வேலை செய்திடுவார்
மாலை வரையில் உழைத்திடுவார்

அப்பா மிகவும் முன்கோபி
அடிக்கடி மகனை அடித்திடுவார்

சிறுசிறு தவறுகள் செய்தாலும்
சீற்றம் கொள்வார் மகன்மீது

எத்தனை தடவை வைதாலும்
எத்தனை அடிகள் கொடுத்தாலும்

பொறுத்துக் கொள்வார் புதல்வருமே
பேசிட மாட்டார் எதிர்வார்த்தை

நாட்கள் தோறும் இப்படியே
நடப்பது வழக்கம் அவர்களுக்குள்

ஒருநாள் மகனைத் தந்தையுமே
ஓங்கி அடித்தார் முதுகினிலே

அடித்ததும் புதல்வர் பதறினரே
'ஐயோ!' என்றவர் கதறினரே

வடித்தனர் கண்ணீர்த் துளிகளையே
வருந்தித் தரையில் அமர்ந்தனரே.

"இத்தனை நாட்கள் உன்னைநான்
எத்தனை தடவை அடித்துள்ளேன்

அத்தனை அடிகளும் பொறுத்தாயே
அலறுவ தேனோ இச்சமயம்?

அடியும் பலமாய் விழுந்ததுவோ?
அதனால் தானோ அழுகின்றாய்?"

—அப்பா இப்படிக் கேட்டதுமே
அருமை மகனும் பதிலுரைத்தார்:

"இதுபோல் பலமுறை நீங்களுமே
என்னை அடித்த போதெல்லாம்

மிகமிக வலிக்கும் ஆனாலும்
வெளியில் காட்டிக் கொள்வதில்லை

இன்றும் ஓங்கி அடித்தீர்கள்
ஏனோ எனக்கு வலியில்லை

'அப்பா உடம்பில் வலுவில்லை
ஐயோ, அதிகம் வயசாச்சே!'

என்பதை எண்ணி எண்ணித்தான்
ஏங்கித் துடித்தே அழுகின்றேன்"



கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர் பட்டியல் (தொடர்ச்சி)

4149 டி. ஆர். பாலாஜி பிரபு, 2042, எல்லை அம்மன் கோவில் தெரு, தஞ்சை
4150 மு. செந்தில்குமார், 12, கிருஷ்ணசுவாமி தெரு, முனிசிபல் காலனி, ஈரோடு—4
4151 அ. பாலசந்தர், 29, ரவி காலனி 2 வது தெரு, பரங்கிமலை, சென்னை—16
4152 இரா.மு. அழகியநாதன், F 15, இந்திராகாந்தி ரோடு, பேர்லண்ட்ஸ், சேலம்—4
4153 எல். ராஜேஷ், 4, ஹட்கோ காலனி, டாட்பாட் P.O. கோவை—12
4154 போ.த. கோபாலகிருஷ்ணன், 10/14, காளீஸ்வர நகர், கோவை—9
4155 ச. ராஜசேகரன், 35, சுப்பிரமண்ய சுவாமி கோயில் தெரு, குயப்பேட்டை, வேலூர்—1
4156 இரா. ராமச்சந்திரன், 61, பெரிய கைக்கால் தெரு, மயிலாடுதுறை
4157 சி. பூரணி, 18, சுந்தரதாஸ் குளத் தெரு, திருச்சி—8
4158 பா. செந்தில்நாயகம், 288, மாரியம்மன் கோயில் வீதி, நீலம்பூர்—641 065
4159 பா. வெங்கட்ரமணி, 5, 38 வது தெரு, நங்கைநல்லூர், சென்னை—61
4160 இரா. பொன்னுசாமி, 53, வி.கே. சாலை, பூளை மேடு, கோவை—4
4161 இரா. இரகு பிரகாஷ், S/o. Dr. இரா. இராதாகிருஷ்ணன், நாடார் மேலரத வீதி, அருப்புக்கோட்டை
4162 இரா. திருமாறன், S/o. ஆர். ராமன், காட்டு கூடலூர், மதுராந்தகம் தாலுகா
4163 என். ராமன், 24, எல்.ஐ.சி. காலனி, தஞ்சாவூர்—7
4164 கு. அன்புச் செழியன், த/பெ. ஆர். குமாரசாமி, சோமயனூர், தடாகம் அஞ்சல் 641 108.
4165 எஸ். கோபாலகிருஷ்ணன், 56, புலிகுத்தி மெயின் ரோடு குகை, சேலம்—6
4166 ஆர். சங்கரநாராயணன், 47/16, சுப்பையர் ஸ்டோர், நே.சு.ச. ரோடு, மலைவாசல், திருச்சி—2
4167 ஜெ. திருத்துவராஜன், 6/90 ஆனந்தகிரி, கொடைக்கானல்—2
4168 ஆர். பத்மபிரியா, த/பெ. எஸ்.கே. ராமச்சந்திரன், பாரஸ்ட் கான்ட்ராக்டர், புதுரோடு, சிறுமுகை—641 302
4169 க. அகல்யா, 144 எம், செல்லி அம்மன் கோயில் தெரு, சங்கர் நகர்—627 357
4170 அ. அப்துல் ஹபீஸ், D 30 A, எஸ்.பி.பி. காலனி, ஈரோடு—10.
4171 பி. காயத்ரி தேவி, பாண்டுரங்கன் இண்டஸ்ட்ரீஸ், சத்தி ரோடு, கவுந்தப்பாடி
4172 ஆர். ராஜகோபாலன், 3, சபாபதிபுரம், திருப்பூர்
4173 ஆர். சாருமதி, 3, சபாபதிபுரம், திருப்பூர்
4174 க. முத்து வடிவு, 6, பாவடி வீதி, ஊத்துக்குளி நகர்—638 751
4175 மு. சீதாளு S/o. கி. முத்துசாமி, ஜூனியர் இஞ்சினியர், துர்காலையா ரோடு, திருவாரூர்
4176 எம். கார்த்திகேயன், 39, சுப்பிரமணிய முதலி தெரு, சென்னை—7
4177 கி. சாய் வெங்கடேஷ், 7, கல்வி வாரு தெரு, சென்னை—4
4178 பி. ராஜேஷ் பாபு, 31 A/11, தேவாங்கர் காலனி, சாலை ரோடு, உறையூர், திருச்சி.
4179 டி. எல். துளசிக் கண்ணன், S/o. டி. லோக கிருஷ்ணன், நீலமலைக்கோட்டை—624619
4180 எஸ். செந்தில்குமார், செந்தில் டீ காபி பார், தெப்பக்குளம், மைதானம், No.3, கோவை—1
4181 ஜெ. பூங்குழலி, Liddels-dale Estate, Naduvattam Post, Nilgris-643 224.
4182 எஸ். மீனு, 478, ஆடியபாதம் வீதி, என்.ஜி.ஜி.ஓ. காலனி, கோவை—22.
4183 ஆர். செந்தில்குமார், எட்டாம் வகுப்பு, 'அ' பிரிவு, அரசுயர் நிலைப் பள்ளி, செட்டிப்பாளையம், கோவை மாவட்டம்.
4184 எஸ்.பி. பாபு, 42/28, குத்பிஷா நகர், தென்னூர், திருச்சி—17
4185 B. Bavani, B 7/2: 5, Sector 1 Vashi, New Bombay, Maharashtra
4186 கே. சுந்தரராஜன், 24, சக்தி வேலம்மாள் தெரு, எஸ்.எஸ். காலனி, மதுரை—16
4187 என். ரவிச்சந்திரன், D-15, இத்தாலியன் அவென்யூ, பிளாக்—27, நெய்வேலி—3
4188 வி. ஆனந்த குமார், 2, பி.எஸ்.எம். காலனி, ஈஸ்வரி நகர், தஞ்சாவூர்—7
4189 எஸ். சிவசண்முகராம், 50 ஏ, நாராயணப் பிள்ளை தெரு, பெரமனூர்—சேலம்—7
4190 டி. குமரேசன், 23, புதுப்பாளையம் மெயின் ரோடு, கடலூர்—2

4191 சித. லெட்சுமணன், 44, புது காலனி, நவாப் தோட்டம், உறையூர், திருச்சி—3
4192 செ. தேவி, 9 ஏ, முருகன் இல்லம், நாராயண வலசு, ஈரோடு—9
4193 எஸ். பானு, 70, சங்கரபுரம், தூத்துக்குடி—3
4194 ர. லதா, 5, பார்க் கிழக்குத் தெரு, சிங்கராயர் காலனி, மதுரை—2
4195 சு. சம்பத்குமார், S/o. சுப்ரமணிய கவுண்டர், சிக்கணத்து அஞ்சல், கோவை மாவட்டம்
4196 பி. ராமு, B 22, சாஸ்திரி ரோடு, தில்லை நகர், திருச்சி—18.
4197 இ. ஹேமலதா, 1, 2வது தெரு, இராமசாமிபுரம், திண்டுக்கல்
4198 டி. ஆதித்தன், 5, சீனிவாசபுரம், ஆனைமலை—642 104
4199 ஆர். பாலாஜி, 92/11, முதலியார் ஸ்டோர், வடக்கு ஆண்டார் வீதி, திருச்சி—2
4200 வெ. ராஜேஷ் கன்னு, 30, பெரிய சௌராஷ்டிரத் தெரு, உறையூர், திருச்சி—3.
4201 சி.கே. காயத்ரி, கே 2, புண்ணிய கோடி முதலியார் தெரு, கோவை—2
4202 கோ. கீர்த்திவாசன், S/o Dr சு. கோபாலன், கடகம்பாடி அக்ரஹாரம், சரபோஜி ராஜபுரம், தஞ்சை மாவட்டம்
4203 கி. அய்யம்பெருமாள், 1/7, காளியப்ப பிள்ளை தெரு, கீழூர், தூத்துக்குடி
4204 சோ. செல்வக்குமார், 1/8, வடக்குத் தெரு, சங்கரலிங்கபுரம், விருதுநகர் மாவட்டம்
4205 ஈ. சந்தான வடிவேல், 1/3, லட்சுமி விலாஸ், அக்ரஹாரம், தெற்குச் சந்து, வாசுதேவநல்லூர்—627 758
4206 டி. அந்தோணி மரியா ஜோசப், 28, கஸ்தூரிபாய் தெரு, பண்ருட்டி—607 106
4207 எஸ். சிவானந்தன், 13D, ராஜாக் காடு, ஈரோடு—1.
4208 கே.ஜி. திருநாவுக்கரசு, 25, ராஜாஜி தெரு, பொள்ளாச்சி
4209 பா. மனோகரன் C/o. கே. பாலகிருஷ்ணன், புஷ்பவனம் அஞ்சல், வேதாரண்யம்
4210 கே. வெங்கடேசன், 10, எப்.ஜி.கே. ஸ்கொயர், குறிச்சி, சுந்தரபுரம்—641 024
4211 ஹ. வெங்கடேஸ்வரன், ஈ 1 ஈ.டபிள்யூ. எஸ். பிளாட்ஸ், அமுதம் காலனி, தெற்கு போக் ரோடு, சென்னை—17.
4212 V. Anuradha DB-83, D, D.D.A. Flat, G 8, Rajouri Garden, Harinagar, New Delhi 110 064.
4213 அ. சக்திவேல், 2/84, பாலாஜி நகர், ஆவரம்பாளையம் ரோடு, கோவை—44
4214 எஸ். ராஜ்குமார், 6/37, ரேஸ்கோர்ஸ், கோயமுத்தூர்.
4215 ஆ. தியாகராஜன், 60 வடக்கு ரத வீதி, வாசுதேவநல்லூர்—627 758
4216 வி.டி. முரளி சுவாமிநாதன், 47, பெரிய சாலியத் தெரு, கூறைநாடு, மயிலாடுதுறை
4217 ஆ. திருநாவுக்கரசு, கே.சி.பி. பில்டிங், உதகமண்டலம்
4218 எஸ். சண்முகநாதன், 163, அணைக் கரைத் தெரு, தென்காசி
4219 ஆர்.பி. ஸ்ரீகுமார், பி 10/1, ரேஸ்கோர்ஸ் காலனி, மதுரை—2
4220 த. தனபால் C/o. சின்னப்பக் கவுண்டர், போலீஸ் ஸ்டேஷன் எதிரில், ஆட்டையாம் பட்டி, சேலம் மாவட்டம்
4221 த. பானுஸ்ரீ C/o சின்னப்ப கவுண்டர், போலீஸ் ஸ்டேஷன் எதிரில், ஆட்டையாம் பட்டி, சேலம் மாவட்டம்
4222 ஆர். பார்வதி, 4, தாடாளன் தெற்கு மடவிளாகம், சீர்காழி—609 110
4223 டி. ஆர். தினகரன், 30, ஆசாரிமார் தெரு, அருப்புக்கோட்டை
4224 ஆர். சம்பத்குமார், 32/148, தாமஸ் வீதி, கோவை
4225 பி. ஸ்ரீமதி, 18, புது அக்ரஹாரம், நல்லான்பட்டறை, வேலூர்—1 (வ.ஆ.)
4226 பி. ஜெயகணேஷ், 18, புது அக்ரஹாரம், நல்லான்பட்டறை, வேலூர்—1 (வ.ஆ.)
4227 எஸ். ராஜேஷ், 9, சடகோபன் தெரு, மன்னார்குடி
4228 இரா. கதிரேசன், 13/188, என்.எச். காலனி, பெருமாள்புரம், திருநெல்வேலி—7
4229 தமிழ் அரசன், கன்னுங்காட்டு மேடு, சின்னியம்பாளையம்—638 104.
4230 கே. பாஸ்கரன், 1/281 C, சாமிக்கவுண்டன் புதூர், குப்புசாமி நாயுடுபுரம்—638662
4231 எஸ். கார்த்திகேயன், 121, நடுத் தெரு, வத்ராப்—626 132
4232 ஜி. செல்வப் பிரகாஷ், 2640, சாந்தார் சன்னதி, புதுக்கோட்டை
4233 கி.போ. இராதாகிருஷ்ணன், S/o. ஆர். போத்தி, வடக்குத்தெரு, கொட்டாரம்—629703
4234 இ. சுரேஷ் குமார், 6, இராகவனார் தெரு, செங்கற்பட்டு
4235 ஆர். சுபாஷ், காமராஜர் தெரு, எம். களத்தூர், திருச்சி மாவட்டம்
4236 ஆர். விஸ்வநாதன், 9, கோகுலம் காலனி, சீனிவாச பிள்ளைத் தெரு, சென்னை—33
4237 ஜி. எழில் முகந்தன், 85; எழிலகம், பாப்பாரப்பட்டி—636 809
4238 ஆர். அலமேலு, 34, நரசிம்ம நாயுடு தெரு, திருச்சி—8
4239 என். சீனிவாசன், C 102, கிரசென்ட் ரோடு, திருவேங்கிட நகர், சென்னை—53
4240 மா. லாரன்ஸ், 21, ஈரோடு சாலை, வேலாயுதம்பாளையம் 639 117
4241 எம். அசோக், 2 ஏ, தேரு தெரு, எஸ்.எஸ். காலனி, மதுரை—16
4242 ஆர். எஸ். பானுப்பிரியா, 27, ராமு பிள்ளை சந்து, தெற்கு வாசல், மதுரை—1
4243 ஆர். எஸ். ஆனந்தி, 27, ராமு பிள்ளை சந்து, தெற்குவாசல், மதுரை—1
4244 பி. கணபதி, 4, அவதானம் பாப்பையர் தெரு, சூளை, சென்னை—7
4245 திரு. லெட்சுமணன், 1 ஏ, 3 ரோடு, வலையப்பட்டி, புதுக்கோட்டை மாவட்டம்


(இன்னும் வரும்)





காவிரிக் கரையில் சீர்காழி என்ற ஊர் முந்நாளில் பிரும்மபுரம் என்ற பெயரில் விளங்கியது.
சீர்காழியில் சிவபாத இருதயர் என்ற அந்தணர் வசித்து வந்தார்.
சுவாமி! உங்களுக்கு ஆண் குழந்தை பிறந்திருக்கிறது... சீக்கிரம் வீடு திரும்பும்!
மகிழ்ச்சி பொங்க இல்லம் திரும்பினார் சிவபாத இருதயர்...
திருவாதிரை நட்சத்திரத்தில் பிறந்திருக்கிறான்... பெரும் புகழோடு விளங்குவான்.
சம்பந்தன் சிறு தேர் உருட்டி வீதிகளில் விளையாடினான்...
தகப்பனுடன் தினம் கோயிலுக்குப் போய் வந்தான்.
ஞானச்செல்வன் சம்பந்தன்
கதை: ஆனந்தி
படம்: வினு



ஒரு நாள் இருள் பிரியாத அதிகாலை... வழக்கம் போல் சிவபாத இருதயர் நீராடக் கிளம்பினார்....
நானும் வரேன்...
ரொம்பக் குளிருமே...
குழந்தை பிடிவாதம் செய்ய அவர் தூக்கிச் சென்றார்... குளக்கரையில்...
இந்த இடத்தை விட்டு நகராதே... குளித்து விட்டு வருகிறேன்....
தந்தை நீரில் மூழ்கி ஜபம் செய்ய, தனித்து விடப்பட்ட சம்பந்தன்.....
அம்மா... அப்பா... காணும்... உம்... உம்...
சம்பந்தன் எழுந்து நின்று கோயில் கோபுரத்தை நோக்கி அழ...
தேவி! இந்த அருட் செல்வனுக்கு ஞானப்பால் கொடு!
பொன் கிண்ணத்தில் குழந்தைக்குப் பாலூட்டினாள் பார்வதி. குழந்தைமேல் பால் சற்று வழிந்தது.


நீராடி, தியானம் முடிந்து கரை யேறினர் சிவபாத இருதயர்....
இதென்ன! மேலே பால் வழிகிறதே!.. ..யாரடா பால் கொடுத்தது?
குழந்தை சிரிக்க, தந்தை கோபம் கொண்டு....
என்னடா சிரிக்கிறாய்? யார் இங்கு வந்தார்கள்:.... சொல்!
உடனே சம்பந்தன் பாட ஆரம்பித்தான்....
தோடுடைய செவியன் விடைஏறியோர் தூவெண்மதி சூடிக் காடுடைய சுடலைப் பொடி பூசி என் உள்ளம் கவர் கள்வன்....
இதற்குள் நன்கு பொழுது விடிந்து, நீராட வந்த அந்தணர்கள் சிலர், குழந்தை பாடுவது கண்டு அதிசயித் தார்கள்......
ஏடுடைய மலரான் முனை நாள் பணிந்தேத்த அருள் செய்த பீடுடைய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே
சிவபாத இருதயர் நடந்ததைக் கூற...
...இவன்மேல் பால்வழிந்திருக்கிறது!
நீர் மகா புண்ணியவான்! இந்த சம்பந்தன் முருகன் அவதாரம்!


உமையன்னையேதான் குழந்தைக்கு ஞானப் பால் ஊட்டியிருக்கிறாள்!
இவன் சம்பந்தன் இல்லை; சிவ ஞான சம்பந்தன்!
வீடு திரும்பி நடந்ததைக் கூற, அன்னை பகவதி அகமகிழ்ந்து...
குழந்தைக்கு திருஷ்டி சுற்றிப் போடணும்....!
மறுநாள் சிவபாத இருதயர், சம்பந்தனைத் தூக்கிக் கொண்டு அருகிலுள்ள திருக்கோலக்கா என்ற கோவிலுக்குச் சென்றார்.
பிராகாரத்தை வலம் வந்து சந்நிதி முன் நிற்க....
மடையில் வாளைகள் பாய மாதரார் குடையும் பொய்கைக் கோலக்காவுளான்.......
பாடலைக் கேட்டு பரவசமடைந்து லிங்க உருவிலிருந்த சிவபெருமானே பேசினார்...
தித்திக்கும் தமிழில் பாடும் இந்தக் குழந்தையின் கைகள் தாளம் போட்டுச் சிவந்து கன்றி விட்டனவே!


சம்பந்தனுடைய கைகளில் பொன்னால் செய்த தாளங்கள் தோன்றின!
நமசிவாய
நமசிவாய
சிவபாத இருதயரும் கோயில் அர்ச்சகரும் அதிசயித்தார்கள்.
இந்தப் பிள்ளை ஈசன் அருள் பெற்றுள்ளான்! ஊர் ஊராக அழைத்துச் செல்லுங்கள்
வீடு திரும்பியபோது பகவதி... ...
இவரை அப்பா அனுப்பியிருக்கிறார்...
பேரனைத் தமது ஊருக்கு அழைத்து வருமாறு அவன் தாத்தா கேட்டுக் கொள்கிறார்.
குழந்தையைத் தோளில் சுமந்து சென்றார் சிவபாத இருதயர்...
அப்பா இது என்ன ஊர்?
இதுதான் நனிபள்ளி. உன் அம்மாவுடைய ஊர்.
அதோ தாத்தா வருகிறார் பார்!
சைவம் தழைக்கப் பிறந்த ஞானசம்பந்தா வருக!


வீட்டை அடைந்து பெரியோரை வணங்கினர்.
பகவதி! உன் மகனால் இந்த ஊருக்கே பெருமை...!
உலகுக்கே பெருமை என்று சொல்!
பேரனைக் கட்டி அணைத்துச் சிலிர்த்தார் தாத்தா....
நனிபள்ளியில் கோயில் கொண்டிருக்கும் இறைவனைக் கும்பிட்டுப் பாடுகிறாயா?
ஓ! கோவிலுக்குப் போகலாம்....
நனிபள்ளியிலிருந்து ஒவ்வொரு தலமாகச் சென்றனர். திருவெண்காட்டில்....
கண் காட்டும் நுதலானும் கனல் காட்டும் கையானும் பெண் காட்டும் உருவானும் பிறை காட்டும் சடையானும்...
பண்காட்டும் இசையானும் பயிர்காட்டும் - புனல் நின்ற வெண்காட்டில் உறைவானும் மெய்காட்டி அருள்வானே!
சம்பந்தன் புகழ் பரவியது...
ஞானசம்பந்தன் என்று பெயர். குழந்தை என்னமாய்ப் பாடுகிறது தெரியுமா!
திருக்கோலக் காவில் ஈசனே பொற்தாளங்களைக் கொடுத்தாராம்!..




சம்பந்தரை, தங்கள் ஊருக்கு அழைக்கப்பலரும் வந்தனர்....
ஐயா, தங்கள் ஞானப் புதல்வருடன் எங்கள் ஊருக்கு வரவேணும்....
எங்க ஊரும் பக்கத்திலேயே இருக்கிறது...
பல ஊர்களுக்கும் சென்று சீர்காழி திரும்பினர்...
அப்பா, நம் ஊருக்குத் தோணிபுரம் என்றும் ஒரு பெயர் உண்டல்லவா?
ஆமாம். அதற்கு ஒரு வரலாறும் இருக்கிறது....
ஒரு காலத்தில் சமுத்திரம் பொங்கி பூமியை மூழ்கடித்தது.....
...பிரணவம் என்ற படகில் (தோணி) சிவனும் பார்வதியும் கடலில் மிதந்தார்கள்...
அதோ! ஒரே ஒரு இடம் மட்டும் வெள்ளத்தில் மூழ்காம லிருக்கிறது!
அங்கு நாம் தங்குவோம். அது மூலாகார க்ஷேத்ரம் என்று பெயர் பெறும்.
அது தான் இந்த ஊர்- தோணிபுரம். சுவாமிக்குத் தோணியப்பர் என்று பெயர்!
இறையருளால் வெள்ளம் வடிந்து மீண்டும் பூமி தழைத்தது இல்லையா?
ஆமாம்.


சம்பந்தர் கதை கேட்டுக் கொண்டிருந்தபோது....
சுவாமி! திருநீலகண்ட யாழ்ப்பாணர் நம் ஊருக்கு வந்து கொண்டிருக்கிறார்...
சிவ பக்தரை எதிர் கொண்டு அழைப்போம்....
வருக யாழ்ப்பாணரே! தோணியப்பருக்கு யாழ் வாசிக்க வந்தீரோ?
சிவ நெறி தழைக்கச் செய்யும் தங்களையும் தரிசிக்க வந்தோம்!... இதோ, என் மனைவி....
நீலகண்ட யாழ்ப்பாணர், ஞானசம்பந்தருடனேயே இருந்து, அவர் பாடும் போது யாழ் வாசித்து வந்தார்...
ஊர் ஊராகச் சென்று பாடிக் கொண்டிருக்கும்போது அரத்துறை என்ற ஊரில்...
என்ன தூக்கம் இது? என்னைத் தரிசிக்க வரும் சம்பந்தன் நடந்து ஓய்ந்திருக்கிறான்.
திடுக்கிட்டு எழுந்த அந்தணர்கள் சம்பந்தரை எதிர்கொள்ள ஓடினர்கள்...
தங்களைத் தம்முடைய கோயில் முத்துப்பல்லக்கில் ஏற்றி அழைத்து வரவேண்டும் என்று கனவில் ஈசன் கட்டளை!
திங்கள் கொழுந்து அணியும் சடையனின் கருணையே கருணை!



சம்பந்தருடைய ஏழாவது வயதில் அவருக்கு உபநயனம் நடந்தது.
கருமபுரத்துக்குச் சென்றபோது சம்பந்தர் 'மாதர் மடப்பிடி' என்று பாடலைப் பாட, நீல கண்ட யாழ்ப் பாணர்...
ஆ! இந்தப் பண்ணை யாழில் வாசிக்க முடியவில்லையே!
நீல கண்டருக்கு வருத்தம் மிக...
இந்த யாழை முறித்து விடுகிறேன்.
வேண்டாம்! குரல் ஈசன் தந்தது. யாழ், மனிதன் உருவாக்கிய கருவி. ஒப்பு நோக்கலாமா?
நீல கண்டர் மனம் தெளிந்தார்.
நீங்கள் இன்று பாடிய பண் யாழ்முரிப்பண் என்று பெயர் பெறும்!
கொல்லிமழவன் என்ற அரசனுடைய மகளுக்கு முயலகன் என்ற நோய் இருந்தது.
தாங்கள் தான் என் மகளைக் காப்பாற்ற வேண்டும்.
ஈசனைப் பிரார்த்திப்பது தவிர வேறொன்றும் அறியேன்!...


கோவில் துவஜஸ்தம்பத்தின்
அருகே அந்தப் பெண்ணைக்
கிடத்தினார்கள். சம்பந்தர்
மனமுருகிப் பாடினார்...
மணிவளர் கண்டரோ!
மங்கையை வாட மயல்
செய்வதோ! இவர் மாண்பு...
அனைவரும் அதிசயிக்க,
மன்னன் மகள் நோய்
நீங்கி எழுந்தாள்...
நான்
என்ன
கைம்மாறு
செய்வேன்?
எல்லாம் ஈசன் செயல்!
தல யாத்திரை தொடர்ந்தது.
பட்டீச்சுரம் என்ற ஊரை
நெருங்க...
கடுமையான வெய்யில்! கொளுத்துகிறதே!
அப்போது ஓர் அற்புதம்
நிகழ்ந்தது.....
இறைவா! ஏழை எனக்குக்
கருணை காட்டி முத்துப்
பந்தல் அனுப்பி நிழல்
தரத் திருவுளம்
கொண்டாயா!
திருநாவுக்கரசரும், ஞானசம்பந்தரு
மாகச் சேர்ந்து திருவீழிமிழலைக்குச்
சென்றார்கள். அப்போது.....
சுவாமி! நீண்ட நாளாய் மழை
இல்லை...
கடும்
பஞ்சம்!


அடியார்கள் இருவரும் இறைவனைத் துதிக்க...
தினந்தோறும் காலையில் கிழக்கு மேற்கு பீடங்களை நோக்குங்கள்!
தினம் ஒரு பொற்காசு தந்தார் ஈசன்.
ஆ!
ஆச்சர்யம்!
இருவரும் அந்தப் பொற்காசுகளைக் கொண்டு ஏழைகளுக்கு அன்னம் அளித்தனர்...
மவராஜா. நீ நல்லா இருக்கணும்!
கடவுளுக்கு நன்றி செலுத்துங்கள்!
பாண்டிய நாட்டில் நெடுமாற பாண்டியன் சமணரையே ஆதரித்து வந்தான். பட்டத்தரசி மங்கையர்க்கரசி முதல் மந்திரியை அழைத்து...
குலச்சிறையாரே! நீங்கள் முதல் மந்திரியாக இருந்து என்ன பயன்?..
நீங்கள் சைவராக இருந்தும் மன்னரைச் சமணர் பிடியிலிருந்து மீட்க முடியவில்லையே...?
தேவி! பரம சிவ பக்தையான தங்களாலேயே அதைச் சாதிக்க முடியாதபோது....



... சமணர்களுடைய சூழ்ச்சி நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது!
நீங்கள் தான் ஏதேனும் உபாயம் கூற வேண்டும்.
தேவி! திருமறைக் காட்டில் திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசரோடு தங்கி இருக்கிறாராம்....
ஆ! சம்பந்தரை அழைத்து வந்தால் மதுரை நகரமே பொலிவுறும். உடனே புறப்படுங்கள்!
அரசியின் கட்டளையை ஏற்று குலச்சிறையார் திருமறைக் காட்டுக்கு வந்து...
சுவாமி! மதுரைக்குத் தாங்கள் வரவேண்டும். மாநகரில் பஞ்சாக்ஷரம் சிறக்க வேண்டும்.
ஞானசம்பந்தர் மதுரைக்குக் கிளம்பவும் நாவுக்கரசர் எச்சரித்தார்.....
சமணர்கள் மந்திர தந்திரங்களில் வல்லவர்கள். நீயோ வயதில் சிறியவன். கிரக நிலையும் சரியில்லை....
சுவாமி! கவலை ஏன்? சிவபெருமான் என் உள்ளத்தில் குடி கொண்டிருப்பதால் ஞாயிறு, திங்கள், செவ்வாய் முதலிய எல்லா கிரகங்களும் நல்லவையே... அவை நல்ல நல்ல அடியாரவர்க்கு மிகவே!




மதுரையில் மங்கையர்க்கரசி வரவேற்றாள்...
வருக! வருக! சிவஞானக் கொழுந்தே, வருக!
மங்கையர்க்கரசிக்கு மங்களம்!
சம்பந்தர் வருகையால் சைவம் தழைக்கும் என்றும் மன்னரிடம் தங்களுக்குள்ள செல்வாக்குக் குறையும் என்றும் அஞ்சிய சமணர்கள்...
இந்த மடத்தில்தான் சம்பந்தன் உறங்குகிறான்...
இன்றோடு தொலைந்தான்!
சமணர்கள் வைத்த தீ சுற்றிலும் கொழுந்து விட்டெரிய...
...சம்பந்தரும் சிவனடியார்களும் இருந்த இடம் மட்டும் குளிர்ந்திருந்தது....
சைவர் வாழ் மடத்து அமணர்கள் இட்ட தீத்தழல் பையவே சென்று பாண்டியற்காக...


சம்பந்தர் பாடியதற்கேற்ப மன்னன் நெடுமாறனுக்குக் கடுமையான ஜுரம் கண்டது. சமணர்கள் மந்திரித்தார்கள்...
பொறுமையாயிருங்கள்! மந்திரம் சீக்கிரமே வேலை செய்யத் தொடங்கும்...
ஆ! அம்மா!
மங்கையர்க்கரசி மனம் பதறி...
அன்பரே! ஞான சம்பந்தப் பெருமானை அழைத்தால் நோய் மறைந்து போகும். அனுமதி கொடுங்கள்...
சரி!
சம்பந்தர் வந்து மன்னர் நெற்றியில் விபூதி இட்டு...
மந்திரமும் மருந்துமாகித் தீர்ப்பது ஆலவாயன் திருநீறே!
திருநீறு அணிந்த மன்னர் நோய் நீங்கி சுகமடைந்தார்.
என்னைக் காப்பாற்றினீர்கள்!
எல்லாம் ஈசன் அருள்.
சமணர்கள் பொறுமை கொன்று...
இதில் ஏதோ சூது இருக்கிறது. ஒப்புக் கொள்ள மாட்டோம்!
அனல் வாதம், புனல் வாதம் செய்வோம்!




சம்பந்தர் ஏற்றுக் கொண்டு 'தளிரிள வளரொளி' என்ற பதிகம் எழுதி நெருப்பிலிட்டார்...
பாருங்கள், சம்பந்தர் ஓலை பச்சை நிறம் மாறாமலிருக்கிறது!
ஆனால் சமணர்கள் போட்ட ஓலை....
ஐயோ! கருகி சாம்பலாகி விட்டதே!
அனல் வாதத்தில் தோற்றாலும் புனல் வாதத்தில் வெல்வோம்!
வைகை நதியில் சம்பந்தர் பதிகம் எழுதிப் போட்ட ஓலை நீரோட்டத்தை எதிர்த்து வர, சமணர்கள் போட்ட ஓலை அடித்துச் செல்லப் பட்டது.
ஹூம், புனல் வாதத்திலும் தோல்வியா... கிளம்புங்கள், பாண்டிய நாட்டில் இனி நமக்கு இடமில்லை.
மங்கையர்க்கரசி மன மகிழ்ந்து...
சுவாமி! பாண்டியரின் உயிர் காத்தீர்கள்; பாண்டிய நாட்டில் சைவத்தைக் காத்தீர்கள்....
தாயே! உன்னுடைய ஆழ்ந்த பக்தியும் மன உறுதியும் அதற்கு முக்கிய காரணம்.
சம்பந்தர் தல யாத்திரைகளைத் தொடர்ந்தார்... திருப்பூந்துருத்தி என்ற ஊரில் திருநாவுக்கரசரை நினைந்து....
அப்பர் பெருமான் இப்போது எங்கே இருக்கிறார்? யாருக்காவது தெரியுமா?
இதோ இருக்கிறேன்!


சம்பந்தர் பதறினார். சிவிகை விட்டு இறங்கி....
ஐயனே இப்படிச் செய்யலாமா? என்னை நீர் சுமப்பதா?
சமணரை வென்று சைவம் தழைக்கச் செய்த இளங்கன்றைச் சுமக்கும் பாக்கியம் கிட்டியது எனக்கு!
சோழ தேசத்திலும் பாண்டிய நாட்டிலும் தொண்டை மண்டலத்திலும் பல தலங்களைத் தரிசித்தார் சம்பந்தர். அவையெல்லாம் அவருடைய பாடல் பெற்ற தலங்களாயின...
ஞான சம்பந்தருக்கு நம்பாண்டார் நம்பி என்ற சிவபக்தரின் மகளைத் திருமணம் செய்து வைத்தார்கள்...
ஈசன் புகழையே பாடி வரும் எனக்கு இவ்வாழ்க்கை எதற்கு? இவளையும் சிவனருளில் கலந்து விடச் செய்வேன்.
பெருமணம் என்ற ஊரில்....
இதென்ன அதிசயம்! கோவில் ஜோதி வடிவாக ஜொலிக்கிறதே!
பிறவிப் பிணி தீர விரும்புவோர் என்னுடன் வாருங்கள்... இந்த ஜோதியில் கலந்து மறைந்து விடுவோம்!
வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது நாதன் நாமம் நமச்சிவாயவே!

புதையல் வீடு

டாக்டர் பூவண்ணன்



4. தரமான தரகர்

சுமதியும் செங்கோடனும் சிறிது தூரத்தில் இருந்தாலும், ரங்கசாமியும் கார்க்காரனும் பேசுவது அவர்கள் காதில் ஓரளவு விழுந்தது. ரங்கசாமி "தாத்தாவைக் கொல்லப் போறீங்களா?" என்று பயந்து, பதறிக் கொஞ்சம் உரக்கவே கேட்டுவிட்டார். அது தெளிவாகக் கேட்டது. "ஆமாம்" என்ற பதிலும் கேட்டது.


இதைக் கேட்டதும் செங்கோடனும் சுமதியும் திடுக்கிட்டனர். ரங்கசாமி மேலே பேசவே அதை உற்றுக் கேட்டனர்.

"ஐயா! ஏதோ கொசுவை அடிக்கிறாப் போல அவ்வளவு எளிதா தாத்தாவைக் கொல்றேன்னு சொல்றீங்க. அவர் சாவோடு எனக்குத் துளி சம்பந்தம் இருக்கிறதா தெரிஞ்சாக்கூட, இந்த ஊர்க்காரங்க எங்க குடும்பத்தையே அழிச்சிடுவாங்க. நீங்களும் தப்பிச்சிட முடியாது. அதனாலே இந்த ஊர் மண்ணை மிதிச்சு நின்னுக்கிட்டு இந்த ஊர் மதிக்கிற ஒருத்தரைக் கொன்னுடலாம்னு மனத்தாலே கூட நினைக்க வேணாம். நீங்க எனக்குக் கொடுத்த ஆயிரம் ரூபாயை அப்படியே வச்சிருக்கேன். இப்பவே திருப்பித் தரேன். வாங்கிட்டுப் பட்டணம் போய்ச் சேருங்க!"

ரங்கசாமியின் சொற்கள் கார்க்காரனின் முகத்தைச் சுருங்கச் செய்தாலும், சுமதி—செங்கோடனின் முகத்தையும் அகத்தையும் மகிழ்வித்து மலர்த்தின. 'ரங்கசாமி பொய் பேசற சாதாரண தரகர் இல்லே! சத்தியத்துக்குக் கட்டுப்படும் தரமான தரகர்!' என்பதை உணர்ந்து பூரிப்படைந்தனர்.

கார்க்காரன் இளநீரை முழுவதுமாகப் பருகவில்லை. என்றாலும் அதைக் கீழே போட்டுவிட்டான். முகத்தில் புன்னகையை வரவழைத்துக் கொண்டு பேசினான்: "அடடே! இதுக்குப் போய்க் கோபிக்கறியே! நான் சும்மா சொல்லிப் பார்த்தேன். அவ்வளவுதான். மண்டபத்தை எனக்கு வாங்கித் தந்தாலும் சரி, தராவிட்டாலும் சரி, உனக்கு அட்வான்சா கொடுத்த ஆயிரம் ரூபாய் உனக்கே சொந்தம். கொடுத்ததைத் திருப்பிப் பெறுகிற குணம் என்னிடம் இல்லே."

சொன்னவாறு கார்க்காரன் ரங்கசாமியின் தோளில் கையைப் போட்டு அவரை அருகே இழுத்து அணைத்துக் கொண்டான். "சரி, ரங்கசாமி ஒருத்தர் மனசு எப்பவும் ஒரே மாதிரியா இருக்



காது. திரும்பவும் வாய்ப்புக் கிடைக்கிறபோது, பேசிப்பாரு. மண்டபத்தை விற்கலேன்னாலும் பரவாயில்லே, அதை ஓர் ஆறு மாசம் வாடகைக்குத் தருவாரான்னு கேட்டுப் பாரு. நான் அப்பப்போ வந்து உன்னைப் பார்க்கிறேன்.''

கார்க்காரன் காரின் கதவைத் திறந்து அதில் ஏற முயன்றான். பிறகு ஏதோ நினைவு வந்தவனாக பாக்கெட்டில் கைவிட்டு பர்ஸை எடுத்தான். அதிலிருந்து ஒரு நூறு ரூபாய் நோட்டை எடுத்து ரங்கசாமியின் கையில் திணித்தான்.

''எதுக்குங்க நூறு ரூபாய்?''

''இளநீருக்குக் காசு தர வேணுமா? வேறே சில்லறையில்லே. இளநீருக்குக் கொடுத்தது போக மீதியை நீ வச்சிக்கோ.''

அவன் காரில் உட்கார்ந்தான்.

''ஏங்க, அந்த மண்டபமே வேணும்னு இவ்வளவு பிடிவாதமா இருக்கிறீங்களே, காரணம் என்னங்க? அதாவது உண்மையான காரணம்?''

''கலை ஆர்வம்தான்.''

அவன் சொன்ன மறுநொடி கார் புறப்பட்டு ஈரோடு செல்லும் பாதையில் பறந்தது.

அவன் சொன்னது முழுப் பொய் என்பது ரங்கசாமிக்கு நன்றாகத் தெரிந்தது. 'இதில் ஏதோ விபரீதம் ஏற்படலாம். நாம் விலகியிருப்பது நல்லது' என்னும் முடிவோடு அவர் இளநீர் கடை நோக்கி நடந்தார்.

சுமதியும் செங்கோடனும் பள்ளிக்கூடத்தை நோக்கிச் செல்லத் தொடங்கினர்.

''செங்கோடா! உங்க மண்டபத்துக்கு விலையா இருபதாயிரம் முப்பதாயிரம்னு தர நினைக்கிறாங்க. அதுக்காக ஒரு கொலை செய்யவும் துணியறாங்க. அப்படின்னா, மண்டபத்திலே நிச்சயமா, உறுதியா ஏதோ விலை மதிக்க முடியாத பொருள் — புதையல் இருக்குன்னு தெரியுது., அதனாலே மண்டபத்தையும் கண்ணுங் கருத்துமா காப்பாத்தணும், உங்க தாத்தாவையும் காப்பாத்தணும்.''

சுமதி சொன்னதைச் செங்கோடன் ஏற்றுக் கொண்டான். 'மண்டபத்தில் ஏதோ மர்மம் இருக்கு? அதென்ன?' என்று அந்த நிமிடத்திலிருந்தே யோசிக்கத் தொடங்கிவிட்டான்.

பத்து நாட்கள் சென்றன. ரங்கசாமி மீண்டும் வந்து விலை பேசவில்லை. 'வாடகைக்குத் தருகிறீர்களா?' என்றும் கேட்கவில்லை. மண்டபத்தை வாங்க விரும்பியவனும் ஊருக்குள் வந்ததாகத் தெரியவில்லை.

சுமதி இப்போது தினமும் செங்கோடன் வீட்டுக்குச் சென்றாள்.

பள்ளிக்கூடம் விட்டதும் இருவரும் சுமதி வீட்டுக்குச் செல்வார்கள். அங்கே சிற்றுண்டியும் காப்பியும் சாப்பிட்ட பிறகு, செங்கோடன் வீட்டுக்குச் செல்வார்கள். சுமதி கல் தூணில் உள்ள கலைக் காட்சியை—கண்ணன் சிற்பத்தை அணு அணுவாக ரசிப்பாள். எல்லாம் அவள் தாத்தா ஏற்படுத்திய ஈடுபாடு. அவள் ரசிப்பதைப் பார்த்து அவள் சொல்லும் நுணுக்கத்தைக் கேட்டுச் செங்கோடன் வியந்து போவான்.

இருள் சூழும்போதுதான் சுமதி வீட்டுக்குத் திரும்புவாள். அவள் வேண்டாம் என்று மறுத்தாலும் செங்கோடன் துணைக்கு வருவான்.

ஒருநாள் சுமதி சித்தப்பாவிடம், "நான் ஒரு பொருள் கேட்பேன். வாங்கித் தர்றீங்களா சித்தப்பா?" என்று கேட்டாள்.

"அதென்னம்மா, இப்படிச் சந்தேகத்தோடு, தயக்கத்தோடு கேக்கறே. உனக்கு என்ன வேணுமோ அதை வாங்கிக் கொடுங்களேன்னு உரிமையோடு உத்தரவு போட வேண்டியது தானே?" என்று கூறினாள் அருகேயிருந்த சித்தி.

"சித்திதான் சொல்லிட்டாளே! உத்தரவு போடம்மா" என்று சிரித்துக்கொண்டே சொன்னார் முத்துசாமி.

"எனக்கு ஒரு சைக்கிள் வேணும்."

"இவ்வளவுதானே! இன்னைக்கே வாங்கித் தரேன்" என்று உடனே கூறினார் முத்துசாமி.

"எம் பொண்ணு முதமுதலா ஒரு பொருளைக் கேட்டிருக்கா. அதனாலே உள்ளூரிலேயே ஏதோ ஓட்டை உடைசல் சைக்கிளை வாங்கித் தராம, கோயமுத்தூருக்குப் போய் நல்ல சைக்கிளா பார்த்து வாங்கிக் கொடுங்க" என்றாள் சித்தி பத்மா.

"உத்தரவுப்படியே" என்று அடங்கியவர் போல நடித்துச் சிரித்தார் முத்துசாமி.

இருவருக்கும் பட்டணத்தில் வாழ்ந்த சுமதி தம்முடன் இருக்கப் பிடிக்காமல் தொல்லை தருவாளோ? என்ற சந்தேகம் இருந்தது. ஆனால் சுமதி இருவரிடமும் பாசத்தோடு பழகி, மிக இயல்பாக நடந்து கொள்ளும் குணம் பிடித்திருந்தது. அதனால் அவளிடம் அளவற்ற அன்போடு பழகினர்.

அன்றே முத்துசாமி கோவை நகருக்குச் சென்று சிறந்த சைக்கிள் ஒன்றை வாங்கிக் கொண்டு வந்தார்.

சுமதிக்குக் கூட்டம் நிறைந்த சென்னையிலேயே சைக்கிள் ஓட்டத் தெரியும். இங்கே சைக்கிள் ஓட்டுவது

பாட்டியின் பதில்!



தெருவிலே ஒரு வயதான பாட்டி மண்பானையில் தண்ணீர் எடுத்துச் சென்றுகொண்டிருந்தாள். அப்போது நான் விளையாட்டாக எறிந்த கல் பானையில் பட்டு உடைந்துவிட்டது. தண்ணீர் முழுவதும் கீழே சிந்திவிட்டது. பாட்டி என்னைக் கோபத்துடன் பார்த்தாள். அப்போது நான் பாட்டியின் அருகிலே சென்று, "பாட்டி, பாட்டி, உங்கள் பானையை நான் உடைக்கவில்லை. கல்தான் பானையை உடைத்தது" என்றேன்.

உடனே அந்தப் பாட்டி, என் முதுகில் 'பளீர், பளீர்!' என்று அடித்தாள். உடனே நான், "ஏன் பாட்டி என்னை அடிக்கிறீங்க?" என்று கேட்டேன்.

"நானா உன்னை அடித்தேன்? என் கைதான் உன்னை அடித்தது!" என்றாள். எனக்கு அப்போதுதான் புத்தி வந்தது!


— ஆறு. அண்ணாதுரை (10403),
பஞ்சை, மகாதானபுரம்.

சிரமம் இல்லை. ஊரைவிட்டு விலகியிருக்கும் செங்கோடன் வீட்டுக்கு அடிக்கடி செல்வதற்காகவே அவள் அந்தச்சைக்கிளைக்கேட்டுப்பெற்றாள்.

சைக்கிளின் பின்னால் சிலசமயம் செங்கோடனை ஏற்றிக் கொண்டும் செல்வாள். இரவு நெருங்கும்போது செங்கோடன் வீட்டிலிருந்து சுமதி புறப்படுவாள். அப்போது செங்கோடன் சைக்கிள் ஓட்ட, அவள் பின்னே உட்கார்ந்து வருவாள். வீடு வந்த பிறகு சுமதி இறங்கிக் கொள்வாள். "செங்கோடா, நீ நடந்து போக வேணும். சைக்கிள் வீட்டில் சும்மாத் தானே இருக்கப் போவுது? சைக்கிளிலேயே போ! நாளைக்குப் பள்ளிக்கூடம் போகும்போது சைக்கிளில் இங்கே வந்துவிடு!" என்று சுமதி ஒரு நாள் சொல்லி, அதையே வழக்கமாக்கி விட்டாள்.

விஜயமங்கலத்தில் புத்தம் புதிய சைக்கிளில் சுமதியையும் செங்கோடனையும் பார்ப்பது இப்போது ஊர் மக்களுக்குப் பழகிப் போய்விட்டது.

செங்கோடன் வீடான அந்த மண்டபத்திலேயே விறகு அடுப்பால் சமையல் செய்வது பல வருடங்களாகத் தொடர்ந்து நடைபெற்று வரும் செயல். அதுவும் காய்ந்த முள்ளும் ஓலையும் கொண்டுதான் பெரும்பாலும் அடுப்பு எரிக்கப்படும். அதனால் எழும் புகை வெளியே போகப் புகை போக்கி இல்லை. கருமையான புகைசெழுமையாகஎழுந்துமண்டபத்தின் பிற்பகுதியில் அடர்த்தியாக அப்பிக் கொண்டிருந்தது. பதினாலு தூணில் நான்கு தூண்களும் மேற்



பகுதியும் கன்னங் கரேல் என்றிருந்தன. அத்தூண்களில்இருந்தகண்ணன் கிருஷ்ணனாக இருந்தான்! (கிருஷ்ணன் என்னும் பேருக்குக் கறுப்பன் என்றல்லவா பொருள்!)

சுமதி அந்தக் கறுப்புக் கண்ணனைக் கண்டு கவலை கொண்டாள். ''கூடிய விரைவில் அவற்றின் கறுப்பு நிறத்தைப் போக்கிக் கல்லின் நிறத்தைக் கொண்டு வர வேண்டும்'' என்பது அவள் திட்டம். அந்த வாரம் சனிக்கிழமை காலையில் அவள் தனது தூய்மைப் பணியைத் தொடங்கினாள். செங்கோடனின் துணையோடுதான்!


சோப்புத் தூள், கட்டி சோப்பு, வாஷிங் பவுடர், தென்னங்குச்சியால் செய்யப்பட்டபிரஷ், இரண்டுபிளாஸ்டிக் பக்கெட் — இவற்றோடு சுமதி, தன் வேலையை ஆரம்பித்தாள். தூண்களில் தண்ணீரைக் கொட்டியதும், நிறமற்ற அந்தத் தண்ணீர் கண் மை கரைந்துஓடுவதுபோலஓடியது. அவள் தெளித்தநீலநிறமானசோப்புத்தூள், வெள்ளை வெளேர் என்றிருந்த வாஷிங் பவுடர், அவள் உடை, அவள் — எல்லாம் கறுப்பாயின!

சுமதி, செங்கோடன் இருவரும் சேர்ந்து இரண்டு நாட்கள் தூண்களைக் குளிப்பாட்டிய செயலால், கறுமையின் அடர்த்தி குறைந்தது. அவ்வளவுதான்!

அந்த இரண்டு நாளும் செங்கோடன் குடும்பத்துக்குச் சுமதியின் சித்தப்பா வீட்டிலிருந்து சாப்பாடு வந்தது.

சனி, ஞாயிறு முடிந்ததும் துப்புரவுப் பணி முடியவில்லை. அந்த வாரமெல்லாம் தொடர்ந்தது. பிறகே ஒரு





வழியாகச் சமையலறைப் பகுதி தூய்மை அடைந்தது.

இதைக் கண்ட சோமு தாத்தா சந்தோஷப்பட்டார்.

"தாயே! நீ இவ்வளவு சிரமப்பட்டுச் சுத்தப் படுத்தி என்ன பயன்? என் மருமக ஒரு மாதத்திலே அடுப்பெரிச்சு பழைய புகையைப் படிய வச்சிடுவாளே!"

சோமு தாத்தா சொன்னதைக் கேட்டதும், சுமதி ஒரு நிமிடம்தான் சோகமுற்றாள். மறுநிமிடம், "அப்படியெல்லாம் நடக்காது தாத்தா" என்று கூறினாள்.

மறுநாள் மாலை சுமதி அந்த மண்டபத்துக்கு வந்தபோது, சைக்கிளின் பின்னே ஓர் அட்டைப் பெட்டி இருந்தது.

"அதென்னம்மா பெட்டி?" என்று கேட்டாள் சண்பகம்.

சுமதி அந்தப் பெட்டியைக் கொண்டு வந்து சண்பகத்திடம் கொடுத்து, "அம்மா! இது உங்களுக்குத்தான்! திறந்து பாருங்க!" என்றாள்.

சண்பகம் பெட்டியைத் திறந்து பார்க்கவில்லை. பெட்டியின் மேலே இருந்த படம், உள்ளே இருந்த பொருளை விளம்பரப்படுத்தியது. சுமதி, தானே பெட்டியைத் திறந்து உள்ளேயிருந்த மண்ணெண்ணெய் ஸ்டவ்வை எடுத்து, செண்பகத்திடம் கொடுத்தாள்.

"அம்மா! இனிமே நீங்க இந்த அடுப்பிலேதான் சமைக்கணும். இது புகையில்லாத அடுப்பு. இந்த மண்டபத்தின் அழகை இது கெடுக்காது!" என்ற சுமதி, அதை உபயோகிக்கும் முறையை விளக்கினாள்.

சுமதியின் அன்பையும் அக்கறையையும் கண்ட சண்பகம் பேரானந்தப் பெருக்கோடு அவளைச் சேர்த்து அணைத்துக் கொண்டபோது அவள் கண்களில் நீர்த் துளிகள் திரண்டன.

சில நாட்கள் சென்றன!

ஒருநாள், பள்ளிக்கூடத்தின் இரண்டாவது மணி அடித்தது. அதற்குப் பிறகு பத்து நிமிடம் இடைவேளை. அதனால் மாணவர்கள் உரத்த குரலில் பேசிக் கொண்டும் கத்திக் கொண்டும் பள்ளிக்கூடத்தின் வெளியே சென்றார்கள். அங்கே, நிலக்கடலை, குச்சிக் கிழங்கு, மாங்காய் முதலியவற்றை விற்கும் சிறிய கடைகள் இரண்டு இருந்தன. மாணவர்கள் அவற்றை மொய்த்தனர்.

அப்போது ஒரு மாணவன், அது வரை அன்று பள்ளிக்கு வராமல் மட்டம் போட்டவன், மூச்சு வாங்க ஓடி வந்து, "கந்தா! காளி! ஓடி வாங்க! ஓடி வாங்க! நம்ம ஊருக்குள்ளே புதுசா யாரு வந்திருக்கான்னு நீங்களே வந்து பாருங்க!" என்று கத்தினான்.

"சரிடா! வந்து பார்க்கிறோம். யாரு

வந்திருக்கான்னு முதல்லே சொல்லு! சாட்சாத் கடவுளே வந்துட்டாரா?'' என்று கேட்டான் ஒருவன்.

''கிண்டலா! சரி சொல்லிடறேன்! மெதுவாத்தான் சொல்வேன். அக்கறை இருக்கிறவங்க காதைத் தீட்டிக் கேட்டுக்கோங்க.'' என்று கூறிய மாணவன் அருகே உள்ளவருக்கு மட்டுமே கேட்கக் கூடிய வகையில் மிக மெதுவாக ஏதோ சொன்னான்!

அவ்வளவுதான்!

''ஹா! அப்படியா!'' என்று கேட்டவர்கள் ஆச்சர்யக் குரல் எழுப்ப, சொன்ன மாணவன் முன்னே ஓடினான். அவன் பின்னே மற்ற மாணவர்கள் உற்சாகமாகக் கூவிக் கொண்டே ஓடினார்கள். பள்ளிக்கூடத்தை மறந்து ஓடினார்கள்.

பள்ளியின் வெளி வாசல் அருகே நின்று இதைக் கவனித்த செங்கோடனும் வியப்படைந்தான்.

இடைவேளை முடிந்ததை அறிவிக்கும் மணி ஒலித்தது. ஆனால், பள்ளிக்கு வெளியே சென்ற மாணவர்கள் யாரும் உள்ளே வரவில்லை.

அவர்களை வியப்படையச் செய்து, பாதியில் பள்ளி வகுப்பைவிட்டு ஓடுமாறு செய்யும்படி ஊருக்கு வந்திருப்பவர் யார்?' செங்கோடன் யோசித்தான்.

(தொடரும்)

இரு மொழிகளில் பழமொழிகள்

PARALLEL PROVERBS

வளரும் காய் பிஞ்சிலே தெரியும்
The child is the father of the man

வில் அம்போ; சொல் அம்போ
An acute word cuts deeper than a sharp weapon

கல்வி கரையில; கற்பவர் நாள் சில
Art is vast and life is short

இனம் இனத்தைச் சேரும்
Birds of the same feather flock together

கையாளாத ஆயுதம் துருப் பிடிக்கும்
The used key is always bright

வைரத்தை வைரத்தால் அறுக்க வேண்டும்
Diamonds cut diamonds

விதி யாரை விட்டது?
Time tries all.

பெண் என்றால் பேயும் இரங்கும்.
A demon will pity a woman.

நெஞ்சை ஒளித்தொரு வஞ்சகம் இல்லை.
Every man is best known to himself.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
Health is wealth


பருவத்தே பயிர் செய்.
Early sow, early mow.

சித்திரமும் கைப்பழக்கம்;
செந்தமிழும் நாப்பழக்கம்
Practice makes perfect

வெள்ளம் வருமுன்பே அணை போட வேண்டும்.
A stitch in time saves nine.

மனமுண்டானால் இடம் உண்டாம்.
Nothing is hard to a willing mind.

கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைத்தானாம்.
Rob Peter and pay Paul.




தாயை அறியாத கன்று உண்டோ?
Every lamb knows its dam.

தொகுத்தவர்: அன்புப் பழம் நீ.

பிருந்தாவனம்

கீரியைக் கொன்ற பாம்பு!



பாம்பைக் கீரி கொல்லும் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால், ஒருநாள் நான் பள்ளி முடிந்து வீடு திரும்பும்போது, வழியில் உள்ள தோப்பில் சப்தம் கேட்கவே எட்டிப் பார்த்தேன். ஒரு நல்ல பாம்பு, கீரியுடன் சண்டை போட்டுக் கொண்டிருந்தது. பாம்பு திடீரென்று கீரியின் கழுத்தில் கொத்தியது. கீரி மரணமடைந்தது.


என்னிடம் காமிரா இருந்திருந்தால் இந்த அதிசயத்தைப் புகைப்படம் எடுத்திருப்பேன்.

— கே.பி. ஸ்ரீகாந்த் (12965),
காரைக்கால்

நட்பு

* ஒரு மனிதனின் தலைசிறந்த நண்பர்கள் அவனது பத்து விரல்கள்

— ராபர்ட் கோலியர்



* உன்னைவிட உயர்வான ஒரு மனிதனைத் தவிர, மற்றவருடன் ஒரு போதும் நட்புக் கொள்ள வேண்டாம்.

— கன்பூஷியஸ்

* நட்பு எவ்வளவுக்கெவ்வளவு பழையதாக உள்ளதோ, அவ்வளவுக்கவ்வளவு உறுதியாகவும் உள்ளது.

— அரிஸ்டாட்டில்

* மூன் கவனமுள்ள நண்பனை போல வாழ்க்கையில் வேறு பாக்கியமில்லை.

— யூரிபிடிஸ்

தொகுப்பு: க. செல்வி (9995)

ஊசியால் உபயோகம்



"நான் ஒரு டெலிபோனில் பாடிக் கொண்டிருந்தேன். அப்போது உடல் அசைவின் காரணமாக, கையிலிருந்த ஊசி, என் கையில் குத்திவிட்டது. இந்த நிகழ்ச்சி என்னை யோசிக்கச் செய்தது. அதன் பயனாக நான் போனோகிராமைக் கண்டுபிடித்தேன்." — இப்படிச் சொன்னவர் தாமஸ் ஆல்வா எடிசன்.

— என். செந்தில்குமார் (131) கோவை—10.

மயங்கியதால் மகிழ்ந்தார்!


ஒரு விஞ்ஞானி கையிலிருந்த பொருள்கள் அனைத்தையும் விற்று ஆராய்ச்சியிலேயே மூழ்கி இருந்தார். இறுதியில் அவர் ஒரு பொருளை முகர்ந்து பார்த்ததும், மயங்கி விழுந்து விட்டார். பல மணி நேரங் கழித்து



உணர்வுபெற்று எழுந்தார். அப்போது அவர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. காரணம், அவர் எதிர்பார்த்த மயக்க மருந்தைக் கண்டுபிடித்து விட்டார். அந்த விஞ்ஞானியின் பெயர்தான் சிம்ஸன்!

— என். பிரேமானந்தம் (10814),
கோவை—10.

புரிந்திருக்குமே!




இந்தப் படத்தைப் பார்த்த சோமுவுக்கு ஒன்றும் புரியவில்லை. ராமுவிடம் விளக்கம் கேட்டான். உங்களுக்குப் புரிந்திருக்கும்.

'உங்கள் ஓட்டு வேலு மணிக்கே' என்று எளிதாகக் கண்டுபிடித்திருப்பீர்கள்.

— ந. ரமேஷ்குமார்,
பட்டுக்கோட்டை

பெரியார் வாழ்விலே



* பெரியார் ஈ.வே.ராமசாமி வாழ்ந்த காலம் 94 ஆண்டு 5 மாதம் 7 நாட்கள்.

* பொது வாழ்வில் கழித்தது 20,090 நாட்கள்

* சுற்றுப் பயணம் செய்தது 8,20,000 தொலைவு கற்கள்

* பேசிய கூட்டங்கள் 10,700

* ஆற்றிய உரைகளின் கால அளவைக் கணக்கிட்டால் 891 நாட்கள்

— இராம. செந்தில் குமார் (3360)
திருக்கடையூர்

நடந்தே வருகிறேன்

ஒருவருக்கு நோய் முற்றிவிட்டது. 'இனி பிழைப்பது கஷ்டம்' என்று டாக்டரும் கூறிவிட்டார். அந்த நோயாளிக்கு இரண்டு மகன்கள். இருவரும் மகா கஞ்சன்கள்.

அவர்களில் மூத்தவன், அப்பாவின் காதில் விழாது என்று நினைத்துக் கொண்டு "தம்பி, காரில் புதைக்க எடுத்துக் கொண்டு போனால் செலவு அதிகமாகும். குதிரை வண்டியே போதும்'' என்றான்.



''குதிரை வண்டியானாலும் சுடுகாடு ஐந்து மைல் தூரம் இருக்கிறதே! அதிகப்பணம்கேட்பானே!'' என்றான் தம்பி.

உடனே தந்தை, மெதுவாகக் கண் விழித்து அவர்களிடம் சொன்னார்: ''அருமை மைந்தர்களே, மூலையில் இருக்கும் என் வாக்கிங் ஸ்டிக்கை எடுங்கள். நான் நடந்தே வந்து விடுகிறேன்''.

— செ. மணிமேகலை (627),
வா. வேலூர்


இழு இழு



"ஹலோ ராமுவா! இந்த ஒயர் ரொம்ப நீளமா இருக்குடா. அந்தப் பக்கம் கொஞ்சம் இழுத்துக்கோயேன்."

— வி. ரமேஷ் (13783), சென்னை — 28

ராணி 3 ரூபாய்!




நான் கோடை விடுமுறைக்கு ஊட்டி சென்றிருந்தேன். அங்கு 10 நாள் தங்கினேன். அப்போது ஒருநாள் நான் மார்க்கெட்டில் நுழைந்தேன். அங்கு முதல் கடையில் இருந்தவர் என்னைப் பார்த்து, "தம்பி, இங்கே வா. இங்கே எலிஸபெத் ராணி 3 ரூபாய்தான்! ஜார்ஜ்மன்னர் 4 ரூபாய்தான்!" என்றவுடன் நான் திகைத்தேன். "என்ன இது. இங்கு ராஜா ராணியையெல்லாம் 3 ரூபாய் 4 ரூபாய்க்கு விற்கிறீர்களே!" என்று நான் திகைப்பதைக் கண்ட கடைக்காரர், "என்ன தம்பி மலைக்கிறாய்? இதெல்லாம் இங்குள்ள உருளைக் கிழங்குகளின் பெயர்கள்தான்" என்றார்.

— பி. குமார் (12289), திருச்சி — 2

கோபமும் சாந்தமும்

1940ல் பம்பாயில் ஒரு பொதுக் கூட்டத்தில் நேருஜி சொற்பொழிவாற்றினார். அப்போது மழை வந்துவிட்டது. கூட்டத்திலிருந்து மக்கள் யாருமே நகரவில்லை. நேருஜியும் மழையில் நனைந்து கொண்டே பேசினார். அப்போது ஒருவர் ஒரு குடையைக் கொண்டு வந்து விரித்து நேருஜியின் தலைக்கு மேல் பிடித்தார். உடனே நேருஜிக்கு அளவில்லாத கோபம் வந்துவிட்டது. "ஆயிரக்கணக்கான மக்கள் மழையில் நனையும்போது எனக்கு மட்டும் குடை எதற்கு?" என்று கூச்சலிட்டார்.




சற்று நேரத்திற்குப் பிறகு, கோபம் தணிந்து குடையை வாங்கிக் கொண்டார். "குடை எனக்காக அல்ல. இந்த மைக்கைப் பாதுகாக்கத்தான்" என்று சிரித்தபடியே கூறினார். எப்படி கோபமும் சாந்தமும்?

— ஜெ. கண்ணன் (12598) கருப்பம்புலம்

அவன் யார்?

1. பூமியில் பிறந்தவன், புகையாகிப் போவான். அவன் யார்?



2. கத்திக் கத்தி வேட்டை ஆடுவான்; கறி எதுவும் தின்ன மாட்டான். அவன் யார்?

3. புத்தாண்டில் புகுந்த விருந்தாளி, தங்குவதோ ஓர் ஆண்டு. அவன் யார்?

4. நாக்கில் கயிற்றுடன் தொங்குவான், அவன் யார்?

5. தலையைக் கொடுத்துத் தன்னுயிர் விடுவான். அவன் யார்?

விடைகள்: 1. பெட்ரோல்; 2. துப்பாக்கி; 3. காலண்டர், 4. கோயில் மணி, 5. தீக்குச்சி

— பி. மாசிலாமணி (14382), நாட்டான்வலசு


அடிடாஸ்



'Adidas' — இந்த எழுத்துக்களைப் பயணப் பைகளிலும், தொப்பிகளிலும், காலணிகளிலும் அடிக்கடி நாம் பார்க்கிறோம். Adi-Dassler என்ற ஜெர்மனியைச் சேர்ந்த செருப்புத் தைக்கும் தொழிலாளியின் பெயர்தான் இப்படிச் சுருங்கியிருக்கிறது. 1920ல் இவர் தொடங்கிய சிறிய கடை இன்று உலகின் மாபெரும் நிறுவனமாக வளர்ந்துள்ளது. 1928ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை ஒலிம்பிக் பந்தய வீரர்கள் எல்லாரும் Adidas காலணிகளையே அணிந்து வருகிறார்கள். ஆரம்பத்தில் காலணிகளை உற்பத்தி செய்து வந்தவர், இப்போது விளையாட்டுத் துறையில் தேவையான அத்தனை பொருள்களையும் உற்பத்தி செய்கிறார். 1982 முதல் 1985 ஆம் ஆண்டு வரைக்கான தங்கக் காலணி (Adidas Golden Shoe Award) பரிசினை நம் இந்திய ஓட்டப் பந்தய வீராங்கனையான பி.டி. உஷாவுக்கு வழங்கியிருக்கிறார்.

— இ. மாயா (12095) கும்பகோணம்—2

சுழலும் ஓட்டல்!



கிழக்கு ஜெர்மனியில் அமைக்கப் பட்டுள்ள டெலிவிஷன் கோபுரத்தின் உயரம் 300 மீட்டர். இந்தக் கோபுரத்தில் 200 மீட்டர் உயரத்தில் சுழலும் ஓட்டல் ஒன்றை அமைத்திருக்கிறார்கள். அந்த ஓட்டலில் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது, அது மிகவும் மெதுவாகச் சுழன்று கொண்டேயிருக்கும். அப்போது நாம் நம் கழுத்தையோ முகத்தையோ சற்றும் திருப்பாமல் பெர்லின் நகரத்தின் முழுத் தோற்றத்தையும் கண்டு களிக்கலாம்.


— ஆர். வெங்கடேசன் (6068), உசிலம்பட்டி

ஏன் வரவில்லை?

வீட்டுக்காரர்: நேற்று 'காலிங் பெல்' ரிப்பேர் செய்ய வருவதாகச் சொன்னாயே, ஏன் வரல்லே?

மெக்கானிக்: வந்தேனே சார். இரண்டு மூன்று தடவை காலிங் பெல் சுவிட்சை அழுத்தினேன். நீங்க வரல்லே. அதனாலே திரும்பிப் போயிட்டேன்.

— மு. குமாரவேல் (8371), ஆதம்பாக்கம்



பத்து வயது மைதிலிக்குப் பகவானைப் பார்க்கணுமாம்!



ஒரு நண்பர் வீட்டிற்குச் சென்றிருந்தோம்: விடைபெற்றுக் கிளம்பும் சமயம், மாடிப் போர்ஷனில் இருந்து கணீரென்ற மழலைக் குரல், 'பளிச்' 'பளிச்'சென சொற்சிலம்பம் ஆடிக் கொண்டிருந்தது. நண்பரைப் பார்த்து வியப்புடன் புருவங்களை உயர்த்தினோம். ஒரு புன்முறுவலுடன் நம்மை மாடிக்கு அழைத்துச் சென்றார் அவர்.

அங்கே —

பூஜையறையில் கண்ணன் படத்துக்கு முன்பு ஒரு சிறுமிதான் பேசிக் கொண்டிருந்தாள்.

''ஹே கண்ணா! இதயக் கமலவாசா... வாழ்விலும் தாழ்விலும் நீயே துணை என்று திரௌபதி கைகளை உயரக் குவித்தாள்...''

— வேறொன்றுமில்லை. மஹா பாரதக் கதை முழுவதையும் தன் குஞ்சுக் கரங்களால் அபிநயித்துப் பாட்டுப்பாடியும், வசனங்களை உதிர்த்தும் பிரமாதப்படுத்தினாள் மைதிலி.

மைதிலியின் தாய் சீதா தொடங்கினார்: ''எங்க மைதிலி, இன்னிக்கு நேத்திக்கு இல்ல, மூன்று வருஷமா இராமாயணம், பாரதம், நரஸிம்ஹாவதாரம், முதலிய புராணங்களைக் கரதலப்பாடமாய்ச் சொல்லுவாள். இந்த வருஷம் பள்ளிக்கூட வருடாந்திர விழாவிலே மஹாபாரதம் சொல்லிக் காட்டி, 'எக்கச்சக்கமாய்ப் பாராட்டும் பரிசும் வாங்கியிருக்காளாக்கும்..''

— சொல்லும்போதே அவர் முகத்தில் பெருமைக்களை.

10 வயதாகும் மைதிலி பாண்டிச்சேரி இராமகிருஷ்ணா வித்யாலயாவில் படிக்கிறாள். கண்ணனின் அபிமான பக்தையான இவளை, பள்ளியில் அனைவரும், மற்றொரு (கலியுக) ஆண்டாளாகவே மதிக்கின்றனர். வாரா வாரம் வெள்ளிக்கிழமை மாலை விளக்கேற்றியதும் சுவாமிக்கு முன் அமர்ந்து மேற்கண்ட புராணங்களையும் ஸ்லோகங்களையும் சொல்லுவாள்.

பள்ளி ஆண்டு விழாவில் நடந்தது பற்றிக் கேட்டபோது —

''நான் மேடையிலே மஹாபாரதம் சொல்லிண்டே இருந்தேனா... அப்போ, அதைக் கேட்டு யாரோ ஒரு மாமா, தன் 'வாட்ச்'சைக் கழற்றி 'மேடையிலே பேசற அந்தக் குழந்தையிடம் கொடுங்கோ! என் அன்பளிப்பு... மறுக்கக் கூடாது' அப்படின்னு சொல்லிக் குடுத்தனுப்பினாரு. அப்புறமா எங்க எட்மாஸ்டர் அந்த மாமாவை மேடைக்கு வரவழைச்சு அறிமுகப்படுத்தினாரு. மேடையிலேயே எங்களுக்கெல்லாம் கற்பூர திருஷ்டியும் சுத்தினாங்க...'' என்று மழலையுடன் தெரிவித்தவள், தன் தாயின் வேண்டுகோளுக்கிணங்க, நமக்காக ஒருமுறை இராமாயணம், நரஸிம்ஹாவதாரம், விவேகானந்தரின் பொன்மொழிகள் (ஆங்கிலத்தில்) சொல்லிக் காட்டினாள்...

''மைதிலிக்கு எப்படி இதில் ஆர்வமும் பயிற்சியும் ஏற்பட்டன?'' என்று கேட்டோம்.

''நாங்கள் பழமையை ரொம்பப் பாராட்டுற குடும்பம். எங்க மாமனார் ஓர் ஆஞ்சநேயர் உபாசகர். அவர் யோசனைப்படி, குழந்தைக்கு ஆரம்பத்திலேயே கடவுள் பக்தியில் கவனம் செலுத்த முயன்றோம். சின்ன வயதிலேயே அவளுக்குப் புராணக் கதைகளைக் கூறி அவ்வப்போது பாட்டும் வசனமும் சொல்லிக் கொடுப்பேன். அதனால்தான் எங்க மைதிலிக்கு...''

''திரௌபதி பேசற மாதிரி ரொம்ப உருக்கமாச் சொல்றாளே... கதை கேட்கும் போது அப்படியே ஒன்றிப் போய் விடுவாளோ?''

''அதையேன் கேட்கறேள்? திரௌபதி வருகிற கட்டத்திலே 'ஓ'வென்று கத்தி அமர்க்களம் பண்ணி விட்டாள். 'கண்ணா காப்பாத்து, காப்பாத்து...''ன்னு அலறினாளே, பாக்கணும். அதேபோல், இராமாயணம் சொல்லும் போது அன்றிரவு தூக்கத்தில், ''இராமா, சீதையை இராவணன் தூக்கிண்டு போறானே... ஐயோ வாயேன்'' என்று புலம்பியபடியிருந்தாள். நாங்கள் பதறிப் போய்த் தூக்கினால் குழந்தையின் உடம்பு அனலாய்க் கொதித்தது. ரெண்டு நாளைக்குப் பின்தான் குணம் ஆயிற்று என்றால் பாருங்கள்... ரொம்ப உணர்ச்சி வசப்படுவாள்'' என்றார் திருமதி கீதா.

மைதிலிக்கு ஒரு தங்கையும், தம்பியும். அவர்களும் இப்போதிலிருந்தே தம் மழலை மாறாமல் சிலவற்றை உச்சரிப்பதைக் கேட்கும் போது புல்லரிக்கிறது.

திருமதி கீதாவும் தன் பள்ளி நாட்களில் நிறையப் போட்டிகளில் பரிசுகள் வாங்கியவராம். தாயைப் போலப் பிள்ளை!

முழுக்க முழுக்கத் தாயின் வார்ப்பில் உருவான மைதிலிக்குத் தந்தை இரமணியும், அவ்வப்போது வேண்டிய உதவிகள் செய்கிறார். இராமகிருஷ்ண மடத்தின் சுவாமிஜீ பள்ளி விழாவுக்கு வந்திருந்தார். மைதிலியை ஸ்பெஷலாக அழைத்து, எல்லாவற்றையும் சொல்லச் சொல்லிக் கேட்டு மகிழ்ந்தாராம்.

இராமாயணம், பாரதம், விவேகானந்தர் சொற்பொழிவு ஆகியவற்றில் முதல் பரிசுகளும், தலைசிறந்த மாணவி விருதும் பெற்றிருக்கும் மைதிலியிடம் கடைசியாக ஒரு கேள்வி.

''ஏன் மைதிலி! இவ்வளவும் சொல்றியே, இதுகளிலே எல்லாம் நிறைய கஷ்டமான உச்சரிப்பும் வருது. சமஸ்கிருத வார்த்தைகளும் உண்டு. அதுக்கெல்லாம் அர்த்தம் தெரியுமாம்மா...?'' — ஏதோ மடக்கிவிட்டோம் என்ற மிதப்பில் அவளை உசுப்பினால் —

''ஓ! கேளுங்கக்கா! தெரிஞ்சவரை சொல்றேன்...'' உண்மைதான். சில மேற்கோள்களை நாம் எடுத்துக் காட்டி அவற்றுக்கு அர்த்தம் கேட்ட போது,

கொஞ்சமும் தயங்காமல், 'டக், டக்' கென்று பொருள் சொன்ன மைதிலி, நடுவே தன் அன்னையையும் பார்த்துக் கொண்டாள். 'சரிதானம்மா?' என்பது போல் கேட்டது அப்பார்வை.

என்ன தெளிவு!... எத்தனை சரளம்...! அடடா!

இன்னொரு நல்ல செய்தியையும் சொன்னாள் மைதிலி. புதுவை நாடகக் கலைச்சங்கம் நடத்திய நாடகப் போட்டியில் மைதிலிக்குச் 'சிறந்த குழந்தை நட்சத்திரம்' என்ற சிறப்புப் பரிசும் கிடைத்துள்ளதாம். இதைச் சொல்கையில் அவளுக்கு ஏகப் பெருமை.

''நல்லது மைதிலி! உன் ஆசை ஏதாவது இருந்தால் சொல்லேம்மா...'' என்றபடி கன்னத்தைக் கிள்ளினோம்.

''ஹும்... பகவான் ஸ்ரீகிருஷ்ணனை நேரில் பார்க்கணுங்கறதுதான் என் ஆசை, இஷ்டம் எல்லாம். பிரகலாதன், ஆண்டாளுக்கெல்லாம் தரிசனம் தந்தாராமே... எனக்காக ஒரு நாள் வரமாட்டாரா...?'' — ஏக்கத்துடன் கேட்டது அந்தப் பிஞ்சு.

''நிச்சயம் உன் ஆசை நிறைவேறும் மைதிலி...'' என்று தட்டிக் கொடுத்துவிட்டுக் கிளம்பினோம் வியப்பு மாறாமல்.

— நடாதூர் வி. திருமகள்

எங்கள் கதையரங்கம்



சோம்பேறித்தனத்தால்..

எ.ரசீத் (13402)

ஒருநாள் ஒரு மீனவர் தம் மூத்த மகளை அழைத்தார். ''நான் ஒரு புதுப் படகு செய்துள்ளேன். அடுத்த மாதம் உன் இளைய சகோதரனோடு மீன் பிடிக்கச் செல்வேன். எனக்கு ஒரு புது வலை தேவை. எனக்காக மகளே, ஒரு நல்ல வலை செய்து கொடு. அதை உறுதியானதாகச் செய். எந்தச் சிரமத்தையும் பாராமல் இறுக்கமாக வலையைக் கட்டு'' என்றார் தந்தை.

வேலையைத் தொடங்கிய மகள் விரைவிலேயே களைப்படைந்து விட்டாள். ''நான் ஏன் இவ்வளவு உறுதியாகவும் இறுக்கமாகவும் வலையைப் பின்ன வேண்டும்? என் விரல்கள் வலிக்கின்றன. விரைவில் அவற்றிலிருந்து இரத்தம் கூடக் கசிந்து விடும். என் அப்பா, நான் ரத்தம் சிந்துவதையா விரும்புகின்றார்? வலை நாளடைவில் உறுதியாகிவிடும்,'' எனத் தனக்குள் கூறிக் கொண்டாள். கவனமின்றி ஒழுங்கீனமாகத் தன் பணியைச் செய்தாள்.

தன் மகள் செய்திருந்த புதிய மீன் பிடிக்கும் வலையைத் தன் படகுக்கு எடுத்துச் சென்றார் அந்த மீனவர். அவருடன் அவருடைய 12 வயதுள்ள மகனும் சென்றான். இருவரும் படகில் ஏறி ஆழமான கடற்பகுதிக்குச் சென்றனர். ஒருநாள் இரவும் பகலும் படகிலிருந்த பிறகு மீன்கள் இருந்த பகுதியைக் கண்டனர். ''நிறைய மீன்களைப் பிடிக்கப் போகிறோம்'' என்றார் தந்தை. மகிழ்ச்சியோடு வலையைக் கடலில் மீன்கள் இருந்த பகுதியில் வீசினார். அவ்வளவு மீன்களை அதுவரை கண்டிராத மகன் மகிழ்ச்சியால் துள்ளினான். படகு ஒருபுறம் சாயவே அவன் கடலுக்குள்... வலை விரித்திருந்த இடத்திலேயே விழுந்துவிட்டான். தந்தை இதைக் கண்டு சிரித்துக் கொண்டே சொன்னார்: ''ஓர் இளம் மீனவனுக்கு இந்நிகழ்ச்சி புதுமையானதே. மற்ற மீன்களோடு தானும் பிடிபடப் போகிறான். சரி, அவனையும் சேர்த்து நான் பிடித்து விடுகிறேன்.''

வலையை உடனே மெதுவாகத் தந்தை இழுத்தார். ஒரு சில வினாடிகளில் படகில் தன் மகன், உயிரோடும் மகிழ்ச்சியோடும் வந்துநிற்பான் என்ற நம்பிக்கை இருந்தது. திடீரெனத் தந்தையின் முகம் வெளுப்படைந்தது. அவர் நடுங்க ஆரம்பித்தார். வலை கனமில்லாமல் மேலே வந்தது. வெற்று வலை மட்டுமே வந்தது. சரியாகக் கட்டப்படாத வலை பல இடங்களில் அவிழ்ந்து கொண்டது! வலை முழுவதும் பிரிந்து கொண்டது!

இரண்டு நாட்கள் கழித்து அந்த மீனவர் தாம் மட்டும் வீடு திரும்பினார். கதவைத் திறந்த அவர் தம் மூத்த மகளை

அழைத்து வருத்தத்தோடு கதறத் தொடங்கினார். ''உன் இளைய தம்பி இறந்து விட்டான். நீ வலையை ஒழுங்காகச் செய்திருந்தால் அவன் இப்பொழுது உயிரோடு இருப்பானே! நீதான் அவனைக் கொன்றுவிட்டாய்... உன் சோம்பேறித் தனத்தால்...'' என தந்தை கீழே அமர்ந்து மீண்டும் வருந்தி அழுதார்.



ஓர் ஊரில் நல்லான் என்னும் குடியானவன் ஒருவன் இருந்தான். அவன் ஏழை. கடவுளிடம் மிகுந்த பக்தி உடையவன். தன்னால் செய்ய முடிந்த உதவியைத் தட்டாமல் அனைவருக்கும் செய்வான். பொய்யே பேசாதவன். ஆகையால் நல்லான் எவர்க்கும் நல்லவனாகவே வாழ்ந்தான். எனவே அவனை அனைவரும் விரும்பினர்.

ஒருநாள் நல்லான் தன் வயல் வேலையை முடித்து, வீட்டுக்குத் திரும்பினான். ஒரு மடுவின் கரை வழியே வந்து கொண்டிருந்த பொழுது தனக்கு எதிரே ஒரு புலி வருவதைக் கண்டான்; திடுக்கிட்டான்.

''இந்த மடுவில் குதித்துச் சிறிது நேரம் மறைந்திருப்போம்; புலி போன பிறகு கரை ஏறுவோம்' என எண்ணினான்.

அந்த மடுவில் ஒரு முதலை இருந்தது. அதைக் கண்ட நல்லான் நடுங்கி, ''ஐயோ! கடவுளே, நான் என்ன செய்வேன்! என் நிலைமை இருதலைக் கொள்ளி எறும்பு போல் ஆனதே!'' கடவுளே, இப்போது உன் திருவருளே என்னைக் காப்பாற்ற வேண்டும்!'' என்று வேண்டியபடியே மூர்ச்சை அடைந்து தரையில் விழுந்தான்.

புலி நல்லானைக் கொல்லப் பாய்ந்தது. அது வேகமாகப் பாய்ந்ததால், குறி தவறி மடுவில் விழுந்தது. உடனே, முதலை அதைப் பிடித்துக் கொண்டது. புலிக்கும், முதலைக்கும் கடுமையான போர் நடந்தது. அதில் இரண்டும் ஒன்றை ஒன்று கடித்து மாண்டன.

நல்லான் மூர்ச்சை தெளிந்து எழுந்தான். இறந்த புலியையும் முதலையையும் கண்டான். எல்லையில்லாத மகிழ்ச்சியடைந்தான். தன் இரு கரங்களையும் குவித்து, ''எல்லாம் வல்ல இறைவனே, உனது திருவருளே என்னைக் காப்பாற்றியது! உனது அருளைப் பெற்றவர் எதற்கும் அஞ்ச வேண்டுவதே இல்லை. 'எல்லாம் இறைவன் செயல்' என்று பெரியோர் சொல்வதன் உண்மை எனக்கு இன்றுதான் விளங்கியது'' என்று கூறித் தன் வீட்டை நோக்கிச் சென்றான்.



சோலையூர் என்றொரு கிராமம். ஆனால் அங்குள்ள மக்களைப் பொறுத்த வரை அது சோம்பேறியூர். அந்தக் கிராமத்தில் இருந்த மக்கள் எல்லோரும் சோம்பேறிகளாகத் திரிந்தனர். பூர்வீகச் சொத்தை வைத்து வாழ்ந்து வந்தனர். தங்களுக்கிருந்த கொஞ்ச நஞ்ச நிலங்களில் மற்ற கிராமத்தார்களை வைத்து நெல் விளைத்து வாழ்ந்து



"எப்படி பாப்பா! திருடனை மடக்கிப் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கூட்டிக்கிட்டு வந்தே?"

"நான் போட்டிருந்த மூக்குத்தியைக் கேட்டான். எங்கம்மாவோட நகை நிறைய இருக்கிற இடம் எனக்குத் தெரியும். வா காட்டுறேன்னு சொல்லி, கொல்லைப் புறம் வழியா இங்கே கூட்டி வந்திட்டேன்!"

— மணியன் தர்மலிங்கம்.

வந்தனர்.

'சேற்றிலே செந்தாமரை' என்பது போல் அந்தச் சோம்பேறி மக்களிடையே பாலன் என்னும் இளைஞன் இருந்தான். அவர் ஓர் அனாதை. தாயையும் தந்தையையும் சிறு வயதிலேயே இழந்திருந்தான். சிறு வயதிலேயே அறிவுள்ளவனாக விளங்கினான். அவன் தனக்கிருந்த ஒரு வேலி நிலத்தை உழுது வாழ்ந்து வந்தான்.

பாலன் அந்தக் கிராம மக்களைத் திருத்துவதற்குப் பலமுறை முயன்றான். ஆனால் எதுவும் பலனளிக்கவில்லை.

ஒருநாள் பாலன் காலையில் எழுந்தவுடன் ஊர் மக்களை ஒன்றாகக் கூட்டி, "நான் இன்று ஒரு கனவு கண்டேன். அதில் பூமாதேவி என் முன்னே தோன்றி, 'இந்தக் கிராமத்தில் உள்ள எல்லா நிலங்களிலும் புதையல் இருக்கிறது. ஆனால் அதை நீங்கள் உடனே எடுக்கக் கூடாது. நிலத்தை உழுது நெல் பயிரிட்டு அறுவடை செய்து, நெல்லை எனக்குக் காணிக்கையாக அளித்துவிட்டுத்தான் நீங்கள் அதை எடுக்கலாம். மேலும்,யார் அந்த நிலத்தின் சொந்தக்காரர்களோ, அவர்தான் நிலத்தில் உழைக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் அவருக்குப் புதையல் கிடைக்கும்' என்று கூறினாள். அதனால், நாம் நிலத்தை உழுது புதையல் பெறுவோம். ஒரு வருடம் கஷ்டப்பட்டு உழைத்தால் பிறகு நாம் உழைக்காமல் உட்கார்ந்தே சாப்பிடலாம்" என்று ஆசைகள் காட்டினான்.

அவன் சொல்லச் சொல்ல மக்களுக்கு ஆவல் அதிகமாயிற்று. எல்லோரும் அவரவர் வீட்டுக்குச் சென்றனர். பிற கிராமத்திலிருந்து வரும் வேலையாட்களை நிறுத்தினர். கையில் ஏர் எடுத்து உழைத்தார்கள். இவ்வளவு நாட்கள் உழைக்காமல் இப்பொழுது உழைப்பது அவர்களுக்கு மிகவும் சிரமமாயிருந்தது. இருப்பினும் புதையலுக்காக அவர்கள் உழைத்தனர்.

கிராம மக்கள் தாங்களே உழுது நெல் விதைத்தார்கள். நன்றாக விளைந்தது. நாட்கள் பல ஓடின. அறுவடைக் காலம் வந்தது. அறுவடைக்குக்கூட ஆள் வைக்காமல் தாங்களே அறுவடை செய்தனர். பாலனுக்கு இதையெல்லாம் பார்க்கும்போது மிகவும் மகிழ்ச்சியாயிருந்தது.

எல்லோரும் நெல்லை மூட்டையாகக் கட்டி பாலனிடம் வந்தார்கள். பாலன், "நான் புதையல் கிடைக்குமென்று கூறியது பொய். உங்களைத் திருத்துவதற்காகவே அப்படிக் கூறினேன். நீங்களே உங்கள் நிலத்தில் உழைத்ததால் பல வேலையாட்களுக்குக் கூலியாகத் தரும் நெல் மிஞ்சியது. அதோடு மட்டுமல்லாமல் சோம்பேறிகளாக இருந்து பல நோய்க்கு அடிமையானீர்கள். வியர்வை சொட்டச் சொட்ட வயலில் உழைத்ததால், நீங்கள் நோயில்லாமல் இருக்கிறீர்கள். புதையல் என்பது உழைக்காமல் கிடைக்காது. உழைத்துப் பொருள் ஈட்டுவதே நமக்கு இன்பத்தைத் தரும். மேலும் இந்த நெல்மணிகளே நிலத்திலிருந்து உங்களுக்குக் கிடைத்த புதையல். இப்பொழுதாவது தெரிகிறதா 'உழைப்பின் உயர்வு?'என்று கூறி முடித்தான்.

பாலனின் உணர்ச்சி மிக்க உரையைக் கேட்ட மக்கள் மனம் மாறினர். நாங்கள் இனி உழைப்பால் உயர்வோம்! என்று ஒருசேரக் கூறினர்.

ஒரு சிறுமியின் கடிதம்; இரு பிரதமர்களின் பதில்!



பிரவீணா என்னும் குண்டூர் மத்தியப் பள்ளியில் எட்டாவது படிக்கும் மாணவி சென்ற ஆண்டு, சோவியத் நாட்டிலுள்ள ஆர்தெக் முகாமுக்குச் சென்றிருந்தாள். அங்கு இரண்டாவது உலகப் போரின் சோகக், கதைகள் பலவற்றையும் அவள் கேள்விப்பட்டாள். போர், யுத்தம், மனிதர்களுக்கிடையே சண்டை, சச்சரவு — ஆகியவை குறித்து அவளது மனம் அசை போட்டது. இந்தியா திரும்பியவுடன் அவள் இரண்டு கடிதங்கள் — ராஜீவ் காந்திக்கும், சோவியத் அதிபர் கோர்பசேவுக்கும் — எழுதினாள். அக்கடிதங்களில் அவள் கூறியது என்ன?

''..... பள்ளிப் பிள்ளைகளாகிய நாங்கள் படிக்கவும், விளையாடவும் மகிழ்வுடன் வாழவும் விரும்புகிறோம். எங்களது தாய் தந்தையர்களையும், பாட்டி தாத்தாக்களையும், சகோதர சகோதரிகளையும், நண்பர்களையும் கொன்று குவிக்கும் யுத்தம் ஏன் வெடிக்க வேண்டும்? எங்களது பள்ளிகளும், புத்தகங்களும், நாங்களும் ஓர் அணு ஆயுதப் போரில் வெந்து மடியத் தான் வேண்டுமா?''




கள்ளமில்லாக் குழந்தை உள்ளத்தில் வெடித்துக் கிளம்பிய சரியான கேள்வி அது. அக்கடிதத்திற்கு நமது பிரதமர் ராஜீவ் காந்தி பதிலெழுதினார்: ''படிப்பு, விளையாட்டு, வேலை போன்ற பிறப்புரிமைகளைக் கோரும் குழந்தைகளின் ஆர்வத்தை, எந்த அரசாங்கத் தலைவரும் ஆணவத்துடன் மறுத்து ஒதுக்க முடியாது.''



சோவியத் தலைவர் கோர்ப்பசேவ், ''நீயும், உன்னைப் போன்றோரும் நிம்மதியாகப் படித்துப் பட்டம் பெற்று நாட்டுக்கு உழைக்கும் நல்ல காலத்தினை உருவாக்க நானும், எனது நாடும் விடாது முயல்வோம்'' என்று பதிலளித்தார்.

— ஏ. எஸ். மூர்த்தி



அகில இந்திய வானொலியின் திருநெல்வேலி இயக்குநரும், மதுரை இயக்குநரும், பன்மொழிப் புலவரும் அமர்ந்துள்ளனர். குழந்தைக் கவிஞர் தலைமையுரையாற்றுகிறார்.

தாமரை பூத்த தடாகம்

''குழந்தைகளின் கொள்ளை கொள்ளும் புன்சிரிப்பில் இந்த உலகத்தின் துன்பங்களை எல்லாம் மறந்து விடலாம்'' என்றார் நேரு.

சுமார் ஐயாயிரம் குழந்தைகள், அவர்களின் பெற்றோர்கள், பொது மக்கள் அடங்கிய மாபெரும் கூட்டத்தை நெல்லை வானொலி நிலையமும் இராஜபாளையம் மணிமேகலை மன்றமும் இணைந்து நடத்திய குழந்தைகள் தின விழாவில் காணும்போது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

நேருவின் பிறந்தநாளையொட்டி குழந்தைகள் கலைவிழாவை இராஜபாளையம் காந்தி கலை மன்றத்தில் 9.11.86 அன்று மணிமேகலை மன்ற 28ம் ஆண்டு விழா நிகழ்ச்சிகளில் ஒன்றாக நெல்லை வானொலி நிலையம் இணைந்து நடத்தியது.

தலைமை வகித்த குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா மேடைக்கு வரும்போதே குழந்தைகளின் ஆரவாரமும் கரகோஷமும் பிரமிக்க வைத்தன. அவர் தலைமை உரையில் ''அமைதியாக இருப்போம்'' என்று சொல்ல, குழந்தைகள், ''ஆனந்தமாய்க் கேட்போம்'' என முழங்கினர். குழந்தைகளோடு குழந்தையாக அவர் பேசிய எளிய உரை அனைவரையும் கவர்ந்தது

''அருமை நேரு பிறந்தது'' என்ற பாடலின் முதல் வரியை அவர் பாட, ''அலகாபாத்து நகரிலே'' என்று அடுத்த வரியைக் குழந்தைகள் பாடினர். ''இன்று நேரு வாழ்வது'' என்று அவர் பாடியதும், ''எங்கள் பிஞ்சு நெஞ்சிலே'' என ஆயிரம் குழந்தைக் குரல்கள் ஒலித்து அனைவரையும் மெய்சிலிர்க்க வைத்தது.

நெல்லை வானொலி இயக்குநர் எஸ். கிருஷ்ணமூர்த்தியின் உரையில் 'குழந்தைகளே நமது நாட்டின் மிகப் பெரிய செல்வம். அவர்களின் அறிவாற்றலை வளர்ப்பதே சிறந்த பணி'' என்று கூறினார். வாழ்த்துரை வழங்கிய மதுரை வானொலி இயக்குநர் திரு. விஜய திருவேங்கடம், ''கலை என்றால் எதையும் நன்றாகச் சொல்வதும் நன்றாகச்செய்வதும்ஆகும். கல்வியை, கலையை, அறிவை, பண்பைப் பேணுவதற்கு நமக்கு அறிவியல் நோக்கு வேண்டுமென்ற இலட்சியத்துடன் இந்த நிகழ்ச்சியை அமைத்த நெல்லை

வானொலியையும், மணிமேகலை மன்றத்தையும் எவ்வளவு வாழ்த்தினாலும் தகும்'' என்றார்.

மணிமேகலை மன்றத் தலைவரும் பன்மொழிப் புலவருமான மு.கு.ஜகந்நாத ராஜா தமது உரையில் இந்த அரங்கில் கூடியுள்ள இளம் உள்ளங்களைப் பார்க்கும்போது, 'தாமரை பூத்த தடாகமோ?' என எண்ணி மகிழ்கிறேன். நானும் ஒரு குழந்தையாக மாறி உங்களோடு ஐக்கியமாகிவிடக் கூடாதா? என ஏங்குகிறேன்'' என்று பேசியதைக் குழந்தைகள் வரவேற்று, கரகோஷம் செய்தனர்.

மன்றச் சார்பில் அனைவரையும் வரவேற்று மாலைகள் அணிவித்துப் பேசிய பொதுச் செயலர் கவிஞர் கொ.மா.கோதண்டம், இது போன்ற குழந்தைகளின் கூட்டத்தை நான் இது தான் முதல் தடவையாகக் காண்கிறேன் என்று கூறினார். தேசிய ஒருமைப்பாட்டையும் மனிதநேயத்தையும் வளர்க்க இதுபோன்ற நிகழ்ச்சிகள் உதவும் என்றும் கூறினார்.

பின்னர் நடந்த கலைநிகழ்ச்சிகளில் காமராஜர், நெல்லை மாவட்டங்களைச் சேர்ந்த பத்துப் பள்ளிகளும், ஒரு சிறுவர் மன்றமும் கலந்து கொண்டன. சுமார் 250 குழந்தைகள் கலந்து கொண்ட நிகழ்ச்சிகள் மூன்று மணி நேரத்திற்கும் மேலே நடந்தன.

இராஜபாளையம் A.K.D. பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவிகளின் லக்ஷ்மி பூஜையுடன் கலைநிகழ்ச்சிகள் துவங்கின. இந்தியத் தாய் பற்றிய அவர்களின் குழுப் பாடலும் சிறப்பாக அமைந்திருந்தது.

இராஜபாளையம் சின்மயா வித்யாலயா 'நோயாளிகள்' நாடகம் சமுதாயத்தில் காணும் தீமைகளையும் குழந்தைகளைப் பாதிக்கும் செய்திகளையும் விவரித்ததுடன் அவர்களின் தேசிய ஒருமைப்பாடு பற்றிய பாடல் அனைவரையும் கவர்ந்தது.

இராஜாக்கோட்டை எண் 2 பள்ளியின் குழந்தைகளின் கிராமிய நடனங்களும் 'நட்பின் நிலை' என்ற நாடகமும் அரங்கை மகிழ்வித்தன.

இராஜபாளையம் குழந்தைக் கவிஞர் வள்ளியப்பா மணிமலர் மன்றக் குழந்தைகள் நடத்திய 'வீர சிவாஜி' நாடகம் உணர்ச்சிகரமானதாக அமைந்தது. அதில். கொ.மா.கோ. இளங்கோ சிவாஜியாக நடித்ததை அனைவரும் பாராட்டினர்.

இந்த அமைப்பை ஒட்டிய கோகுலம் சிறுவர் சங்கக் குழந்தைகள் பல மாநில உடைகளுடன் பிற மொழிப் பாடல்களைப் பாடி இறுதியில் நாம் அனைவரும் ஒன்றே என்ற முழக்கத்துடன் 'பாரத சமுதாயம் வாழ்கவே' என்ற குழுப்பாடலைப் பாடியது அனைவரையும் வியக்க வைத்தது.

அம்பாசமுத்திரம் S.M.S. ஆங்கிலப் பள்ளியின் மாணவர்களின் குழு நடனமும் இரண்டு குழந்தைகளின் உருது மொழிப் பாடலும் பாராட்டும் படியாக அமைந்திருந்தன.

சங்கர் நகர் ஜயேந்திரா வெள்ளி விழாப் பள்ளியின் குழந்தைகள் 'அன்பு—ஆணவம்' என்ற நாடகம், கிருஷ்ண லீலா நடனம் ஆகியவை நல்ல வரவேற்பைப் பெற்றன.

இராஜபாளையம் நாடார் மேல்நிலைப் பள்ளியின் குழந்தைகள் நடத்திய நிகழ்ச்சிகள் மது, சிகரெட், வன்முறை இவற்றால் கெட்டொழியும் மனிதன் எப்படிப் புது மனிதனாக மாறினான் எனச் சித்திரித்தது. மரங்கள் வெட்டப்படுவதால் மழை குறைந்து வளம் அழியும் கருத்தினை 'மனிதன்—மரம்' உரையாடல் மூலம் மிகச் சிறப்பாகச் செய்தனர்.


பாளையங்கோட்டை சின்மயா வித்யாலயா குழந்தைகளின் பரத நாட்டியமும் கலை நிகழ்ச்சிகளும் மெச்சக் கூடியதாக அமைந்தன.

* கண்ணன் குழு நடனம்



* புனித பூமி நாடகத்தில் ஒரு காட்சி





* சின்னஞ் சிறுமியரின் பரத நாட்டியம்


இராஜபாளையம் N. A. அன்னப்பராஜா மேல்நிலைப் பள்ளியின் 'வீர வாஞ்சி' நாடகமும், விவேகானந்தர் நாடகமும் அனைவரது உள்ளங்களையும் கவர்ந்தன.

இராஜபாளையம் நர்சரிப் பள்ளியின் விவேகானந்தரின் சிக்காக்கோ ஆங்கில உரை நிகழ்ச்சி மெய்சிலிர்க்க வைத்தது.

ஸ்ரீவில்லிபுத்தூர் இந்து பெண்கள் மேல்நிலைப் பள்ளியின் மெய்ப்பொருள் நாயனார் நாடகமும், குழு நடனமும் அருமையாக அமைந்திருந்தன

மொத்தத்தில் இந்த நிகழ்ச்சிகள் தேசிய உணர்வு, கலைநேரக்கம், கல்விச் சிறப்பு, அறிவியல் ஆக்கம், இவைகளை இளம் உள்ளங்களில் வளர்ப்பதாக அமைந்திருந்தன. வானொலி 'அக்கா' செல்வி சீதாலெட்சுமி, நிகழ்ச்சி அமைப்பாளர் முத்து சண்முகம் ஆகியோர் முதல் நாளே வந்திருந்து நிகழ்ச்சிகள் சிறப்புடன் அமைய நன்கு பொறுப்பெடுத்துக் கொண்டனர். இந்தக் கலை விழா இராஜபாளையம் நகர மக்கள் மனத்திலிருந்து என்றும் நீங்காது நிற்கும் சிறப்பினைப் பெற்றுவிட்டது!

தொகுப்பு: கோ. குறளமுதன்



மூளைக் காய்ச்சல் என்ற நோயைப் பற்றி நாம் இப்போது அடிக்கடி கேள்விப்படுகிறோம்.

சமீபத்தில்கூட தமிழ்நாட்டில் வட ஆர்க்காடு, தென்னார்க்காடு மாவட்டங்களிலும், ஆந்திராவில் பல பகுதிகளிலும் 'மூளைக் காய்ச்சல்' என்ற நோய் பரவியதால் நூற்றுக்கும் அதிகமான குழந்தைகள் உயிரிழந்த செய்தியை, செய்தித் தாள்களில் படித்திருப்பீர்களே!

அக்கொடியநோய்பற்றியமருத்துவ உண்மைகள் உங்களுக்குத் தெரிய வேண்டாமா? அதற்காகத்தான் இக்கட்டுரை; படியுங்கள்.

'ஜப்பனீஸ்—பி' (Japanese-B) எனப்படும் ஒருவகை வைரஸ் கிருமிகளால் வரக் கூடியது மூளைக்காய்ச்சல் நோய். இதை ஆங்கிலத்தில் 'Brain Fever' என்றும், மருத்துவத் துறையில் 'என்செபலைட்டிஸ்' (Encephalitis) என்றும் அழைக்கிறார்கள்.

இந்நோய் ஆண், பெண், சிறுவர், இளைஞர் முதியோர் என்று அனைவரையும் தாக்கக் கூடியதுதான் என்றாலும், பெரியவர்களைக் காட்டிலும் குழந்தைகளுக்கு நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக இருப்பதால், 15 வயதிற்குட்பட்ட குழந்தைகளை மட்டுமே பெரிதும் பாதிக்கிறது.

அதிலும் போதிய ஊட்டச் சத்து இல்லாத நிலையில் வளரும் குழந்தைகளுக்கும், சுத்தமும் சுகாதாரமும் இல்லாத இடங்களில் வசிக்கும் குழந்தைகளுக்கும், முறையாகத்தடுப்பு ஊசிகள் போட்டுக் கொள்ளாத குழந்தைகளுக்கும் மூளைக் காய்ச்சல் நோய் எளிதில் வந்துவிடும்.

மூளைக் காய்ச்சலை உண்டாக்கக் கூடிய வைரஸ் கிருமிகள் எங்கே இருக்கின்றன, தெரியுமா?

அசுத்தமான சேரிப் பகுதிகளிலும் பன்றிகள் வாழும் கிராமப் பகுதிகளிலும், சுத்தமில்லாத, ஜனத் தொகை மிகுந்த நகர்ப்புறங்களிலும் கண்ட இடங்களில் சாக்கடையும் கழிவு நீரும் தேங்கிக் கிடக்கிற இடங்களிலும் இந்நோய்க் கிருமிகள் மில்லியன் கணக்கில் வாசம் செய்யும்.

இவை மழைக்காலமான நவம்பர், டிசம்பர் மாதங்களில் பல்கிப் பெருகும். அதேசமயம், காற்று மண்டலத்தில் அதிக நாட்கள் உயிருடன் இருக்க முடியாமல் சேற்றிலும் சாக்கடையிலும் புரண்டு கொண்டிருக்கும் பன்றிகளின் உடம்பிலும், சில பறவைகளின் உடம்பிலும் புகுந்து அவற்றின் இரத்தத்தில் கலந்துவிடும். இச்சமயத்தில் சாக்கடையில் மிதந்து கொண்டிருக்கும் கொசுக்கள் அப்பன்றிகளைக் கடித்து இரத்தத்தை உறிஞ்சும்போது, வைரஸ் கலந்த



"ஏன் அப்பா! நீங்க கண்ணாடி போட்டிருக்கீங்க?"

"கண் சரியாத் தெரியல! அதனால...!"

"எனக்கும் ராத்திரி இருட்டில் கண் தெரியல. ஒரு கண்ணாடி வாங்கித் தாங்க!"

— மணியன் தர்மலிங்கம்.

பன்றிகளின் இரத்தம் கொசுக்களிடம் வந்துவிடுகிறது.

இந்த கொசுக்கள் பின்னர் சும்மா இருப்பதில்லை. பன்றியையும் கடித்துவிட்டு, போதாக்குறைக்கு, குழந்தைகளையும் கடிக்கிறது. அப்போது கொசுக்களின் வாயில் இருக்கும் வைரஸ் கிருமிகள் குழந்தைகளை ஒட்டிக் கொள்கின்றன.

ஒரு கொசு ஒருமுறை ஒரு குழந்தையைக் கடிக்கும்போது ஆயிரக்கணக்கான கிருமிகள் இரத்தத்தில் கலக்கின்றன. இவ்வாறு மேன்மேலும் குழந்தைகளைக் கொசு கடிப்பதால் அதிகமான வைரஸ்கிருமிகள் இரத்தத்தில் கலந்து, மூளையை அடைந்து, மூளைக் காய்ச்சலை உண்டாக்குகின்றன.

மூளைக் காய்ச்சல் நோயை அலட்சியப்படுத்தாமல் ஆரம்பத்திலேயே கண்டறிந்து மருத்துவம் செய்ய வேண்டியது மிக மிக அவசியம்.

குழந்தைக்கு வந்துள்ள நோய் மூளைக் காய்ச்சல்தான் என்பதை எப்படி அறிந்து கொள்வது?

நல்ல கேள்வி.

பாதிக்கப்பட்ட குழந்தைக்கு, திடீரென்று கடுமையான காய்ச்சல் வரும். தாங்க இயலாத அளவிற்கு, தலைவலி வரும். வாந்தி வரும்.

இவையெல்லாம் மூளையைத் தாக்கிய வைரஸ் கிருமிகள் அங்குள்ள நியூரான் என்ற நரம்பு செல்களை அரிப்பதால் வரக் கூடிய அறிகுறிகள்.

இச்சமயத்தில் மருத்துவரை அணுகாமல் சாதாரணக் காய்ச்சலாகத்தான் இருக்கும் என்று தப்புக் கணக்கு போட்டுக் கொண்டு வீட்டிலேயே இருந்துவிட்டால் ஆபத்துத்தான்!

காரணம் என்னவென்றால், காய்ச்சல் வந்த மறுநாளே வைரஸ் கிருமிகளின் தொடர்ச்சியான தாக்குதலை சமாளிக்கமுடியாமல் மூளையைச் சுற்றியுள்ள திரவத்தின் அழுத்தம் அதிகரிக்கிறது. இதன் காரணமாக, குழந்தைக்கு வலிப்பு வருகிறது. கண் பார்வை மங்குகிறது. சுய நினைவை இழக்கிறது. கைகால்கள் செயலிழந்து போகின்றன.

நோயின் அடுத்தகட்டமாக, வைரஸ் கிருமிகள் மூளையின் செல்களை அதிகமாகத் தின்று விடுவதாலும், மூளையின் மெல்லிய இரத்தக் குழாய்கள் வெடிப்பதாலும், மூளைக்குள் இரத்தக் கசிவு ஏற்பட்டு, குழந்தை மரணத்தின் பிடிக்குள் சிக்கிக் கொள்கிறது.

எத்தனை பரிதாபம் இது?

இன்னமும் கிராமங்களில் போதிய கல்வியறிவு இல்லாமையால் பாதிக்கப்பட்ட குழந்தைகளை உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லாமல், வீட்டு வைத்தியம், நாட்டு வைத்தியம் என்று பயன்படாத பல வைத்திய முறைகளைக் கையாண்டு நோயை முற்ற வைத்துவிடுகிறார்கள். இன்னும் சிலர் பேய் பிடித்துவிட்டதாக நினைத்து வேப்பிலை அடிக்கிறார்கள். இம்மாதிரியான மூடப் பழக்கங்களினால் தங்கள் குழந்தைக்கு நோயை முற்ற வைப்பதோடு மற்ற குழந்தைகளுக்கும் நோய் பரவுவதற்குச் சந்தர்ப்பங்களை அமைத்துக் கொள்கிறார்கள்.

இதனால்தான் மூளைக் காய்ச்சல் நோய் ஒரு பகுதியில் ஆரம்பித்துவிட்டால், பஞ்சில் பற்றிக் கொள்ளும் நெருப்புமாதிரிமிகவேகமாககுழந்தைகளிடம் பரவி விடுகிறது.

மூளைக் காய்ச்சல் நோயால் பாதிக்கப்பட்டவர்களைப் பிழைக்கச்

செய்யும் மருந்து இதுநாள்வரை கண்டு பிடிக்கப்படவில்லை. ஆனால், நோய் வராமல் தடுக்க நோய் எதிர்ப்புத் திறன் உண்டாக்கக் கூடிய மருந்தை மட்டுமே கண்டுபிடித்துள்ளார்கள்.

நம் துரதிர்ஷ்டம். அத்தடுப்பு மருந்து இந்தியாவில் இல்லை. வெளி நாடுகளில் கிடைக்கும் அம்மருந்தின் விலையோ அதிகம். அப்படியே கிடைத்தாலும், இந்தியாவில் உள்ள எண்பது கோடி ஜனங்களுக்கும் தடுப்பு ஊசி போடுவது என்பது முடியாத காரியம்.

எனவே மூளைக் காய்ச்சல் நோய் வராமல் இருக்க, கீழ்க்கண்ட தடுப்பு முறைகளைக் கையாள்வதே உசிதமானது.

— சுற்றுப்புறத்தைச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

— வீட்டைச் சுற்றிக் கழிவுநீர் தேங்கிக் கிடப்பதையும், சாக்கடைத் தண்ணீர் திறந்த வெளியில் ஓடுவதையும் தவிர்க்க வேண்டும்.

— வீதிகளில் திரியும் பன்றிகளை அப்புறப்படுத்த வேண்டும். நோய் பரவும் சமயத்தில் பன்றிகளை ஒழிக்கவும் தயங்கக் கூடாது.


— மருந்து தெளித்து, கொசுக்களை ஒழிக்க வேண்டும்.


— கொசுக்கடியிலிருந்து தடுத்துக் கொள்ள, கொசுவலை, மற்றும் சில வகையான கொசுவர்த்திகளை உபயோகிக்க வேண்டும்.

— இயன்ற அளவு குழந்தைகளுக்குச் சத்துள்ள உணவுகளைக் கொடுத்து நோய் எதிர்ப்புச் சக்தியை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

தன்னையும் தன் சுற்றுப்புறத்தையும் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் வைத்துக் கொள்ள வேண்டும் என்று ஒவ்வொருவரும் நினைத்துச் செயல்பட்டால், இந்த மூளைக் காய்ச்சல் என்ன, எந்த ஒரு நோயும் நம்மை அண்ட முடியாது என்பது மறுக்க முடியாத உண்மை!

ஓவியராகலாம்







இரண்டு ஆடுகள்
ஓவியர்:- S.K. ராமானுஜம் (ராமு)
ஒரு நாள் முனியன் சந்தையிலிருந்து இரண்டு ஆடுகளை விலைக்கு வாங்கிக் கொண்டு வந்தான்.
இரண்டு ஆடுகளும் சந்தோஷமாக.. வாழ்ந்தன.....
அதில் ஒரு ஆட்டிற்குத் திருட்டு எண்ணம் வந்து விட்டது...
அடுத்தவர் நிலத்தில் ஏன் நுழைகிறாய்?
கீரை திருடிச்சாப்பிடப் போகிறேன்...
ஹா.. ஹா..! திருட்டுத்தனமாகச்சாப்பிடுவது எவ்வளவு இன்பம்!
வயதான தோட்டக்காரக் கிழவனை ஏமாற்றித்தினமும் கீரையைத்திருடித்தின்றது
உடனே கிழவன்... ஆட்டைப்பற்றி..... முனியனிடம் கூறினான்.
முனியன் அந்த ஆட்டை மட்டும் கயிற்றில் கட்டிப் போட்டு விட்டான்.
நம் எஜமானருக்கு... துரோகம்செய்யாதே
இந்த கயிற்றைக்கடித்து என்னை எஜமானனுக்குத்தெரியாமல் அனுப்பிவிடு!
தன் பலத்தால் கயிற்றை அறுத்துவிட்டது
இனி என்னைப் பிடிக்கமுடியாது


அந்தப்பொல்லாத ஆடு பக்கத்து கிராமத்திற்கு ஓடி விட்டது.
இரண்டு ஆடுகளில்... ஒரு ஆடு ஓடிவிட்டதே! என்று முனியன் கவலையாக இருந்தான்.
ஒரு வாரமாகியும் அந்த ஆடு இன்னும் கிடைக்கவில்லையே!
பணக்கஷ்டத்திலே முனியன், தன் ஒரே ஒரு நல்ல ஆட்டையும் விற்று விடத்துணிந்து விட்டான்.
முனியன் ஒவ்வொரு... வீடாகச் சென்று.... ஆட்டை வாங்கிக் கொள்ளும்படி கேட்டான்.
கையில் ஒரு... பைசா கூட... இல்லையே...!
முனியன் கடைசியில் ஒரு கசாப்புக்கடைக் காரனிடம், நல்ல ஆட்டை விற்க விலை பேசிக் கொண்டி
அப்பொழுது ஒருவன் முனியனின் பொல் ஆட்டை இழுத்துக்கொண்டு வந்தா
உன்னுடைய ஆடு என் பயிர்களைத் தின்று விட்டது
ஆடு தான் கொழு, கொழு என்றிருக்கிறது இதுதான் வேண்டும்
திருடிச்சாப்பிட்ட என் உடலுக்குக் கடவுள் தண்டனை கொடுத்துவிட்டார்.

பிருந்தாவனக் கவியரங்கம்

வண்டும் காற்றும்

கரிய வண்டோ இரவில் தங்கக்
காட்டு மூங்கில் துளைத்தது!
இரவு கழித்து விடிந்த வுடனே
எழுந்து வண்டு பறந்தது!

வண்டு கடைந்த மூங்கில் துளையில்
வந்து காற்று வீசிற்று!
பண் நிறைந்த இனிய ஓசை
பாட்டுப் போலப் பிறந்தது!



அதனைக் கண்ட மனிதன் நன்றாய்
ஆய்ந்து புல்லாங் குழலையே
இதயம் குளிரக் கண்டு கொண்டான்
இனிய ஓசை எழுந்ததே!

காது குளிரச் செய்து நல்ல
களிப்பை ஊட்டும் குழலையே
ஓது வித்த ஆசிரியர்
உயர்ந்த வண்டும் காற்றுமே.

— எல்.டி.கே. ராஜா (12,170), சென்னை—18



எங்கள் வீட்டுத் தோட்டம்

எங்கள் வீட்டுத் தோட்டத்தில்
இருக்கும் மலர்கள் பலவாகும்
நன்றாய்க் காய்கள் கனிகளுமே
நாங்கள் பெறுவோம் தினம்தினமே

காலையில் பனியில் ஜொலிப்புடனே
கண்ணைக் கவரும் செம்மலர்கள்
மாலையில் மிக்க அழகுடனே
மகிழ்ச்சி தந்திடும் வெண்மலர்கள்

பந்தலில் தொங்கும் புடலையுமே
பாங்காய்ச் சமைக்க உதவிடுமே
தொந்தி பெருத்த சுரைக்காயும்
சுவைதரும் கூட்டாய் ஆகிடுமே!

நீரைப் பாய்ச்சித் தோட்டத்தில்
நித்தம் வளர்ப்பேன் செடிகளையே
நீயும் தோட்டம் தனைஅமைத்து
நிறையப் பயனைப் பெறுவாயே!

ந. இரமேஷ் குமார் (14613)
பட்டுக்கோட்டை



புதிய ஆண்டே வருக!

புதிய ஆண்டே வருக;
　பொன்னும் பொருளும் தருக!
மதியே, மானே, வருக;
　மங்களம் எங்கும் தருக!

பொன்னே பூவே, வருக;
　புதிய பொலிவினைத் தருக!
கண்ணே மணியே வருக;
　கருணை மழையைத் தருக!

வளியே, ஒளியே, வருக;
　வளத்தினை எங்கும் தருக!
அழகே அறிவே வருக;
　அனைத்து நலமும் தருக!

— ஏ.எஸ். உமா மகேஸ்வரி,
(13401), செட்டிகுறிச்சி.

தவளையார்

தவளையாரே, வாருங்கள்
　தாளம் போட்டுப் பாடுங்கள்
கவலையின்றி வாழுங்கள்
　கத்தி மழையை அழையுங்கள்



குளத்தங் கரையில் கூடுங்கள்
　கூடி ஆடிப் பாடுங்கள்
இளைத்த மீனைப் பாருங்கள்
　ஏப்பம் விட்டே உண்ணுங்கள்

நிலத்தில் தாவிக் குதியுங்கள்
　நீரில் நீந்திச் செல்லுங்கள்
தொலைவில் பகைவன் வருகையில்
　துளையில் பதுங்கி மறையுங்கள்

வீணாய் வாயால் கத்தாதீர்.
　விரும்பிப் பகையை அழைக்காதீர்
சாணச் சேற்றுப் பூச்சிகளைத்
　தாவிப் பிடித்து உண்ணுங்கள்

கல்லா இளைஞர் கூட்டங்கள்
　கல்லால் உம்மைத் தாக்கிடுவர்
நல்ல இனத்தில் பிறந்திட்டீர்
　நாளும் பொறுத்து வாழ்ந்திடுவீர்

— பி. முத்து வைரம் (13375)
சென்னை—81.

அந்தமானில் வாழ்கிறோம்



வங்கக் கடலின் மத்தியிலே
வளமாய் நாங்கள் வாழ்கின்றோம்
வானில் தோன்றும் பிறைபோல
வாழ்த்தி யருள வேண்டுகிறோம்


தென்னை மரமும் தென்பாக்கும்
தெவிட்டா இன்பக் கனிவளமும்
தேனும் மீனும் ஓடுகிற
தீவே அந்த மாணுக்கும்

சிறுவர் நாங்கள் கவிபாடும்
திறமை பெறவே முயலுகிறோம்
எங்கள் கடவுள் கணேசரை
என்றும் வாழ்த்தி வணங்குகிறோம்

— கே. சுப்பிரமணியன் (14854)
மக்காபாட், போர்ட்பிளேயர்.

கொடிது தம்பி!

தங்க சிவராசன்





நீண்டாமை கொடிது தம்பி!
   நல்ல நூல்களை நாளும்
நீண்டாமை கொடிது தம்பி!

வேண்டாமை கொடிது தம்பி!
   சான்றோர் நட்பு தன்னை
வேண்டாமை கொடிது தம்பி!

இல்லாமை கொடிது தம்பி!
   உயர் லட்சியம் ஒன்றேனும்
இல்லாமை கொடிது தம்பி!

கொல்லாமை கொடிது தம்பி!
   பொல்லாத சோம்பலை இன்றேனும்
கொல்லாமை கொடிது தம்பி!

தள்ளாமை கொடிது தம்பி!
   தீய பழக்கங்களைச் 'சீ'யெனத்
தள்ளாமை கொடிது தம்பி!

கல்லாமை கொடிது தம்பி!
   தாய்த் திருநாட்டைக் கைதொழக்
கல்லாமை கொடிது தம்பி!








சைக்கிள் வந்தது!

வி.ர. வசந்தன்



சுசீலாவுக்கு அழுகை அடக்க முடியாமல் வந்தது. அதையும் மீறிக் கொண்டு அப்பாவின் மீது ஆத்திரம் இன்னும் அதிகமாக வந்தது. அப்புறம் என்ன? அவளுந்தான் இரண்டு வருடங்களாக ஒரு சைக்கிள் வாங்கித் தரும்படி எத்தனை முறை அவரிடம் கேட்டுவிட்டாள். ஒவ்வொரு தடவையும் வயலில் அறுவடையானதும் வாங்கித் தருகிறேன் என்று சொல்வதும், பின் ஏதாவது ஒரு காரணத்தைக் கூறித் தட்டிக் கழிப்பதும் அவருக்கு வழக்கமாகப் போயிற்று.

சுசீலா தன்னுடைய கிராமத்திலிருந்து பள்ளிக்கூடம் போக சுமார் மூன்று நான்கு கிலோ மீட்டர்கள் நடக்க வேண்டும். அவள் வழக்கமாக அதிகாலையிலேயே எழுந்துவிடுவாள். தன்னுடைய பாடங்களை எல்லாம் படித்து முடித்துவிட்டு, அப்பாவிற்குக் காலை உணவை வயலுக்கு எடுத்துப் போவாள். வரும்போது, வழியிலுள்ள குளத்தில் குளித்துவிட்டுச் சமையலறைக் காரியங்களைக் கவனிப்பது போன்ற உதவிகளைச் செய்துவிட்டு, எட்டு மணிக்குள் பள்ளிக்குச் செல்லத் தயாராகிவிடுவாள்.

இவ்வளவு வேலைகளையும் செய்துவிட்டு காலையிலும் மாலையிலும் அவள் நடந்தே பள்ளிக்குச் சென்று படித்து வந்தாள். வகுப்பில் அவள் வெகு கெட்டிக்காரியாகவும் வகுப்பில் முதல் மாணவியாகவும் விளங்கியது அவள் பெற்றோருக்குப் பெருமையையும் மற்றவர்களுக்கு வியப்பையும் ஏற்படுத்தி இருந்தது.

அவளைப் போல கிராமத்தில் இருந்து வரும் பிள்ளைகள் மாட்டு வண்டியிலும், சைக்கிளிலுமே வந்தார்கள். அவளும் அப்பாவிடம் ஒரு சைக்கிள் வாங்கித் தரும்படி கேட்டுக் கொண்டே இருந்தாள்.

தன் மகளுக்கு எப்படியாவது ஒரு சைக்கிள் வாங்கிக் கொடுத்துவிட வேண்டும் என்ற ஆசை அவள் அப்பாவிற்கும் நிறைய இருந்தது. அவரைப் போல விவசாயத்தையே நம்பி இருப்பவர்களுக்கு ஒவ்வொரு தடவையும் ஏதாவது பிரச்னைகள் எழுந்துவிடும்.

சென்ற வாரம்தான் அறுவடை முடிந்தது. இந்தத் தடவை அப்பா எப்படியும் சைக்கிள் வாங்கிக் கொடுத்துவிடுவார் என்ற முழு நம்பிக்கையுடன் இருந்தாள் சுசீலா. தன் தோழிகளிடம்கூட தனக்குப் புது சைக்கிள் வரப் போவதைச் சொல்லிப் பெருமைப் பட்டுக் கொண்டாள்.

ஆனால் ஒரு வாரமாகியும் சைக்கிள் வரவில்லை. அவள் ஆசையோடு அப்பாவை அணுகி, “அப்பா, அறுவடைதான் முடிஞ்சு போச்சே, சைக்கிள் வாங்கித் தாங்கப்பா”

என்று கேட்டாள்.

அவளை ஏறிட்டுப் பார்த்த அப்பாவின் முகத்தில் இயலாமையும் வருத்தமும் கலந்த உணர்ச்சிகள் தோன்றின. ''சுசீலாக் கண்ணு, நான் எதிர்பார்த்த படி விளைச்சல் கிடைக்கல.... உர விலே வேறே ஏறிப் போச்சு. இப்ப உனக்குசைக்கிள்வாங்கிக்கொடுத்தா, அடுத்த விவசாயத்துக்கு அப்பா கிட்ட காசு இருக்காது. கடன் வாங்க வேண்டியதுதான். வீணாகக் கடன் படறதைவிட இருக்கறதை வச்சுச் சமாளிக்கணும். அதுதான் நல்லது'' என்றார் வழக்கம்போல.

சுசீலா ஏமாற்றத்துடன் அவரைப் பார்த்தாள். ''இந்தத் தடவையும் எனக்கு சைக்கிள் வாங்கித் தரமாட்டீங்களா?'' என்று கேட்டாள். அதற்குள் அவளுக்கு அழுகையேவந்து விட்டது.

''ஆமாம் சுசீலா. இப்ப சைக்கிள் வாங்க முடியாது. அடுத்த அறுவடையில் பார்க்கலாம்'' என்றார் அப்பா.

அவளுக்குக் கோபம் மட்டில்லாமல் வந்தது. ஒவ்வொரு தடவையும் இதே பாட்டைப் பாடுவது அப்பாவிற்கு வாடிக்கையாகப் போய்விட்டது. அவள் கோபத்தில் நிதானத்தை அடியோடு இழந்து போனாள்.

''ஏம்பா இப்படி வாங்கித்தரேன்னு சொல்லிச் சொல்லி ஏமாத்தறீங்க. ஒரேயடியா மாட்டேன்னு சொல்லிடுங்களேன். நான் பள்ளிக்கூடத்துக்குப் போனா என்ன, போகாட்டி என்ன.... என்னைப் பத்தி யாருக்குமே அக்கறை இல்லே.... ஒவ்வொருத்தி, 'அப்பா, இதை வாங்கித் தந்தாரு, அதை வாங்கித் தந்தாரு'ன்னு பெருமைப் படறப்ப நான் மட்டும் அதை எல்லாம் பார்த்து ஏங்கறதோட சரி...'' என்று அழுகையும் விம்மலுமாக வெடித்தாள் சுசீலா.

அவளுக்குச் சைக்கிள் கிடைக்காத ஏமாற்றத்தைவிட, தோழிகள் கேலியும் கிண்டலும் செய்வார்களே என்ற எண்ணமே மேலோங்கியது!

அவள் அழுது கொண்டே படுக்கைக்குப் போய்ப் படுத்துக் கொண்டாள். அம்மா வந்து சாப்பிட வரும்படி அழைத்தும், அவள் அன்று சாப்பிடப் போகவில்லை.

மறுநாள் காலையில் சுசீலா கண் விழித்து எழுந்தபோது, அப்பா வயல் வேலைகளுக்காகப் போய்விட்டிருந்தார். அவள் வழக்கம்போல, தன் கடமைகளை முடித்துக் கொண்டு, ஒரு பையில் அவருக்கு உணவு எடுத்துக் கொண்டு வயலுக்குப் போனாள்.

போகும்வழியில் அவர்களுக்கு ஒரு சிறு தோட்டம் இருந்தது. அதில், மா, பலா போன்ற பழ மரங்களை வைத்திருந்தார்கள். அந்தத் தோட்டத்திற்குள் அவளது அப்பா நிற்பதையும் இன்னும் இரண்டு மூன்று பேர் பெரிய பெரிய கோடரிகளால் பலாமரம் ஒன்றை வெட்டுவதையும் பார்த்துத் திகைத்தாள் அவள்.

உள்ளே போய் அப்பாவிடம் பையைக் கொடுத்துவிட்டு, ''என்னப்பா, பண்ணப் போறீங்க?'' என்று ஏதும் புரியாதவளாய்க் கேட்டாள்.

''ஒண்ணுமில்லம்மா.... அந்தப் பலா மரம் நாலஞ்சு வருஷமாக் காய்க்காமே இடத்தை அடைச்சுக் கிட்டு நிக்குது. அதை வெட்ட முடிவு பண்ணிட்டேன்'' என்றார் அப்பா.

அவளுக்கு அப்பா அந்த மரத்தை வெட்டுவது பிடிக்கவில்லை. ''காய்க்காட்டி என்னப்பா, எவ்வளவு பெரிய மரமா, அழகா இருக்குது! இதைப் போய் வெட்டுவானேன்?'' என்றாள்.


அவளைப் புன்னகையுடன் நோக்கிய அவர், ''சுசீலா, இந்த மரத்தை இதோட ருசியான பழத்துக்காகத்தானே வச்சிருந்தோம். ஆனால்,

ஒரு சொல்; பல பொருள்

''வேழத்தைத் தின்ற வேழத்தை வேழத்தால்அடித்துவேழத்தால்கட்டிய போது வேழம் கேட்ட நாகம் போல் பணிந்தது''

— இதில் வேழம் என்ற சொல்லுக்கு முறையே கரும்பு, யானை, மூங்கில், நாணல், இசை என்ற பொருள்களும் உள்ளன.

— வி.பி. மதியரசி (14639),
ஆவுடையாள்புரம்





காய்க்காமலே அது நிற்குது. அதனுலே தான் வெட்டிடலாம்னு முடிவு செய்தேன். மரத்துக்கு அதோட கனியாலே தான் பெருமை வருது. மரத்தாலே பழத்துக்குப் பெருமை இல்லே.... அது போலத்தான் பிள்ளைகளாலே பெற்ருேர் பெருமை அடையணுமே ஒழிய, பெற்ருேராலே பிள்ளைகள் பெருமை அடைய நினைக்கக் கூடாது. அப்படி வர்ற பெருமை நிலேச்சும் நிற்காது'' என்ருர்.

சுசீலாவுக்கு நேற்று இரவு, தான் அப்பாவிடம் எதிர்த்துப் பேசியது நினைவுக்கு வந்தது. 'ஒவ்வொருத்தியும் அப்பா வாங்கிக் கொடுத்த பொருட்களைக் கொண்டு வந்து பெருமைப் படறுங்க' என்று தான் பேசியதை மனத்தில் வைத்துத்தான் அப்பா சொல்கிருர் என்பது அவளுக்குப் புரிந்தது. தலே குனிந்து நின்ருள்.

அப்பா அவள் தோளில் அன்புடன் கையை வைத்து, ''நீ படிச்சு பெரியவளாகி ஒரு டாக்டராகவோ, பெரிய அதிகாரியாகவோ,வந்து நல்ல பெயர் வாங்கி அதனுலே நான் பெருமை அடையணும்.... அதை விட்டுவிட்டு என்னுலே, நான் வாங்கித் தர்ற பொருட்களாலே நீ பெருமையடைய நினைக்கக் கூடாது'' என்ருர்.

அவள் திரும்பி வரும்போது அப்பா சொன்னவைகளை நினைத்துக் கொண்டே வந்தாள்.

அந்த அதிகாலே நேரத்தில் வழக்கம் போல் குளத்தில் இறங்கி நீராடி முடித்தபோது அவள் உடலும் மனமும் புத்துணர்ச்சி பெற்றன. அவள் மனத்திலிருந்த கோபம் எல்லாம் எங்கேயோ பறந்தோடிவிட்டது.


அப்பா தன் மீது வைத்திருக்கும் அன்பை அவள் அறியாதவளல்ல. ஆனுலும், சைக்கிள் கிடைக்காத ஏமாற்றத்தில் அவரைப் புண்படும்படி பேசிவிட்டேனே என்று வருத்தப் பட்டாள்.

அன்று மாலே சுசீலா பள்ளிக் கூடத்திலிருந்து வீடு திரும்பியபோது புத்தம் புது சைக்கிள் ஒன்று அவள் வீட்டில் அவளுக்காகக் காத்திருந்தது!

வியப்பினுலும் மகிழ்ச்சியினுலும் ஒரு நிமிடம் திகைத்து நின்ற அவளுக்கு, அப்பா அவசரமாக அன்று காலே அந்தப் பலன் கொடாத பலா மரத்தை வெட்டியதன் காரணம் புரிந்தது. தனக்கு சைக்கிள் வாங்கவே அதை அவர் வெட்டி விற்றிருக்கிருர்!

அந்தப் புது சைக்கிளே ஆசையோடு பார்த்த சுசீலா, மனத்துக்குள் மரத்துக்குப் பெருமை தேடித் தரும் நல்ல கனியைப் போல, பெற்றவர்களுக்குப் பெருமை தேடித் தருவேன் என்று உறுதி கொண்டாள்.


உறுப்பினர் வரைந்த ஓவியங்கள்



அரவிந்த் 9214



எஸ். கனகராஜ் -1174




பி.கே. ராஜ்குமார் -2716



வெ. சந்திரசேகர் -5930




கே. நரசிம்மன் -7378



க. இராதாகிருஷ்ணன் -9822

ஜெர்மன் தேசக் கதை

குள்ள மோக்ரா



தமிழில்: எச். கிருஷ்ணமூர்த்தி

வெகு காலத்திற்கு முன்னால் துருக்கி நாட்டில் ஓர் அப்பாவும், பிள்ளையும் இருந்தனர். பிள்ளையின் பெயர் மோக்ரா. எல்லோரையும் போல உயரமாக வளராமல் அவன் குள்ளமாக இருந்தான். ஆகையால், ஊரார் அவனைக் 'குள்ள மோக்ரா, 'குள்ள மோக்ரா' என்று கூப்பிட்டுக் கேலி செய்தனர். அந்தக் கேலிக்குப் பயந்து அவன் வெளியே போவதையே நிறுத்தினான். வீட்டின் உள்ளேயே இருந்தான். பள்ளிக்கூடத்திற்குக் கூடப்போகவில்லை. ஆகவே, மோக்ராவிற்கு அறிவும் வளரவில்லை.

மோக்ராவின் சிறு வயதிலேயே அப்பா இறந்து போனார். அப்பா வாங்கின கடனுக்கு ஈடாக உறவினர்கள் அவனுடைய வீட்டைப் பிடுங்கிக் கொண்டனர். "உலகில் எங்கேயாவது போய்ப் பிழைத்துக் கொள்!" என்று சொல்லி அவனை விரட்டிவிட்டனர். அவன் கையில் ஒரு காசு கூட இல்லை. "அப்பாவின் சில சட்டைகளையாவது கொடுங்கள். நான் போய் விடுகிறேன்" என்று மோக்ரா கேட்டான்.

அப்பா வாட்டசாட்டமான ஆள். அவருடைய துணிகள் மிகவும் பெரியவை. கால் சட்டை நீளமாக இருந்தது. அதை வெட்டிச் சின்னதாக்கினான். அதன் இடுப்பு அகலமாக இருந்தது. பட்டையான ஒரு பெல்ட்டை அணிந்து, அதை இறுக்கினான். அப்பாவின் பட்டாக் கத்தியை அதில் சொருகிக் கொண்டான். நீல நிறக் கோட்டும், வெள்ளை நிறத்தலைப்பாகையும் அணிந்தான். தொளதொள வென்ற சட்டையுடன் ஒரு விசித்திர உருவமாக அவன் காட்சி அளித்தான். கையில் ஒரு நீண்ட தடியையும் எடுத்துக் கொண்டு அவன் புறப்பட்டான்.

மின்னுவதெல்லாம் பொன்னாகவும், வெளுத்ததெல்லாம் பாலாகவும் நினைக்கும் அவன் ஓர் ஒளிமயமான எதிர்காலத்தைத் தேடி நடந்தான். காடு, மலை, மேடு, பள்ளம் ஆகியவற்றைக் கடந்து உற்சாகமாகப் பயணம் செய்தான்.

மூன்று நாட்களுக்குப் பிறகு பள்ளிவாசல்களும், தூபிகளும் நிறைந்த ஓர் அழகிய ஊரைக் கண்டான். யாராவது தன்னை வரவேற்று உபசரிக்கமாட்டார்களா என்று எண்ணிக் கொண்டே நடந்தான். அப்போது ஒரு மாளிகையின் உள்ளே ஏராளமான பூனைகளும், நாய்களும் ஓடிக் கொண்டிருந்தன. அவற்றோடு மோக்ராவும் சேர்ந்து ஓடினான். ஒரு மூதாட்டியின் முன்னால் போய் நின்றான்.

மோக்ரா தன் பரிதாபமான கதையைச் சொல்லி, மூதாட்டியிடம் உதவி கேட்டான். அவனுடைய விசித்திர



"ஆமைக்கும், முயலுக்கும் நான் சொல்ற போட்டியை வச்சா ஆமை தான் ஜெயிக்கும்!"

"என்ன போட்டி?"

"தண்ணீருக்குள் அதிக நேரம் அமிழ்ந்திருக்கும் போட்டி!"

— மணியன் தர்மலிங்கம்.

உருவமும், வெகுளித்தனமான பேச்சும் அவளுக்குப் பிடித்திருந்தன. அவளுக்கு உதவி செய்ய வேறு யாரும் இருக்கவில்லை. ஆகவே, அவள் மோக்ராவைத் தன் வேலைக்காரனாக வைத்துக் கொண்டாள்.

பூனைகளையும், நாய்களையும் கவனித்துக்கொள்வதே மோக்ராவின் முக்கிய வேலை. அவற்றைக் குளிப்பாட்டுதல், உணவு கொடுத்தல், விளையாட்டுக் காட்டுதல், தூங்க வைத்தல் — இப்படி நாள் முழுதும் அவனுக்கு வேலை இருந்தது. உண்ண உணவும் தங்க இடமும் கிடைத்ததே என்று எண்ணி மோக்ரா சந்தோஷமாகத் தன் வேலைகளைச் செய்தான்.

சில நாட்கள் ஆனதும் பூனைகள் தொல்லை அளித்தன. மூதாட்டி மாளிகையில் இல்லாத நேரங்களில் அவை பிசாசு பிடித்த மாதிரி இங்குமங்கும் ஓடின; கண்ணாடி சாமான்களை உடைத்து அட்டகாசம் செய்தன. அவள் வீடு திரும்பியதும், அவை சாதுவாக மாறி அவளை வரவேற்றன. மாளிகையின் குழப்பங்களுக்கெல்லாம் காரணம் மோக்ராதான் என மூதாட்டி நம்பினாள். கோபமாக அவனைத் திட்டினாள். அது ஒரு வழக்கமாகவும் ஆகிவிட்டது.


அந்த வேலையில் தான் இனி நீடிக்க முடியாது என்பதை மோக்ரா உணர்ந்தான். வேறு வேலை தேட நினைத்தான். ஆனால், கையில் பணம் இருக்கவில்லை. "சம்பளம் தருகிறேன்" என்று மூதாட்டி அடிக்கடி சொன்னாளே தவிர, அந்த வார்த்தையைக் காப்பாற்றவில்லை. சல்லிக் காசு கூடக் கண்ணில் காட்டவில்லை. அவள் தனக்குச் சம்பளம் தரவே மாட்டாள் என்று மோக்ரா கருதினான்.

பூனைகள்தான் தொல்லை அளித்தனவே தவிர நாய்கள் எப்போதும் மோக்ராவிடம் அன்பாக இருந்தன. ஒருநாள் மூதாட்டி வெளியே போயிருந்தாள். ஒரு நாய்க் குட்டி மோக்ராவின் கால்சட்டையைப் பற்றி அவசரமாக இழுத்தது. அவன் அதைத் தொடர்ந்தான். மூதாட்டியின் படுக்கை அறைக்கு அது அவனை அழைத்துச் சென்றது.

அந்த அறைக்குள் இன்னொரு சின்னக் கதவு இருந்தது. அது எப்போதும் பூட்டப்பட்டே இருக்கும். தனது விலை உயர்ந்த பொருள்களை மூதாட்டி அங்குதான் வைத்திருக்க வேண்டும் என்று மோக்ரா யூகித்திருந்தான். அன்றைக்கு அந்தச் சின்னக் கதவு கொஞ்சம் திறந்திருந்தது. நாய்க் குட்டி அந்தச் சின்ன அறைக்குள் ஓடியது. மோக்ராவும் பின்னால் போனான்.

அதுதான் மூதாட்டியின் ரகசிய அறை. அங்கு பணம் இருக்கிறதா என்று மோக்ரா பார்த்தான். காணவில்லை. விதவிதமான பேழைகளும், அபூர்வமான கண்ணாடிச் சாமான்களும் காணப்பட்டன. ஓர் அழகான கண்ணாடிக் கிண்ணத்தை எடுத்தான். அது கைதவறிக் கீழே விழுந்து உடைந்தது. மோக்ராவுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. மூதாட்டி விஷயத்தை அறிந்தால், நிச்சயமாகத் தன்னை அடித்து நொறுக்கி விடுவாள் என்று அச்சப்பட்டான். அவள் திரும்புவதற்குள் மாளிகையை விட்டு ஓடிப் போகத் தீர்மானித்தான்.

'சம்பளம்தான் கிடைக்கவில்லை. பயணத்திற்கு உபயோகமாக ஏதாவது பொருள்களாவது கிடைக்குமா?' என்று அறை முழுதும் தேடினான். அப்போது விநோதமான ஒரு ஜதைக் காலணியையும், சிங்க முகம் செதுக்




கப்பட்ட கைத்தடியையும் கண்டான். கிழிந்து போன தன்னுடைய பழைய காலணியை உதறி எறிந்தான். புதிய காலணியை அணிந்தான். அந்தக் கைத்தடியையும் எடுத்துக் கொண்டு மோக்ரா தன் அறைக்குப் போனான். வழக்கப்படி கோட்டு, தலைப்பாகை, உடைவாள் ஆகியவற்றை அணிந்து கொண்டு நகர வாயிலை நோக்கி வேகமாக ஓடினான்.

இதுவரையில் மோக்ரா அவ்வளவு வேகமாக ஓடியதே இல்லை. கண்ணுக்குத் தெரியாத ஒரு சக்தி அவனைத் தாங்கிச் செல்வதைப் போலத் தோன்றியது. தான் ஓடவில்லை என்பதையும், காலணிகள் வேகமாகத் தன்னை எடுத்துச் செல்கின்றன என்பதையும் அவன் விரைவில் உணர்ந்தான். அவற்றை நிறுத்துவதற்காக ஏதேதோ செய்து பார்த்தான். அவை நிற்கவே இல்லை. ஒரு குதிரையிடம் சொல்லுவதைப் போல, ''ஓ.... ஓ..... ஓ...... நில்லு...... நில்லு........'' என்று கத்தினான். காலணிகள் நின்றன. மோக்ரா களைப்பு மேலிடத் தரையில் விழுந்தான். உறங்கிப் போனான்.

அவனுடைய அந்த அன்பு நாய்க்குட்டி கனவில் வந்தது. ''மோக்ரா! நீ அணிந்திருப்பது ஒரு மாயக் காலணி. பறக்கும் சக்தி உடையது. அதை அணிந்ததும் வலது காலைத் தரையில் ஊன்று. பிறகு உன்னை நீயே மூன்று முறை சுற்று. நீ எங்கே போக வேண்டும் என்பதை நினைத்துக் கொள். உடனேயே காலணிகள் உன்னை அங்கே சேர்த்துவிடும். மேலும், உன் கையிலுள்ள தடி ஒரு மாயக் கைத்தடி. மறைந்து கிடக்கும் புதையல்களை அது கண்டுபிடிக்கும். மூன்று முறை அது பூமியைத் தட்டினால் பொன் புதையலும், இரண்டு முறை தட்டினால் வெள்ளிப் புதையலும் அந்த இடத்தில் கிடைக்கும்'' என்று அந்த நாய்க்குட்டி பேசியது.

மோக்ரா துயில் நீங்கி எழுந்தான். கனவில் கண்டது உண்மைதானா என்று சோதித்துப் பார்க்க விரும்பினான். காலணியை அணிந்து கொண்டு மூன்று முறை சுற்றினான். அருகில் உள்ள ஒரு பெரிய நகரத்திற்குப் போக

இரு மடையர்கள்



ஓர் ஊரில் இரண்டு மடையர்கள் இருந்தார்கள். அவர்கள் ஒரு நாள் காரில் சென்று மலைப் பகுதியை அடைந்தனர். மலை அடிவாரத்திலே இறங்கிக்கொண்டு அங்கிருந்த பாதை வழியாக மேலே செல்ல விரும்பினர். கார் டிரைவரிடம், "நாங்கள் மேலே செல்கிறோம். மலைப்பாதை சரியாக இருந்தால், உன்னைக் கூப்பிடுகிறோம். நீ காரை மேலே எடுத்து வா" என்று கூறிவிட்டு அந்தப் பாதை வழியாகச் சென்றார்கள்.

மேல்பகுதியை அடைந்ததும் "ஏ டிரைவர், காரை எடுத்து வா" என்று ஒருவன் கத்தினான். டிரைவர் அசையவில்லை.

உடனே மற்றொருவன், "டேய் மடையா, இப்படிக் கூப்பிட்டால் அவன் காதில் விழுமா?" என்று கூறி, தன்னிடமிருந்த பைனாகுலர் மூலமாகக் கீழே பார்த்தான். டிரைவர் அருகில் தெரியவே, மிக மெதுவாக அவனை அழைத்தான். உடனே, தான் அழைத்தது டிரைவரின் காதில் விழும்; உடனே காரை எடுத்து வருவான் என்று எதிர்பார்த்தான் அந்த மடையன். கார் வரவே இல்லை!

— எஸ். துரை (11082)
தூத்துக்குடி — 2.

வேண்டும் என்று நினைத்தான். உடனே காலணி ஆகாய வழியாக அவனைச் சுமந்து சென்று ஜன நெரிசல் மிகுந்த ஒரு சந்தைக் கடையின் மையத்தில் இறக்கியது.

அது ஒரு பெரிய நகரம். கைத்தடியைச் சோதனை செய்து, புதையலைத் தேடத் தொடங்கினால், ஒருவேளை காலதாமதம் ஆனாலும் ஆகலாம். ஆகவே, காலணியின் உதவியால் செய்திகளை விரைவில் கொண்டு செல்லும் ஒரு தூதனாக முதலில் வேலை செய்யலாம் என்று தீர்மானித்தான். அரண்மனைக்கு வழிகேட்டு நடந்தான்.

அரண்மனையில் சிப்பாய்களின் தலைவனை அணுகி ஒரு வேலை கேட்டான். "உன்னுடைய குட்டைக் கால்களை வைத்துக்கொண்டு, நீ நத்தையைப் போல நகர்ந்து கொண்டிருப்பாய். போ! போ!" என்று தலைவன் அவனை விரட்டினான்.

மோக்ரா சோர்ந்துவிடவில்லை. "உங்களுடைய சிறந்த ஓட்ட வீரனுக்கு இணையாக நான் ஓடத் தயார். எனக்கு ஒரே ஒரு சந்தர்ப்பம் கொடுங்களேன், ஐயா!" என்று அவன் உறுதியோடு பேசினான்.

அந்த யோசனை தலைவனுக்கு மிகவும் புதுமையாகத் தோன்றியது. அந்த நாட்டு அரசருக்கு வேடிக்கையும், விளையாட்டும் மிகவும் பிடிக்கும். மோக்ராவை இளைப்பாறச் சொல்லிவிட்டுத் தலைவன் அவ்வாறே ஓர் ஓட்டப் பந்தயத்திற்கு ஏற்பாடு செய்தான்.

நகரத்தின் தலைசிறந்த ஓட்ட வீரனுக்கும் தற்பெருமை அடித்துக்கொள்ளும் ஒரு விசித்திரக் குள்ளனுக்கும் இடையே நடக்கப் போகும் பந்தயத்தைக் கண்டு களிப்பதற்காக மக்கள் அரண்மனை மைதானத்தில் திரண்டனர். அரசரும், குடும்பத்தினரும் விசேஷமாக அலங்கரிக்கப்பட்டிருந்த மேடையை அடைந்தனர்.

மோக்ரா மைதானத்தின் மையத்திற்கு வந்து எல்லோருக்கும் வணக்கம் செய்தான். அவனுடைய குள்ள உருவத்தையும், தொளதொளவென்று தொங்கும் ஆடைகளையும் கண்டு மக்கள் கொல்லென்று சிரித்தனர். அவர்

களுடைய கேலியை லட்சியம் செய்யாமல் மோக்ரா கைத்தடியை ஊன்றிக் கொண்டு கம்பீரமாக நின்றிருந்தான்.

மோக்ராவுடன் போட்டியிடும் பந்தய வீரன் வந்தான். இருவரும் தயாராக நின்றனர். பந்தயம் துவங்கியது. ஒரே வில்லிலிருந்து புறப்பட்ட அம்புகளைப்போல இருவரும் திடலின் குறுக்கே ஓடினர்.

ஓட்ட வீரன் முதலாவதாக வந்து கொண்டிருந்தான். ஆனால், பறக்கும் காலணியை அணிந்த மோக்ரா அவனை எட்டிப் பிடித்ததோடு அல்லாமல், காற்றாய்ப் பறந்து அவனைத் தோற்கடிக்கவும் செய்தான். அந்த அதிசயத்தைக் கண்டு நம்ப முடியாமல் பார்வையாளர்கள் திகைத்தனர். அரசன் கைதட்டிப் பாராட்டினான். உடனே மக்கள், "குள்ள மோக்ரா வாழ்க! வெற்றி வீரன் வாழ்க!" என்று உற்சாகமாக ஆரவாரம் செய்தனர்.

மோக்ரா அரசனிடம் அழைத்துச் செல்லப்பட்டான். "அரசே! என்னுடைய ஆற்றலின் ஒரு துளியை மட்டும் தான் இப்போது காண்பித்தேன். அரண்மனையில் எனக்கு ஒரு வேலை கொடுங்கள். உண்மையாக உழைப்பேன்" என்று அவன் வேண்டினான்.

"மோக்ரா! உன்னை எமது விசேஷ ராஜ தூதனாக நியமிக்கிறோம். அரசாங்க ஓலைகளை எடுத்துச் செல்வதே உன் வேலை. ஆண்டுக்கு நூறுபவுன் சம்பளம்!" என்றார் அரசர்.

நல்ல வேலை கிடைத்ததே என்று மோக்ரா சந்தோஷப்பட்டான். உண்மையாக உழைத்து அரசரின் அன்புக்குப் பாத்திரமானான். மோக்ராவைப் பார்த்து மற்ற வேலைக்காரர்கள் பொறாமைப்பட்டனர். வேகமாக ஓடுவதைத் தவிர வேறு எந்தத் தகுதியும் அவனுக்கு இல்லை என்பதை அவர்கள் விரைவில் புரிந்து கொண்டனர். ஆகவே, அவன் மீது அரசருக்கு இருந்த நம்பிக்கையைக் குலைக்க ஏதாவது காரியங்களைச் செய்து கொண்டே இருந்தனர்.

வெகுநாட்களுக்கு முன்னால் அந்த அரசருடைய அப்பா ஏராளமான பொன் காசுகளை எங்கோ ஓரிடத்தில் புதைத்து வைத்துவிட்டுத் திடீரென இறந்துவிட்டார். அந்த இடத்தைத் தன் மகனிடம் கூட அவர் சொல்லவில்லை. மோக்ராவுக்கு அந்தச் செய்தி கிடைத்தது. புதையல் கிடைத்தால், அதைத் தன் எதிரிகளுக்குப் பங்கிட்டுக் கொடுத்து அவர்களையும் தன் நண்பர்களாக மாற்றலாமே என்று அவன் எண்ணினான்.

அவ்வாறு யோசித்துக் கொண்டே மோக்ரா அரண்மனைத் தோட்டத்தில் நடந்து கொண்டிருந்தான். ஒரு மூலையை அடைந்ததும், மோக்ராவின் தடி தானாகவே மூன்று முறை தரையைத் தட்டியது. அந்த இடத்தைக் குறித்துக் கொண்டான்.

இரவு ஆனதும் கைத்தடியையும் மண்வெட்டியையும் எடுத்துக் கொண்டு மோக்ரா புதையலைத் தேடிப் போனான். நீண்ட நேரம் தோண்டிய பிறகு ஒரு குடம் நிறையப் பொற்காசுகள் கிடைத்தன. குடத்தை மேலே தூக்க முடியவில்லை. சட்டைப் பைகளில் காசுகளை நிரப்பிக் கொண்டான். பழையபடி புதையலை மூடி விட்டு வீடு திரும்பினான்.

தங்கக் காசுகளைத் தாராளமாக வாரி வழங்கினால், மற்ற வேலைக்காரர்களின் நட்பைப் பெற முடியும் என்று மோக்ரா அப்பாவித்தனமாக நம்பினான். அன்பளிப்புக்களை அதிகமாகக் கொடுக்கக் கொடுக்க அவர்களுடைய பொறாமையும் சந்தேகமும்தான் வளர்ந்தன. நட்பு மலரவில்லை.


"அப்பா! நான் பெரிய பிள்ளையா வளர்ந்த பிறகு...!"

"நாட்டுக்கு நல்லது செய்வாயா?"

அதில்லேப்பா! வேட்டிகட்டிக்குவேன்!"

— மணியன் தர்மலிங்கம்.





"பாடப் புத்தகத்தை எடுத்துப் படிக்க ஆரம்பித்தவுடன் தூக்கம் வந்துடும்னு சொன்னது தப்பாப் போச்சு!"

"ஏன்?"

"எங்க வீட்டில் யாருக்காவது தூக்கம் வரலேன்னு என்னோட பாடப்புத்தகத்தைஎடுத்துப்படிக்க ஆரம்பிச்சுடறாங்க!"

— மணியன் தர்மலிங்கம்.

மோக்ரா இல்லாத சமயத்தில் மற்ற வேலைக்காரர்கள் ஒன்று கூடி அரசரைச் சந்தித்தனர். மோக்ரா தாராளமாகத்தங்கக்காசுகளை வழங்குவதையும், அரண்மனையிலிருந்து திருடினாலொழிய அவன் அவ்வளவு தாராளமாக இருக்க முடியாது என்பதையும் அவர்கள் பக்குவமாக எடுத்துக்கூறினார்கள். "மோக்ராவைரகசியமாகத் தொடருங்கள்! கருவூலப் பணத்தைத் திருடினான் என்று தெரிந்தால் உடனே அவனைக் கைது செய்யுங்கள்!" என்று அரசர் ஆணையிட்டார்.

மோக்ராவின் பணம் தீர்ந்தது. மறுநாள் இரவு கொஞ்சம் தங்கக் காசுகளை எடுத்து வருவதற்காக வழக்கம் போல அவன் தோட்டத்திற்குப் போனான். ஆட்கள் தன்னைத் தொடருவது அவனுக்குத் தெரியாது. மோக்ரா தன் கோட்டுப் பைகளில் காசுகளை நிரப்பியதும், திடீரென ஆட்கள் தோன்றி,அவனைக்கட்டிப்பிடித்தனர். அரசரிடம் அழைத்துச் சென்றனர். மண்ணைத் தோண்டி அந்தக் குடத்தையும் வெளியே எடுத்தனர். மோக்ராவின் மண்வெட்டியும், பைகளில் காசு நிரப்பப்பட்ட கோட்டும் சாட்சியங்களாக வைக்கப்பட்டன.

கருவூலத்திலிருந்து காசுகளைத் திருடி அவற்றைப் புதைக்க முயன்றதாக மோக்ராவின் மீது குற்றம் சாட்டப்பட்டது. "எனக்கு ஒரு புதையல் கிடைத்தது அரசே! நான் எதையும் புதைக்க முயலவில்லை" என்று மோக்ரா உண்மையைச் சொன்னான். அவனுடைய பேச்சை யாரும் நம்பவில்லை.

கருவூலத்தைப் பாதுகாக்கும் அதிகாரி ஏற்கெனவே ஏராளமான தங்கக் காசுகளைத் திருடியிருந்தான். அதை எப்படிச் சமாளிப்பது என்று தெரியாமல் திண்டாடிக் கொண்டிருந்தான். மோக்ரா கைதான விஷயம் அவனுக்கு மிகுந்த நிம்மதியை அளித்தது. அவன் அரசரிடம் சென்று, "கருவூலத்திலிருந்து ஏராளமான தங்கக் காசுகள் களவு போயிருக்கின்றன, அரசே!" என்று சாட்சியம் சொன்னான்.

குடத்தில் இருந்த காசுகளை எண்ணிப் பழையபடி கருவூலத்தில் வைக்குமாறும், மோக்ராவைச் சிறையில் அடைக்குமாறும் அரசர் கட்டளையிட்டார். கைகால்களில் விலங்கிடப்பட்டு மோக்ரா பாதாளச் சிறையில் தள்ளப்பட்டான். சுவரில் தொங்கிய மற்றொரு சங்கிலியால் அவனுடைய கால்களை இணைத்துக் கட்டினர். மோக்ராவால் நகர முடியவில்லை.

அரசருடைய பணத்தைத் திருடுபவர்களுக்கு மரண தண்டனைதான் கொடுப்பது வழக்கம். தான் இருக்கும் நிலையில் மாயக் காலணியை உபயோகித்துத் தப்பிக்க முடியாது என்பதை மோக்ரா உணர்ந்தான். காலணியையும், கைத்தடியையும் வைத்துக் கொண்டே உயிரை விடுவதைவிட, அவற்றை விட்டுக் கொடுத்தாவது தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளத் தீர்மானித்தான். தன் கடைசி விருப்பமாக அரசரை ஒருமுறை காண வேண்டும் என்று வேண்டினான்.

மோக்ரா அரசரிடம் அழைத்துச் செல்லப்பட்டான். "அரசே! நீங்கள் என்னை மன்னித்து எனக்கு உயிர்ப்பிச்சை அளித்தால், உங்களுக்கு ஒரு ரகசியம் சொல்லுவேன்" என்றான். அரசர் ஒப்புக் கொண்டார். மோக்ரா மாயக் கைத்தடியின் மகிமையை உரைத்தான்.

அரசர் கைத்தடியை முறைப்படி சோதித்துப் பார்த்தார். மோக்ரா

கூறிய உண்மையும், கருவூல அதிகாரியின் பொய்யும் அரசருக்குப் புரிந்தன. சட்டப்படி அந்த அதிகாரிக்கு அவர் தூக்கு தண்டனை விதித்தார்.

பிறகு அரசர் மோக்ராவைப் பார்த்து, ''நீ அதிவேகமாக ஓடும் ரகசியம் என்ன? அதையும் சொல்லு!'' என்று உத்தரவிட்டார். மோக்ரா தன் காலணியின் சக்தியை அவருக்கு விவரித்தான்.


திடீரென அரசர் மனம் மாறி, ''இந்தக் காலணியையும், கைத்தடியையும் பறிமுதல் செய்கிறேன்! இவற்றைப் பாதுகாப்பாக கருவூலத்தில் வையுங்கள்! மோக்ரா, உன்னை நாடு கடத்துகிறேன்! நீ அடுத்த பன்னிரண்டு மணி நேரத்திற்குள் எல்லையைக் கடந்து வெளியேற வேண்டும்!'' என்று கட்டளையிட்டார்.

அரசர் இவ்வளவு மோசமாக நியாயமின்றி நடந்து கொள்வார் என்பதை எதிர்பாராத மோக்ரா மறுபடியும் ஏழையானான். நீண்ட நேரம் நடந்து எல்லையைக் கடந்தான். அடுத்த நாட்டில் அடர்ந்த காடு இருந்தது. ஏமாற்றமும், சோர்வும் ஆட்கொள்ள மோக்ரா ஓர் ஓடையின் கரையில் படுத்து உறங்கினான்.

எழுந்ததும் மோக்ராவுக்குப் பசித்தது. அருகில் இருந்த அத்தி மரத்தில் பழங்கள் . பழுத்துக் குலுங்கின. மோக்ரா அவற்றைப் பறித்துச் சாப்பிட்டான். நீர் அருந்துவதற்காக ஓடைக்குப் போனான். நீரில் பிரதிபலித்த தன் உருவத்தைக் கண்டதும் அவன் திடுக்கிட்டான். அவனால் அதை நம்ப முடியவில்லை. முறத்தைப் போன்ற பெரிய காதுகளும், தும்பிக்கையைப் போன்ற நீண்ட மூக்கும் அவனுக்கு முளைத்திருந்தன.

தன் தீவினையை எண்ணி அவன் அழுதான். பிறகு மனத்தைத் தேற்றிக் கொண்டு காடுகளில் சுற்றி அலைந்தான். மீண்டும் பசித்தது. அப்போது வேறொரு அத்தி மரத்தின் பழங்களைப் பறித்துச் சாப்பிட்டான். காதுகளும், மூக்கும் உடனே குறைந்தன. ஓடைக்குச் சென்று முகத்தைப் பார்த்தான். அவை பழைய உருவை அடைந்திருந்தன.





என்ன காரணம்?

அப்பா: ஏண்டா நகர்ந்து, நகர்ந்து உட்கார்ந்து எழுதுகிறாய்?

மகன்: நீங்கதான் வார்த்தைக்கு வார்த்தை இடம் விட்டு, விட்டு எழுதச் சொன்னீங்க?

— சு. சுரேஷ்.

முதல் மரத்தின் பழங்கள் தன் மூக்கையும் காதுகளையும் பெரிதாக வளரச் செய்ததையும், இரண்டாவது மரத்தின் பழங்கள் தன்னைக் குணப் படுத்தியதையும் 'மோக்ரா உணர்ந் தான். அந்த மாயப் பழங்களைப் பயன் படுத்தி அவன் மீண்டும் தன் வாழ்க்கையைத் தொடங்க எண்ணி னான். அதற்கு ஒரு திட்டம் வகுத்தான்.

அந்த இரண்டு மரங்களிலிருந்தும் பழங்களைப் பறித்துத் தனித்தனியாக மூட்டை கட்டினான். தன்னை நாடு கடத்திய அந்த அரசருடைய நாட்டுக்கே அவன் மறுபடியும் போனான். அடையாளம் தெரியாமல் இருப்பதற்காக ஒரு பிச்சைக்காரனைப் போல வேடம் புனைந்தான்.

அரண்மனைக்கு வெளியே பல சில்லறை வியாபாரிகள் விற்பனைக் காகத் தங்கள் பண்டங்களை வைத்துக் கொண்டு காத்திருந்தனர். ஒரு கூடை நிறைய அத்திப் பழங்களை எடுத்துக் கொண்டு, மோக்ராவும் அவர்களுடன் சேர்ந்து கொண்டான்.

பண்டங்களை வாங்குவதற்காக அரண்மனை சமையல்காரன் வெளியே வந்தான். மோக்ராவின் கூடையில் புதிய அத்திப் பழங்களைக் கண்டான். "ஆ, இது அரசருக்குப் பிடிக்குமே!" என்று சொல்லி, ஒரு விலை பேசி, அவற்றை வாங்கிக் கொண்டான். பணத்தைப் பெற்றுக் கொண்ட மோக்ரா ஊரின் மறுகோடிக்கு விரைந் தான். அரசருக்கும், குடும்பத்தின ருக்கும் மூக்கும், காதுகளும் வளரும் போது, அவன் அரண்மனை அருகில் இருக்க விரும்பவில்லை.

அரசர், அரசி, இளவரசர்கள், இளவரசிகள், அனைவரும் வட்டமாக அமர்ந்து, உற்சாகமாக உரையாடிக் கொண்டிருந்தனர். உணவு பரிமாறப் பட்டது. ஒரு கூடை அத்திப் பழமும் மேசை மீது வைக்கப்பட்டது. எல் லோரும் போட்டி போட்டுக்கொண்டு அந்த அத்திப் பழங்களைச் சாப்பிட் டனர்.

திடீரெனச் சின்ன இளவரசன், "அப்பா! அப்பா! உங்களைப் பார்க்க ரொம்ப வேடிக்கையாக இருக்கிறது!" என்று கத்தினான். எல்லோரும் ஆச் சரியத்தோடு அரசனை நோக்கினர். அவருடைய தலையில் முறம் போன்ற இரண்டு பெரிய காதுகள் அசைந்தன. மூக்கு நீண்டு வளர்ந்து முகவாய்க் கட்டைக்கும் கீழே தொங்கியது! அதிர்ச்சியும் பயமும் ஆட்கொள்ள அவர்கள் ஒருவரை ஒருவர் நோக்கி னர். அந்தப் பழங்களைச் சாப்பிட்டுக் கொண்டிருந்த அனைவருக்கும் பரந்த காதுகளும், நீண்ட மூக்கும் முளைத் திருந்தன!

அரண்மனை மருத்துவரை அழைத்து வந்தனர். அவர் சூரணங்களையும் மாத்திரைகளையும் அளித்தார். பலன் இல்லை. சின்ன இளவரசனுக்கு அறுவை சிகிச்சை செய்தார். ஒரு காதை அறுத்து அப்புறப்படுத்தியதும் மறுபடி உடனே அது பெரிதாக வளர்ந்தது.

ஊரின் மறுகோடியில் இருந்து கொண்டே மோக்ரா அரண்மனை விஷ யங்களைக் கேட்டு அறிந்தான். ஒரு பொய்த் தாடியை வாங்கிக் கட்டிக் கொண்டு, மருத்துவரைப் போல வேடத்தை மாற்றிக் கொண்டான். குணப்படுத்தும் அத்திப் பழங்களை ஒரு பையில் எடுத்துக்கொண்டு அவன் அரண்மனைக்குப் போனான்.

''நான் அயலூரிலிருந்து வருகிறேன். என்னிடம் அபூர்வ மூலிகைகள் உள்ளன. உங்களுக்கு ஏதாவது வேண்டுமா?'' என்று கேட்டான். சின்ன இளவரசன் அங்கே வந்தான். அவனுக்கு ஓர் அத்திப் பழத்தை அளித்துக் குணப்படுத்தினான். காதும், மூக்கும் வளர்ச்சி அடைந்து அவதிப்படும் பல பேர்கள் மோக்ராவிடம் ஓடி வந்து உதவி பெற்றனர்.

அரசருக்கும் செய்தி எட்டியது. காதும் மூக்கும் வளர்ந்த பிறகு அவர் அவமானத்தால் குன்றிப் போயிருந்தார். தன் சொந்த அறையிலேயே எப்போதும் அடைந்து கிடந்தார். வெளியில் வரவே இல்லை. ஆகவே, அயலூர் மருத்துவரைத் தன் அறைக்கு வரச் செய்தார். உடனே, தன்னைக் குணப்படுத்தும்படி உத்தரவிட்டார்.

மோக்ரா கொஞ்சம் தயங்கினான். அரசர் அவனுடைய கையைப் பற்றிக் கருவூலத்திற்கு அழைத்துப் போனார். ''எனக்கு நேர்ந்துள்ள இந்த அவமானத்தை என்னால் தாங்க முடியவில்லை. உடனே குணப்படுத்து. அதற்குப் பதிலாக இங்குள்ள செல்வங்களில் எதை வேண்டுமானாலும் நீ எடுத்துக் கொள்ளலாம்!'' என்று அவசரப்படுத்தினார்.

அறையில் இருந்த விலை உயர்ந்த செல்வங்களைப் பார்த்தவாறே மோக்ரா நடந்தான். ஒரு மூலையில் தன் மாயக் காலணியைக் கண்டதும், அதை அணிந்து கொண்டான். அருகில் இருந்த மாயக் கைத்தடியையும் கைப்பற்றினான். பொய்த் தாடியைப் பிய்த்து எறிந்துவிட்டு மோக்ரா தன் உண்மை முகத்தை அரசருக்குக் காண்பித்தான்.


''அரசே! கொடுத்த வாக்கை நீங்கள் தவறினீர்கள். உண்மையோடு நான் உங்களுக்கு ஆற்றிய உழைப்பையும், நன்றியையும் மறந்தீர்கள். ஆகையால் இந்தத் தண்டனை உங்களுக்குத் தேவைதான். உங்களுடைய காதும் மூக்கும் என்றென்றைக்கும் குள்ள மோக்ராவை உங்களுக்கு நினைவுபடுத்தட்டும்!'' என்று சொல்லிக் கொண்டே அவன் ஒரு காலை ஊன்றி மூன்று முறை சுழன்றான். தொலை தேசம் போக வேண்டுமென்று நினைத்தான். உதவிக்காக அரசர் ஆட்களை அழைப்பதற்குள் மோக்ரா மாயமாக மறைந்துவிட்டான்.

மோக்ரா தன் சொந்த ஊருக்கே போனான். சுகமாக வாழ்ந்தான். அனுபவங்களால் அவனது அறிவு முதிர்ந்திருந்தது. அவன் தனியாக வாழ்க்கை நடத்தினாலும், ஏழை எளியவர்களுக்கு இரங்கி, இன்முகத்தோடு உதவிகளைச் செய்தான். அதன்பிறகு ஊர் மக்கள் மோக்ராவைக் கேலி செய்யவே இல்லை. அவனிடம் ஏற்பட்ட மாற்றத்தைக் கண்டு வியந்தனர்.

டெல்லியில் நடைபெறும் 'அப்னா உத்ஸவ்' என்னும் நம் நாட்டு கலாசார விழாவில் தென் மண்டல கலை மையத்தின் சார்பில் தமிழ் நாட்டிலிருந்து பரத நாட்டியம் ஆடிய எட்டு வயதுச் சிறுமி லாவண்யா பார்ப்போரை அதிசயத்தில் ஆழ்த்தினாள். இந்தியா முழுவதிலிருந்தும் பங்கு பெற்ற 4000 கலைஞர்களுக்குள் லாவண்யாவே வயதில் மிகச் சிறியவள். கலைமாமணி கே.ஜே. சரஸாவின் மாணவி. கோவை அவிலா கான்வெண்டில் நான்காவது வகுப்பு படிக்கிறாள்.



பழமொழிப் புதிர்





மேலே இரு படங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு படமும் ஒரு பழமொழியை நினைவூட்டுகின்றது. பழமொழிகள் நினைவுக்கு வருகின்றனவா?

விடை: 96ஆம் பக்கம்.

புதுப் பையன்

பொன் வண்ணன்

முத்தையனிடம் பேசிக் கொண்டிருந்த சேகர், ''புதுப்பையா'' என்று யாரோ அழைப்பதைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். மாணிக்கம் நின்று கொண்டிருந்தான்

''உன்னைத்தான்... இங்கே வா'' என்று அதிகாரக் குரலில் மீண்டும் அழைத்தான் மாணிக்கம். அவன் அப்படி அழைத்த விதத்தை விரும்பாத சேகர், தன்னுடைய எதிர்ப்பை அவனுக்குத் தெரிவிக்க வேண்டுமென்றே அடிமேல் அடிவைத்து நடந்து அவனிடம் சென்றான்.

''நீதானே கோவையிலிருந்து வந்திருக்கும் புதுப் பையன்?'' என்று சர்வ அலட்சியமாக ஏதோ புழு பூச்சியைப் பார்ப்பது போல் பார்த்த மாணிக்கம், ''என்னைப் பற்றி நீ கேள்விப்பட்டிருப்பாயே...? நான்தான் மாணிக்கம். நானும் எட்டாவதுதான் படிக்கிறேன். என் அத்தை பையனுக்குத் திருமணம். வெளியூர் போயிருந்தேன். அதனால் தான் போன வாரம் முழுவதும் நான் பள்ளிக்கு வரவில்லை. உன்னைச் சந்திக்கும் வாய்ப்பும் ஏற்படவில்லை'' என்றான்.

வகுப்புக்கு வந்த அன்றே முத்தையன் சேகரிடம் மாணிக்கத்தைப் பற்றிக் கூறி எச்சரித்திருந்தான். முரட்டுத்தனத்துக்கும், பணக்காரத் திமிருக்கும் இலக்கணமாக விளங்கும் மாணிக்கத்தைப் பகைத்துக் கொண்டால், பெருந்தீங்கு நேரிடும் என்றும், அதனால் அவனிடம் தானே வலிய, அறிமுகப்படுத்திக் கொண்டு பணிந்து போகும்படியும் முத்தையன் சேகருக்கு அறிவுரை கூறியிருந்தான். அப்போது சேகர் அதை ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால், எதிரே மாணிக்கத்தைப் பார்த்ததும்தான் அதன் அவசியத்தை உணர்ந்து கொண்டான்.

''என்னடா இடிச்ச புளி மாதிரி பேசாம நிற்கிறே? என்னைப் பற்றி ஏற்கெனவே உன்னிடம் கூறியிருப்பார்களே? ஒருத்தரும் சொல்லலேன்னு நானே சொல்றேன் கேட்டுக்கோ. எங்கே என்னைப் பார்த்தாலும் சரி, முதலில் நீதான் வணக்கம் சொல்ல வேண்டும். நீ என்னைக் கவனிக்காவிட்டால் கூட நான் உன்னைக் கூப்பிடு



வேன். உடனே, நீ எனக்கு வணக்கம் சொல்ல வேண்டும். தெரிந்ததா?''—பென்சிலைச் 'சீவிக் கொண்டே அவனை ஏறிட்டுக் கூடப் பார்க்காது தன்னை அவன் நடத்த வேண்டிய முறைகளை விளக்கிக் கொண்டே போனான் மாணிக்கம்.

''அப்படிச்செய்யமறுத்தால்என்ன செய்வாய்?'' என்று மிகவும் அமைதியாகக் கேட்டான் சேகர்.

சேகரைக் கோபத்தோடு நோக்கினான் மாணிக்கம்.

''இதுவரை யாருமே என்னிடம் இந்த மாதிரி குறுக்குக் கேள்வி கேட்டதே கிடையாது. வேறு யாராவது இருந்தால் இப்பொழுது நடப்பதே வேறாக இருக்கும். ஆனாலும், நீ புதுப் பையன். உனக்கு இன்னும் என்னைப் பற்றி எதுவுமே தெரியாது என்பதால் மன்னிக்கிறேன். எங்கப்பா பெரிய வெல்ல மண்டி முதலாளி. அவருக்கு நான் ஒரே பையன். இந்த ஊரில் பாதித் தெருக்களுக்கு மேல் எங்களுடையது. நீங்கள் குடியிருக்கும் வீடு கூட எங்களுடையதுதான். நீ எனக்குப் பணிந்து நடக்கவில்லையென்றால், உடனே வீட்டைக் காலி பண்ணும்படி இருக்கும். இன்னொரு வீடு உங்களுக்கு இந்த ஊரில் குடியிருக்கக் கிடைக்காது. வீட்டிலும் சரி, பள்ளியிலும் சரி, நான் வைத்ததுதான் சட்டம்.''

இரவல் கேட்பதா?

பெரியவர்: தம்பி, உன் மூக்கு ஒழுகுது பார்... கைக்குட்டை ஏதும் வச்சிருக்கியா...?

சிறுவன்: வச்சிருக்கேன்... அதையெல்லாம் இரவல் கேக்காதீங்க சார்!

— கிரிஜா மாமி.



சேகர் மௌனமாக நின்று கொண்டிருந்தான். மாணிக்கத்திற்கு என்ன பதில் கூறுவது என்று அவனுக்கு விளங்கவில்லை.

''என்னுடைய பகையைத் தேடிக் கொண்டால், தேர்வு எழுதும் நேரத்தில் உன்னுடைய குறிப்பேடுகள் காணாமல் போய்விடும். நீ தினமும் போட்டுக் கொண்டு வரும் சட்டையில் அடிக்கடி அழிக்க முடியாத மையும், நீ தினமும் கொண்டு வரும் சாப்பாட்டில் கல்லும் மண்ணும் கலந்து போகும்! சரி... ஒரு முக்கியமான சேதியைக் கூற மறந்து விட்டேனே...? சற்று முன்பு உன்னுடன் பேசிக்கொண்டிருந்தானே...?' என்று இழுத்தான்.

''ஆமாம். முத்தையனைத்தானே குறிப்பிடுகிறாய்...? அவனுக்கென்ன..?' என்று கேட்டான் சேகர்.

''அவனைக் கூப்பிட வேண்டுமானால் 'சொட்டையன்' என்றுதான் கூப்பிட வேண்டும்.''

சேகர் மீண்டும் திகைப்புக்கு ஆளானான்.

''என்னுடைய பகையைத் தேடிக் கொண்டவன் அவன். என்னை மதிக்காமல் ஒரு முறை வணக்கம் சொல்லாமல் போய் விட்டான். அதற்கு அவன் மன்னிப்புக் கேட்க மறுத்தான். அதனால்தான் அவனுக்கு அந்தப் பெயரை வைத்தேன். அவனுக்குப் பின் தலையில் சொட்டை இருக்கும். அதைமறைக்கத்தான்நீண்டமுடிவைத்திருக்கிறான். அதைக் காரணமாக வைத்துத்தான் அவனுக்கு அந்தப் பெயரை வைத்தேன். நான் பெயர் வைத்தால் வைத்ததுதான். பள்ளியில் எல்லோரும் அவனை அந்தப் பெயரில்தான் அழைக்கிறார்கள். சொந்தப் பெயரில் அழைத்தால் யாருக்குமே தெரியாது. அந்த அளவுக்கு அது நிலைத்து விட்டது'' என்று தன்னுடைய பெருமையை அளந்து கொண்டே போனான் மாணிக்கம்.

சேகருக்கு அதற்குமேல் பொறுக்கவில்லை.

''இது அநியாயம் மாணிக்கம். ஒருவருடைய உடற்குறையைப் பழிப்பது இறைவனையே பழிப்பது போலாகும். இது பெரிய பாவம்.''

''இதோ பார், நீ புதுப்பையன்

என்பதால் இதையெல்லாம் உனக்கு விளக்குகிறேன். இல்லாவிட்டால் நடப்பதே வேறு. என் பேச்சுக்குக் கட்டுப்பட்டு நீயும் அவனை 'சொட்டையன்' என்றே கூப்பிட வேண்டும்'' என்று உறுமினான் மாணிக்கம்.

''மறுத்தால் என்ன செய்வாய்?'' என்று துணிவோடு கேட்டான் சேகர்.

''என்னை மதிக்காதவர்களுக்குத் தண்டனையாக ஒரு பட்டப் பெயரைச் சூட்டுவது என்னுடைய வழக்கம். அப்படித்தான் முத்தையன் 'சொட்டையன்' ஆனான். அதேபோல உன் பெயரையும் 'யானைக்காதன்' என்று மாற்றிவிடுவேன். பிறகு சேகர் என்றால் யாருக்கும் தெரியாது. 'யானைக்காதன்' என்று கூறினால்தான் தெரியும்.''

எல்லோரும் 'யானைக்காதா' என்று சேகரை அழைப்பது போலவும், பள்ளி விழாவில், விழாத் தலைவர் அவன் பெயரைச் சொல்லிப் பரிசு பெற அழைப்பது போலவும், 'அவன் பெயர் சேகர் இல்லை சார். யானைக் காதன் சார்' என்று கூக்குரலிட்டு மாணவர்கள் கேலி செய்வது போலவும், சேகர் பரிசு பெற்ற மகிழ்ச்சியை இழந்து, கேலிக்காளாகிவிட்டோமே என்று கூசித் தலைகுனிவது போலவும் மாணிக்கம் அப்போதே கனவு காணத் தொடங்கினான்.

''இதோ பார், நீ அவனை 'சொட்டையன்' என்று கூப்பிட்டுக் கேலி செய்ய வேண்டும் என்று நான் உன்னைக் கட்டாயப்படுத்தவில்லை. சொந்தப் பெயரை வைத்து அவனைக் கூப்பிடக் கூடாது. அவனுக்கு நேர்ந்துள்ள அதே கதிதான் உனக்கும்'' என்று தெளிவாக, ஆனால் உறுதியாகக் கூறி விட்டுச் சென்று விட்டான் மாணிக்கம்.

திகைத்து நின்றிருந்த சேகரை முத்தையனின் குரல்தான் நினைவு பெறச் செய்தது.

உடனே, ''முத்தையா'' என்று வாய் நிறைய அழைக்க விழைந்தான் சேகர். அதற்குள் மாணிக்கம் விடுத்த எச்சரிக்கை நினைவுக்கு வந்து அவனை வாயடைக்க வைத்தது. அவன் கண்கள் கலங்கின.

என்ன நடந்திருக்க வேண்டும் என்பதைப் புத்திசாலியான முத்தையன் ஊகித்துக் கொண்டு விட்டான்.

''என்னை முத்தையா என்று அழைக்கக் கூடாது. சொட்டையா என்றுதான் அழைக்க வேண்டும். இல்லாவிட்டால் உன்னுடைய பெயரும் மாற்றப்படும் என்று உனக்கு எச்சரிக்கை விட்டானா மாணிக்கம்?'' என்று சிரித்துக் கொண்டே கேட்டான் முத்தையன்.

சேகருக்கு அழுகை முட்டிக் கொண்டு வந்ததால், வாயைத் திறந்து பதில் கூற முடியவில்லை. கண்களில் நீர் பொங்க, 'ஆமாம்' என்று தலையசைத்தான்.

முத்தையன் அவனைப் பரிதாபமாகப் பார்த்தான்.

''சேகர், மாணிக்கத்தைப் பகைத்துக் கொள்வது புத்திசாலித்தனமல்ல. இந்த ஊரில் அவன் வைத்ததுதான் சட்டம். அவன் எதுவும் செய்யக் கூடியவன். மற்றவர்களெல்லாம் கூப்பிடுவது போல் நீயும் என்னை 'சொட்டையா' என்றே கூப்பிடலாம். அதற்காக நான் சிறிதும் வருத்தப்பட மாட்டேன்'' என்றான், முத்தையன். அவனுடைய குரல் தழுதழுத்தது.

''முன்பின் தெரியாதவர்களைக் கூட அவர்களது குறையைக் குறிப்பிட்டு இப்படி அழைக்கக் கூசுபவன் நான். ஒரு வாரப் பழக்கம்தான் என்றாலும், பல்லாண்டுகளாகப் பழகியதைப் போல் நீ உயிர் நண்பனாகி விட்டாய். பாதி ஆண்டு கழிந்த பிறகு வந்து சேர்ந்துள்ள எனக்கு, இந்த ஆண்டு தேறுவேன் என்ற நம்பிக்கையே இல்லாதிருந்தது. என்னைத் தேற்றி இந்த ஆண்டு இதுவரை ஆசிரியர் நடத்தியுள்ள பாடங்களுக்கான குறிப்புக்களைக் கொடுத்து, அதில் எனக்கு எழுந்த சந்தேகங்களைத் தீர்த்து நம்பிக்கை ஒளி ஊட்டி வரும் உன்னை நான் உன்னுடைய உடல் குறையைச் சுட்டிக் காட்டி அழைத்தால் அதை விட மனிதத் தன்மையற்ற செயல் வேறெதுவுமில்லை. அது நடக்கவே நடக்காது. பெயரிட்டு அழைத்தால் தான் நீ என்னை அடையாளம் கண்டு கொள்வாயா? என் குரலைக் கேட்டால் நான்தான் என்பதை உணர்ந்து திரும்பிப் பார்க்கமாட்டாயா?'' என்று கேட்டான் சேகர்.

''கண்டிப்பாக சேகர். உயிர் நண்ப

னின் குரலைக் கூட அடையாளம் கண்டு கொள்ள முடியாதவன் எப்படி உயிர் நண்பனாக இருக்க முடியும்?'' என்றான் முத்தையன்.

''எனக்கு இது போதும். ஆனாலும், இந்த மாணிக்கத்தை எப்படியாவது மாற்ற ஏதாவது முயற்சி செய்ய வேண்டும். இதை விட இந்த ஊர்ச் சிறுவர்களுக்கு நாம் செய்யும் நல்ல செயல் வேறெதுவுமே இருக்க முடியாது என்று நினைக்கிறேன்'' என்றான் சேகர்.

சேகர் நினைத்தது போல் மாணிக்கத்தின் மனத்தை மாற்றுவது அவ்வளவு எளிதாக இருக்கவில்லை. அவன் எதற்கும் பணியாத, மனம் இரங்காத அரக்க மனமுடையவனாக இருந்தான். முத்தையா என்று நண்பனை அழைக்க சேகர் துடித்தாலும் மாணிக்கம் விடுத்திருந்த எச்சரிக்கை அவன் வாயை அடைத்தது. அதற்காக அவன் முத்தையனை மாணிக்கத்தின் நண்பர்கள் கூப்பிடுவது போல் 'சொட்டையன்' என்று அழைக்கவில்லை. தொண்டையைக் கனைப்பான். முத்தையனின் கவனத்தைத் திருப்ப அதுவே போதுமானதாக இருந்தது.

மாணிக்கம் சேகரை அவ்வளவு எளிதில் விட்டுவிடத் தயாராக இல்லை. சேகர் முத்தையனை எப்படி அழைக்கிறான் என்பதைக் கண்காணிக்க அவன் தனது நண்பர்கள் பலரைப் பணித்திருந்தான். ஆனால், சேகர், ஒரு முறை கூட முத்தையனைப் பெயரிட்டு அழைக்காது கவனமாகத்தான் இருந்தான். ஆயினும், எவ்வளவு திறமையானவர்களும் தவறு செய்வது இயற்கைதானே? அப்படித்தான் தன்னை மறந்த ஒரு நிலையில் 'முத்தையா' என்று அவசரத்தில் அழைத்து விட்டான் சேகர். அதற்காகவே காத்துக் கொண்டிருந்த மாணிக்கம், 'யானைக் காதன்' என்ற பெயரை உடனே அவனுக்குச் சூட்டி, இனி அந்தப் பெயராலேயே எல்லோரும் அவனை அழைக்க வேண்டும் என்று தன்னுடைய நண்பர்களுக்கு உத்தரவு பிறப்பித்தான். வேலையிருந்தாலும் இல்லாவிட்டாலும் மாணிக்கமும் அவனது நண்பர்களும் நாளுக்கு ஒரு முறையாவது சேகரைத் தேடிக்கொண்டு வந்து,



எல்லோருக்கும் நடுவே .அவனை 'யானைக்காதா' என்று அழைத்து விட்டுப் போவார்கள். முதலில் சிறிது கலங்கினாலும், சேகர் நாளடைவில் அதற்காக மனம் வருந்துவதை நிறுத்திக் கொண்டான்.

அரையாண்டுத் தேர்வு முடிந்ததும் விடுமுறை தொடங்குவதற்கு முன்பு பள்ளியில் எல்லோரும் செஞ்சிக்கு உல்லாசப் பயணம் சென்றார்கள். தந்தைக்கு உடல் நலம் சரியில்லை என்று முத்தையன் வரவில்லை. சேகர் சென்றிருந்தான். மாணிக்கம் தன்னுடைய நண்பர்களுடன் கலந்து கொண்டிருந்தான்.

மாணிக்கமும் அவனது நண்பர்களும் செய்த கலாட்டா பஸ்ஸையே அதிர வைத்தது. வேண்டுமென்றே அவன் அடிக்கொரு முறை சேகரை, 'யானைக்காதா' என்று அழைத்துப் பேசியதை சேகர் மிகவும் பொறுமையோடு தாங்கிக்கொண்டான். கூடவே வந்த பள்ளி ஆசிரியர்கள் இதைக் கண்டுகொண்டதாகவே காட்டிக் கொள்ளவில்லை. மாணிக்கத்தைக் கண்டித்தால், தங்களுடைய நிலை என்னவாகும் என்பதை அவர்கள் நன்கு அறிந்திருந்தனர்.

செஞ்சியில் பகல் உணவை முடித்துக் கொண்ட மாணவர்கள், கோட்டை உச்சிக்கு ஏற ஆரம்பித்த போது பதினொரு மணியாகி விட்டது. அங்கே சுனைக்குச் செல்லும் வழியில் மாணிக்கம் ஒரு பாறையை வேகமாகத் தாண்டினான்., அப்போது அங்கிருந்த ஒரு முள் மரத்தின் கிளையில் அவன் சட்டை மாட்டிக் கொண்டது. வேகமாக இழுத்தான். விளைவு, 'டர்ர்ர்' என்று கிழிந்து விட்டது.

ஏழ்மை காரணமாகவோ, இல்லை, இம்மாதிரி திடீரென்று ஏற்பட்ட நிலை காரணமாகவோ கிழிந்த சட்டையோடு பள்ளிக்கு வந்த பல மாணவர்களை 'தபாலாபீஸ்' என்று மாணிக்கம் வாய் வலிக்க அழைத்து, அவர்கள் கண் கலங்குவதைக் கண்டு களித்திருக்கிறான். ஆனால், தானே இம்மாதிரியான ஒரு நிலைக்கு ஆளாவோம் என்பதை அவன் எதிர்பார்க்கவே இல்லை. இப்படிக் கேலி செய்வதற்கென்றே அவன் தயார் செய்து வைத்



"பக்கத்து வீட்டு மாமா செய்த உதவியை மறக்கவே மாட்டேன்னு சொன்னியே ஏண்டா?"

"ஆமாண்டா, நேற்று கல்யாண வீட்டிலே எனக்கு மட்டும் இரண்டு அப்பளம் போட்டாரே?"

— டி. எல். ரெட்டி.

திருந்த நண்பர் பட்டாளம் மாணிக்கத்திற்கேற்பட்ட நிலையைக் கண்டதும் தங்கள் வழக்கப்படி கேலி செய்யத் துடித்தது. ஆனாலும், அவன் அவர்களுடைய குரு அல்லவா? அதனால், மனத்தை மிகவும் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டார்கள். ஆனால், உல்லாசப் பயணமாக அவர்களைப் போலவே வந்திருந்த வேறொரு குழுவைச் சேர்ந்த மாணவர்கள் அவனை விடவில்லை.

"டேய், பார்த்தாயா! மலை உச்சியிலே கூட தேசிங்கு மன்னர் தபாலாபீஸ் வைத்திருக்கிறார்!" என்று கத்திக்கொண்டே மாணிக்கத்தின் கிழிந்த சட்டைப் பகுதியை இழுத்துப் பெரிதாக்கினான் ஒருவன். "இது நடமாடும் தபாலாபீசுடா" என்று அவனுடன் சேர்ந்து கொண்டார்கள் இன்னும் சிலர்.

தங்கள் ஊர் மாணவர்களாக இருந்தால் மாணிக்கம் அவர்களை ஒரு கை பார்த்திருப்பான். ஆனால், அவர்களெல்லாம் வேறு ஏதோ ஊரைச் சேர்ந்தவர்கள். அதுவும் அவர்களெல்லாம் அவனை விட வளர்ந்தவர்கள். அதனால், தன்னுடைய இயலாமையை எண்ணி மனம் நொந்து பேசாமலிருந்தான் அவன். வினாடிக்கு ஒரு முறை 'போஸ்டாபீஸ்' என்று அழைத்து அவனை அழ வைத்த அந்த மாணவர்கள் செயலைக் கண்டிக்க யாருமே முன்

பழமொழிப் புதிர் விடை:

புதிர் 3: கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை

புதிர் 4: ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்.

வராதது மாணிக்கத்திற்குப் பெரிய அதிர்ச்சியாக இருந்தது. அவன் தயார் செய்து வைத்திருந்த நண்பர்கள்கூட இப்பொழுது கலாட்டா செய்பவர்கள் தங்களைவிட வயதிலும் வளர்ச்சியிலும் பெரியவர்கள் என்பதை உணர்ந்து பெட்டிப் பாம்பாக ஆகிவிட்டிருந்தனர். மாணிக்கம் அவமானம் தாங்க முடியாமல், கண்களில் நீர் வழிய அவர்களோடு வந்து கொண்டிருந்தான்.

வழியில் ஒரு சிறு பாலம் வரும். அதைக் கடந்து விட்டால் எல்லோரையும் முன்னே போக விட்டுச் சிறிது நேரம் பொறுத்துப் போகலாம். இவர்களுடைய கண்களிலிருந்தும் தப்பித்துக் கொள்ளலாம்' என்று கணக்குப் போட்டான் மாணிக்கம். ஆனால், அவர்கள் அவனை விடவில்லை. அவன் எங்கெல்லாம் உட்கார்ந்தானோ, அங்கெல்லாம் அவர்களும் உட்கார்ந்தனர். உண்மையாகவே அவன் விசித்து விசித்து அழத் தொடங்கிவிட்டான். ஆனால், அதற்காக அவர்கள் அவனை விடுவதாக இல்லை.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டே வந்த சேகர், மாணிக்கம் படுகின்ற தொல்லையையும், அவன் அதைத் தாங்க முடியாமல் கண்ணீர் விட்டு அழுவதையும் கண்டு, அவனுக்காக இரங்கினான். தன்னைப் போன்ற மாணவர்களைப் படுத்தி வைத்த பாட்டிற்கு அவனுக்கு இதுவும் வேண்டும் இன்னமும் வேண்டும் என்று அவன் அவனுடைய நிலையைக் கண்டு மனம் களிக்கவில்லை. எந்த வகையிலாவது அவனுக்கு உதவ வேண்டும் என்று முடிவு செய்து கொண்டான்.

''மாணிக்கம், உன்னுடைய சட்டையைக் கழற்றிக் கொடு. என்னிடம் ஊசி நூல் இருக்கிறது தைத்துத் தருகிறேன்'' என்று சேகர் கூறியதும், நன்றிப் பெருக்கோடு அவனை நோக்கினான் மாணிக்கம்.

''நான் தைத்துக் கொடுக்கும்வரை என்னுடைய சட்டையைப் போட்டுக் கொண்டிரு'' என்று அவன் தன்னுடைய சட்டையைக் கழற்றிக் கொடுத்ததும், மாணிக்கம் திகைத்துப் போனான். தான் கழற்றிக் கொடுத்த கிழிந்த சட்டையைத் தைக்காமல், சேகர் தானே அணிந்து கொண்டு நடக்கத் தொடங்கியதும் மாணிக்கத்தின் திகைப்பு அதிகமாகியது.

''நான் வேண்டுமென்றேதான் இப்படிச் செய்தேன். என்னிடம் ஊசியும் இல்லை; நூலும் இல்லை. இவர்கள் என்னை எவ்வளவு கலாட்டா செய்தாலும், என்னால் தாங்கிக் கொள்ள முடியும். ஏனென்றால், உன்னுடைய கலாட்டாவுக்கு நான் நன்கு பழக்கப்பட்டவன். ஆனால் பாவம், உனக்கு இதெல்லாம் பழக்கமில்லை. அதனால் அழுதுவிடுகிறாய். இனிமேல் அவர்கள் உன்னைக் கலாட்டா செய்ய மாட்டார்கள். என்னைத்தான் கலாட்டா செய்வார்கள். அதனால் நீ நிம்மதியாக இருக்கலாம்'' என்றான் சேகர்.

''சேகர்'' என்று முதல் முறையாக வாய் நிறைய அழைத்த மாணிக்கம் அவனை அணைத்துக் கொண்டு விம்மினான். அவன் விட்ட கண்ணீர் சேகரின் முதுகை நனைத்தது. ''என்னுடைய இரும்பு மனத்தைக் கூட நீ இளக வைத்து என்னை மாற்றி விட்டாய். இனி நான் புது மாணிக்கம்'' என்று அவன் கூறியதைச் சுற்றி நின்றவர்கள் திகைப்போடு கேட்டனர்!

Printed and Published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Limited, at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600 032. Editor:- K. Rajendran

Editorial Office: 28, Fifth Street, Lake Area, Nungambakkam, Madras-600 034 (Phone: 473389)

Administrative Office: Race Course Road, Guindy, Madras-600 032 (Phones: 431543, 434157 Press: 434190)



தெ.பொ.மீனாட்சி சுந்தரனார்

தோற்றம்: 8-1-1901 மறைவு: 27-8-1980

REGISTERED No. TN MS (S) 281
Registered as a Newspaper in Srilanka

